# உதயன்

பக்கங்கள் - 28 விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :274 ஆவணி 14 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 30 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051


## பட்டப்பகலில் திருட்டு 10 பவுண் நகை அபேஸ்


யாழ்ப்பாணம், ஓக. 30
சங்குவேலி தெற்கு மானிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று 10 பவுண் 27

## சரவணபவன் உள்ளிட்ட 8 பேரை விசாரணையின்றி நீக்குங்கள்

**ஒற்றைக்காலில் நின்ற சுமந்திரன் கட்சியின் மத்திய குழு எதிர்ப்பு**

யாழ்ப்பாணம், ஓக. 30
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் 8பேரை விசாரணையின்றி கட்சியிலிருந்து நீக்க நடவடிக்கை 27

## ஈழத்தின் முதுபெரும் ஓவியர் ஆசை இராசையா மறைவு!



யாழ்ப்பாணம், ஓக. 30
ஈழத்தின் முதுபெரும் ஓவியராக அறியப்படும் ஆசை இராசையா நேற்று மாலை உயிரிழந்தார். அச்சுவேலி 27



## பிரதேசவாதத்தை கையிலெடுத்த சம்பந்தனுக்கு கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் வடக்கு, கிழக்கு பிரதேசவாதத்தைத் தூண்ட முயன்ற கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு, வடக்கு மற் 27

# தமிழரசுக் கட்சி கொதிப்பு: செயலருக்கு கடும் எதிர்ப்பு!

- மத்திய குழுவில் நேற்று கண்டனத் தீர்மானம்
- காத்திரமான முடிவெடுக்க விரைவில் பொதுச் சபையைக் கூட்ட முடிவு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 30
தேசியப் பட்டியல் விவகாரத்தில் தமிழ் அரசுக் கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் கூட்டுச் சதியில் ஈடுபட்டார் என்று தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நேற்றுக் குற்றம் சுமத்தப்பட்டது. அவருக்கு எதிராகக் கண்டனத் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அத்துடன் இது குறித்து தீர்க்கமான முடிவொன்றை எடுப்பதற்காகப் பொதுச் சபையை விரைவில் கூட்டுவதற்கும் முடிவு செய்யப்பட்டது. 27

## ரூ. 6 கோடி பெறுமதியான ஐந்தரை கிலோ தங்கத்துடன் அனலைதீவில் 2 பேர் கைது

திருட்டு நகைகளா என்ற கோணத்தில் விசாரணை

யாழ்ப்பாணம், ஓக. 30
யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு சட்டத்துக்குப் புறம்பாக கடல் வழியாக பெருந்தொகை தங்கத்தை கடத்த முற்பட்ட 27

## காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு இன்று போராட்டம்

**தமிழ்க் கட்சிகள் ஓரணியில் ஆதரவு!**

யாழ்ப்பாணம், ஓக. 30
காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வடக்கு கிழக்கில் இன்று பேரணிகள் மற்றும் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன. இன்று உலக காணாமல் ஆக்கப்பட்டோர் தினம். 27

கோப்புப்படம்



## தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேர் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 30
வரலாற்றுச் சிறப்பு மிக்க தெல்லிப்பழை 27

## மரம் முறிந்து வீழ்ந்தது வீதியால் பயணித்த இருவர் பரிதாபப் பலி



முல்லைத்தீவு, ஓக..30
முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர்கள் மீது மரம் 27

## இரண்டு டிப்பர்கள் மோதி எஸ்.ரி.எவ். சிப்பாய் சாவு

கிளிநொச்சி, ஓக. 30
கிளிநொச்சியில் நேற்று மாலை 4 மணியளவில் நடந்த விபத்தில் விசேட அதிரடிப்படைச் சிப்பாய் (எஸ்.ரி.எவ்.) உயிரிழந்தார். கிளி 27


செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி




AIA இன்ஷுவரன்ஸ் நிதியியல் ஸ்திரத்தன்மை - நிலையான சேவை.
ஓய்வூதியம், தேகாரோக்கியம் மற்றும் ஆயுள் காப்புறுதி
AIA இன்ஷுவரன்ஸ்
AIA HEALTHIER, LONGER, BETTER LIVES

# களேபரமானது தமிழரசு மத்திய குழுவின் கூட்டம்




இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலர் கி.துரைராஜசிங்கத்தைப் பதவியிலிருந்து அகற்றும் தீர்மானம் நிறைவேற்றப்படவிடாமல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் காப்பாற்ற, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் பெரும் இழுபறியில் முடிந்தது. செயலர் கி.துரைராஜசிங்கம் தேசியப்பட்டியல் நியமனத்தில் நடந்துகொண்ட விதம் பிழையானது. அவருக்கு எதிராகக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று நடந்தது.

**கண்டனத் தீர்மானம்**

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனத்தை, கட்சியின் தலைவருக்குத் தெரியாமல் செயலர் துரைராஜசிங்கம் வழங்கிய முறைமை தொடர்பில் ஆராயப்பட்டது.





செயலாளரின் சதி நடவடிக்கைக்கு ஒழுக்காற்று நடவடிக்கையெடுத்து அவரைப் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டுமென நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் அ.பரஞ்சோதி தீர்மானத்தை வாசித்தார். இதன்போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், மத்தியகுழுக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இந்தப் பிரேரணை இடம்பெறவில்லை. நிகழ்ச்சி நிரலில் இடம்பெறாத பிரேரணையை நிறைவேற்றுவது சட்டவிரோதமானது, செயலர் இந்த தீர்மானத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைக்குச் செல்லலாம் எனத் தெரிவித்து, செயலரைக் காப்பாற்றினார். இதையடுத்து, செயலர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை கண்டனத் தீர்மான மாக மாறியது.

**பிரதேச வாதம்**

அதேநேரம், தேசியப்பட்டியல் விவகாரத்தில் செயலர் நடந்து கொண்டது ஒரு சதி நடவடிக்கைக்கு ஒத்தது, அது சட்டவிரோதமானது என ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனினும், அம்பாறைக்கு நியமனம் வழங்கியதை எவரும் எதிர்க்கவில்லை. அந்த நியமனத்தை அனைவரும் ஆதரித்தனர். எனினும், நடந்துகொண்ட முறை சட்டவிரோதமானது. செயலரைக் காப்பாற்ற கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் முயன்றார்.

"செயலர் கிழக்கைச் சேர்ந்தவர். இந்தத் தீர்மானத்தை வடக்கிலுள்ளவர்கள் கொண்டு வருகிறீர்கள். இது பிரதேச வாதத்தைத் தூண்டலாம். அதனால் இதை இப்போதைக்கு நிறைவேற்றாமல் தவிருங்கள்'" என்று இரா.சம்பந்தன் கேட்டார். இது முழு மத்தியகுழுவையும் கொதிப்படைய வைத்தது. "இது பிரதேசவாதமல்ல. கட்சி ஒழுக்கம் சார்ந்தது. இப்படி கீழ்த்தரமாகச் சிந்திக்காதீர்கள். முதலில் உங்கள் கருத்தை மீளப்பெறுங்கள்" என எல்லோரும் கூட்டாக வலியுறுத்த, வெலவெலத்து போனார் சம்பந்தன்.

**சம்பந்தனுக்கு எச்சரிக்கை**

ஒரு கட்டத்தில், இளைஞரணியைச் சேர்ந்த பீற்றர் இளஞ்செழியன், "ஐயா நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத்தான் தலைவர். நாங்கள் உங்கள் வயதுக்கு மரியாதை தந்து பேசாமலிருந்தால் அனைத்துக்குள்ளும் மூக்கை நுழைக்கிறீர்கள். இது தமிழ் அரசுக்கட்சி பிரச்சினை. நீங்கள் பேசாமலிருங்கள். மைக்கை பக்கத்திலுள்ள தமிழ் அரசுக்கட்சி தலைவர் மாவையிடம் கொடுங்கள்" என்று கறாராகச் சொல்ல, சம்பந்தன் மேலும் வெலவெலத்தார். கூட்டத்தினர் இதை ஆமோதித்தனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோல்விக்கு ஒரேயொரு காரணம் இரா.சம்பந்தன் தான் என்று நேரடியாகக் குற்றம்சாட்டி, சம்பந்தன் மீதான குற்றச்சாட்டுக்களைப் பட்டியலிட்டார். அத்துடன், "கட்சியின் செயலரை மாற்றாமல், யாரும் கட்சிக் கூட்டம் என்று மன்னார் பக்கமே வரக்கூடாது" என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

சுமந்திரன் பேசும்போது, "கே.வி.தவராசா, ஈ.சரவணபவன், பிரதாப், வேலணைப் பிரதேசசபை உறுப்பினர் நாவலன், அவரது சகோதரன் குணாளன் உள்ளிட்டவர்களைக் கட்சியை விட்டு நீக்க வேண்டும்" என்றார். அப்போது ஒருவர் குறுக்கிட்டு "அப்படியானால் சுமந்திரன் குரூப்பை வைத்து தனியே கட்சி நடத்தப் போகிறீர்களா?" எனக் கேட்டார். பின்னர் ஈ.சரவணபவன் பேசும்போது, "சுமந்திரனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் குறிப்பிட்டு, அவரைக் கட்சியை விட்டு நீக்க வேண்டும்" என வலியுறுத்தினார். அத்துடன், 'உதயன்' பத்திரிகை தொடர்பான குற்றச்சாட்டுக்களை நிராகரித்து, தமிழ்த் தேசியத்துக்கு விரோதமானவர்களை, அது எந்தக் கட்சி சார்ந்தவர்கள் என்றாலும் பத்திரிகை விமர்சிக்கும். உதயன் பத்திரிகை விமர்சிக்கிறது என்று யாராவது தமிழ்த் தேசிய விரோதிகள் குற்றச்சாட்டு முன்வைத்தால், அதை நாம் கணக்கிலேயே எடுக்கமாட்டோம் என்று சுமந்திரனுக்குப் பதிலடி கொடுத்தார்.

**செயலருக்கு எதிர்ப்பு**

செயலர் துரைராஜசிங்கம் எழுந்து, வழக்கம் போல ஒரு குட்டிக்கதை, திருக்குறளில் அப்படி சொல்லப்பட்டுள்ளது என பேச ஆரம்பிக்க, அவரை ஒருமையில் சிலர் அழைத்து, "உமது கதையை நாம் கேட்க வரவில்லை. உம் மீது நடவடிக்கையெடுக்கவே கூட்டம். சத்தம் போடாமல் இரும்" என்று சத்தமிட்டனர். செயலாளர் கப்சிப் என உட்கார்ந்தார். கூட்டத்திலிருந்த ஒருவர் திடீரென, "செயலரை நீக்க ஆதரவளிப்பவர்கள் கையை உயர்த்துங்கள்'' என்றார். மேடையில் இருந்தவர்கள் தவிர, அரங்கிலிருந்தவர்களில் சுமந்திரன், அவரால் நியமனம் வழங்கப்பட்ட சாணக்கியன், குருநாதன் ஆகிய மூவரையும் தவிர மிகுதி அனைவரும் கையை உயர்த்தினர்.



கே.வி.தவராசா பேசும்போது சுமந்திரன் காலையில் ஒன்று, மதியத்தில் ஒன்று, மாலையில் ஒன்று என மாற்றி மாற்றி பேசுபவர், அவரது சிங்கள நேர்காணலில் சொல்லப்பட்ட விடயங்களைச் சுட்டிக்காட்டி, அது தவறானது, அதனால் கூட்டமைப்புக்கு ஏற்பட்ட வீழ்ச்சியைச் சுட்டிக்காட்டினார். ஆனால், அதன் விளக்கத்தில் திரிவுபடுத்தி பொதுமக்களுக்கு விளக்கமளித்ததையும் சுட்டிக்காட்டினார்.

மாவை.சேனாதிராசா பேசும்போது, "தமிழ்த் தேசியத்தை வீழ்த்த தெற்கு பின்னணியில் இயங்கும் ஊடகவியலாளர் ஒரு பத்திரிகையை நடத்திக் கொண்டு, தமிழ்த் தேசியத்துக்கு எதிராகச் செயற்படுவதை சுட்டிக்காட்டினார். அதில் சுமந்திரன் தொடர்புபட்டுள்ளார் என்று குற்றம்சாட்டினார். இதைச் சுமந்திரன் மறுத்தார். தனக்கும் அந்தப் பத்திரிகைக்கும் தொடர்பில்லை - என்றார்.

அதேபோல சுமந்திரனின் நெருங்கிய உறவினரும், அமெரிக்கன் மிசன் திருச்சபையைச் சேர்ந்தவருமான டி.பி.எஸ்.ஜெயராஜ் அண்மையில் தவறான தகவல்களுடன் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அந்த கட்டுரையில் அனேக தகவல் தவறுகள் இருந்தன. இதை பததிரிகை ஆதாரத்துடன் கூட்டத்தில் காண்பித்த மாவை, இப்படியான தவறான தகவல்களை கொடுத்து, தன்னைப்பற்றிய தவறான இமேஜை உருவாக்க சுமந்திரனே முயற்சிக்கின்றார் என குற்றம்சாட்டினார். டி.பி.எஸ் தனது நெருங்கிய உறவினர் என்பதை ஏற்றுக்கொண்ட சுமந்திரன், அவர் கட்டுரை எழுதியதற்கும் தனக்கும் தொடர்பில்லையென்றார்.

மொத்தத்தில் எந்தத் தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லையென்றபோதும், மாவை அணி மத்திய குழு விலும், கட்சிக்குள்ளும் தமது பலத்தை நிரூபித்துள்ளனர்.

*நன்றி : தமிழ் பக்கம்*

# அரச ஊழியர்கள் உட்பட அனைவருக்கும் வீடமைப்பு

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

**கொழும்பு, ஓகஸ்ட் 30**

**குறைந்த வருமானம் பெறுவோர், வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள், நடுத்தர வர்க்கத்தினர், அதிக வருமானம் ஈட்டுவோர் மற்றும் அரச ஊழியர்களை இலக்காகக் கொண்டு, எதிர்காலத்தில் வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.**

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் பத்தரமுல்லவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்திலேயே மஹிந்த இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நகர்ப் புறங்களில் மக்கள் குடியிருப்புக்காக ஒதுக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகள் எவருடைய தலையீட்டுக்கும் உட்பட்டு வணிக நிலையங்களுக்கு ஒதுக்கிக் கொள்ளாது இருக்கும் வகையில் பார்த்துக்கொள்ளும்படி இதன்போது பிரதமர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, எதிர்வரும் நான்கு மாதங்களில் 28 பில்லியன் ரூபாய் பெறுமதியிலான அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளது. கடந்த அரசு, முறையின்றி மேற்கொண்ட நியமனம் குறித்த செயற்பாடுகள் காரணமாக நஷ்டத்தை எதிர்நோக்கும் நிறுவனங்களாக மாறிய அனைத்து நிறுவனங்களும் எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர், இலாப மீட்டும் நிறுவனங்களாக மாற்ற உள்ளோம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறி நிமல் பெரேரா நம்பிக்கை வெளியிட்டார்.

அரசகாணிகள் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த வருவாய் 900 மில்லியன் ரூபாவாக காணப்பட்டபோதிலும் கடந்த அரசின் முறைகேடான நியமனங்கள் காரணமாக அதன் மாதாந்த செலவீனம், 166 மில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது என அமைச்சின் செயலாளர் குறிப்பிட் டார். நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கடந்த நான்கரை வருட காலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை 450 என்ற குறைந்த அளவில் காணப்படுவதாக இந்தக் கூட்டத்தில் வெளியானது. எதிர்காலத்தில் பிரதான நகரங்களை இலக்காகக் கொண்டு கொழும்பு, கண்டி, அநுராதபுரம், மாத்தறை, குருநாகல் போன்ற நகரங்களில் வாகனத் தரிப்பிடங்களை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கின்றோம் என நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

குடிசை வீடுகளில் வசிப்போருக்கு இலவசமாக வழங்க ஆயிரத்து 400 மாடி வீட்டுக் குடியிருப்புகள் புதிதாக நிர்மாணிக்கப்பட் டுள்ளதுடன், இந்த குடிசை வீடுகள் காணப்பட்ட இடத்தில் புதிய வீடமைப்பு திட்டங்களைச் செயற்படுத்த உள்ளோம் என பிரசாத் ரணவீர தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக, 608 நடுத்தர வர்க்க வீடுகள் அரச ஊழியர்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் 800 வீடுகளின் நிர்மாணப்பணிகள் 2021ஆம் ஆண்டில் நிறைவடை யும் வகையில் அரச ஊழியர்களுக்காக காத்துள்ளது. இந்த வீடமைப்பு திட்டங்களுக்கு மேலதிகமாக எந்தவொரு நபரும் விண்ணப்பித்து கொள்வனவு செய்யக்கூடிய வகையில் 3 ஆயிரத்து 300 வீடுகள் 10 திட்டங்களின் கீழ் எதிர்காலத்தில் நிர்மா ணிக்கப்ப டும் என்றும் அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ம)

# விக்னேஸ்வரனுக்கு ஏன் முன்வரிசையில் ஆசனம்

## ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு



கொழும்பு, ஓக. 30

முதன்முறையாக நாடாளுமன்றத்துக்கு தெரிவான சி.வி.விக்னேஸ்வரன், அலி சப்ரி ஆகியோருக்கு முன்வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி நேற்று நாடாளுமன்றத்தில் எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இது தொடர்பில் தெரிவித்ததாவது:

பல வருடங்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான சிரேஷ்ட எம்.பிக்களுக்கு பின்வரிசைகளில் இடம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் முதன்முறை தெரிவானவர்களுக்கு முன்வரிசையில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளமை அநீதியானது. ஒரு கட்சி சார்பில் வந்த ஒரேயொரு எம்.பிக்கு இவ்வாறு முன்வரிசை வழங்கினால் 40 தலைவர்கள் தெரிவானால் முன்வரிசையை புதிதாக அமைக்க நேரிடும். இதனை மாற்ற வேண்டும். ஆளும் தரப்பில் எஸ்.பி.திஸாநாயக்க, அநுர யாப்பா ஆகியோருக்கும் பின்வரிசை ஒதுக்கப்பட்டுள்ளது. அதனையும் சீர்செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்த் தரப்பு பிரதம கொரடா லக் ஷ்மன் கிரியெல்ல கூறுகையில், இது தொடர்பாக நாடாளுமன்ற செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சித் தலைவர் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்படும் என்றார். இது தொடர்பாக கவனம் செலுத்துகிறேன் என சபாநாயகரும் அறிவித்தார். (ம-இ)

# கட்சி முடிவை ஏற்காதோர் கட்சிக்குள் இருக்கமுடியா!

## முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 30

கடந்த ஜனாதிபதி தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்தோம். கட்சி முடிவை ஏற்காதவர்கள் எமது இயக்கத்துக்குள் இருக்க முடியாது என்று அதிரடியாக அறிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் மணிவண்ணன் தொடர்பான கேள்வி ஒன்றுக்குப் பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பகிஷ்கரிப்பை அறிவித்தோம். பகிஷ்கரிப்பை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எமது இயக்கத்துக்குள் இருக்க முடியாது. அது கொள்கை சார்ந்தது. எமது கொள்கையில் யாரும் கைவைக்க முடியாது. அப்படி கைவைக்க முயல்ப வர்கள் எமது கட்சிக்குள் இருக்க முடியாது. பூகோள அரசியலில், பேரம் பேசலுக்கான வாய்ப்பை உருவாக்காமல், அவை சாத்தியமில்லையென யாரும் கூறினால் அவர்களுக்கு எமது இயக்கத்துக்குள் இடமில்லை. ஒரு தேசம் இருநாடு, பூகோள அரசியல் சூழலில் கிடைக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதெல்லாம் எமது கொள்கைகள். அதைவிட மாற்று நிலைப் பாட்டை முன்வைப்பவர்கள் தாராளமாக வெளியில் சென்று, தமது கொள்கைகளுடன் ஒத்தவர்களுடன் சேர்ந்து இயங்கலாம். வெளியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, விக்னேஸ்வரன் தரப்பு, ஈ.பி.டி.பி, அங்கஜன் தரப்பு எல்லாம் அந்த நிலைப்பாட்டுடன் இருக்கிறார்கள். அவர்களுடன் சேர்ந்து செயற்படலாம்' என்றார். (ம-20)

# இலவச கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 30

கல்விப் பொதுத் தராதர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு கொழும்பு அருள் கல்வி வட்டத்தால் நடத்தப்பட்டு வருகின்றது. சட்டத்தரணி வே.தேவசேனாதிபதியின் அனுசரணையில் இந்தக் கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நேற்றையதினம் இந்தக் கருத்தரங்கு ஆரம்பமானது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இன்று, நாளை, நாளைமறுதினம் இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. (ம)

# அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி முன்னணி கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30

இலங்கை சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுறுமாறு வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னணியின் சட்ட ஆலோசகர் சுகாஷ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-25)



# உறவுகளின் போராட்டத்தில் தமிழர்களாக ஒன்றுபடுவோம்

## ஐங்கரநேசன் அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக.30



**தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நீதிகோரி நீண்டகாலமாக முன்னெடுத்துவரும் போராட்டத்தின் தொடர்ச்சியாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சர்வதேச தினமான இன்று முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் தமிழராக ஒன்றுபடுவோம் என்று அழைப்புவிடுத்துள்ளார் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன்.**

இது தொடர்பில் அவரால் அனுப்பப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
ஓகஸ்ட் 30ஆம் திகதி வடக்கிலும், கிழக்கிலும் போராட்டங்களையும் பேரணிகளையும் ஏற்பாடு செய்துள்ளனர். அவர்களின் வலிகளில் பங்கேற்கும் விதமாகவும், அவர்களின் போராட்டத்தை வலுப்படுத்தும் விதமாகவும், அசுரப்பலம் பெற்று எம்மை அடக்கிடத் துடிக்கும் பேரினவாத அரசுக்கு 'நாம் யார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்' என்று உரத்துச் சொல்லும் விதமாகவும் நீதிகோரிய இந்த நெடும் பயணத்தில் கட்சி வேறுபாடுகளைக் களைந்து தமிழராக நாம் ஒன்றுபட்டு அணிதிரள்வோம்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தைப் பயமுறுத்தி நசுக்குகின்ற ஒரு செயற்பாடாகப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களை அல்லது போராட்டத்துடன் தொடர்புபட்டவர்கள் எனச் சந்தேகிப்பவர்களைக் கடத்திக் காணாமல் போகச்செய்யும் நடவடிக்கைகளை இலங்கை அரச படைகள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ளன. அதன் உச்சமாக, வன்னிப்போரின் இறுதி நாட்களில் முள்ளிவாய்க்கா லில் உறவுகளால் படையினரிடம் கையளிக்கப்பட்ட ஏராளமானவர்களையும் அரச படைகள் காணாமற்போகச் செய்து விட்டிருக்கின்றன. பலர் பார்த்திருக்க இந்தக் கையளிப்பு நிகழ்ந்த போதிலும், கையளித்த உறவினர்கள் இன்னமும் நடைப்பிணமாக உலாவுகின்றபோதும் அவ்வாறு எதுவுமே நிகழாததுபோல காணாமற் போனோர் என்று எவருமே இலர் என்று அரசு எகத்தாளமாகப் பொய்யுரைத்து வருகிறது.

சர்வதேச மனித உரிமைச் சட்டங்களின்படி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளும் அவர்களின் சமூகமும் அதுபற்றிய உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்குரிய உரித்துகள் உடையவர்களாவார்கள். உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருப்பதால் மனோரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தபோதும் இடைவிடாது கடந்த பல வருடங்களாக நீதிகோரி இவர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்கள். இலங்கை அரசாங்கம் இந்த அபலைகளின் குரலை செவிமடுக்காத நிலையில் இவர்களுக்கான நீதியை விரைந்து பெற்றுத்தர சர்வதேச சமூகமே ஆவண செய்ய வேண்டும். அதற்கு ஏதுவாக சர்வதேசக் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் இன்று காலை 10 மணிக்கு வடக்கில் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகி யாழ். மாவட்டச் செயலகத்தை நோக்கி நகரும் பேரணியிலும், கிழக்கில் மட்டக்களப்பு கல்லடிப் பூங்காவில் ஆரம்பமாகி காந்தி பூங்காவை நோக்கி நகரும் பேரணியிலும் பல்லாயிரக்கணக்கில் நாம் பங்கேற்று போராட்டத்தை வெற்றிபெறச் செய்வோம் என்றுள்ளது. (ம)

# பத்திரிகையாளர் சங்கத்துக்கு அங்கத்தவர்களை இணைத்தல்

யாழ்ப்பாணம், ஓக. 30
இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்துக்கு 2020ஆம் ஆண்டுக்கான அங்கத்தவர்களை இணைத்துக்கொள்வது தொடர்பான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.
2020ஆம் ஆண்டுக்கான அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் புதுப்பிக்கும் செயற்பாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 30ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.
ஏற்கனவே சங்கத்தில் அங்கத்தவர்களாக இருப்பவர்களும் புதிதாக இணைந்துக்கொள்ள விரும்புவர்களும் குறித்த காலப்பகுதியில் தமது விண்ண ப்பங்களை அனுப்ப முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இன அழிப்பின் நீட்சியே இப்போதும் தொடர்கிறது

## முன்னணியின் சட்ட ஆலோசகர் கனகரட்ணம் சுகாஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 30
தமிழர் தாயகத்தைத் திட்டமிட்டுக் கபளீகரம் செய்கின்ற இலங்கை அரசினுடைய நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் நீட்சிதான் இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் மண்டைதீவில் பொதுமக்களின் காணியை கடற்படையினருக்கு சுவீகரிக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிராக முன்னெ டுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மக்களுடைய காணிகளைச் சுவீகரிக்கிகன்ற நடவடிக்கையில் இரண்டாவது நாளாகவும் மக்களுடன் சேர்ந்து எங்களுடைய ஆட்சேபனையைத் தெரிவித்து தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தியிருக்கின்றோம். உண்மையில் இந்தக் காணி சுவீகரிப்பு என்பதை கட்டமைபக்கப்பட்ட இன அழிப்பினுடைய நீட்சியா கத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.
தமிழர் தாயகத்தை திட்டமிட்டு கபளீகரம் செய்கின்ற இலங்கை அரசினுடைய நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் நீட்சிதான் இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.
இதற்கு நாங்கள் என்றைக்கும் தமிழ் மக்களுடன் இணைந்த எங்கள் ஆட்சேபனையையும் எதிர்ப்பை யும் வெளிப்படுத்திக்கொண்டே இருப்போம். இதைத் தடுக்க வேண்டும் என்றால் ஐக்கிய நாடுகள் குற்றவியல் நீதிமன்றுக்கு எங்களுடைய விவகாரங்களைப் பாரப்படுத்த வேண்டும். அவ்வாறு பாரப்படுத்துவதன் ஊடாகத்தான் இவற்றை நாங்கள் தடுத்து நிறுத்த முடியும் - என்றார். (ம-20)

# சுற்றாடலுக்குப் பாதிப்பில்லாத வகையில் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவேன்

## ஜனாதிபதி லங்காகமவில் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 30
சுற்றாடலுக்குப் பாதிப்பில்லாத வகையில் மக்களின் தேவைகளை நிறைவேற்று வது எனது எதிர்பார்ப்பு இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி கோத்தாபய தெரிவித்தார்.
நெலுவ லங்காகம வீதி புனர்நிர்மாணத்தின்போது சிங்கராஜ வனப் பூங்காவுக்கு பாதிப்பு ஏற்படுவதாக இலத்திரனியல், அச்சு மற்றும் சமூக ஊடகங்களில் கடந்த சில நாள்களாக கருத்துக்கள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார் என்று அவரின் ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள செய்திக குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
லங்காகம கிராமம் வலகம்பா மன்னர் காலம் வரை நீண்ட வரலாற்றைக் கொண்ட கிராமமாகும். தேயிலை பயிர்ச் செய்கை இப்பிரதேசத்தின் பிரதான வாழ்வாதாரமாகும். 100 வருடங்களுக்கு மேலாக கிராமவாசிகள் சிங்கராஜ வனப் பூங்காவை அண்மித்ததாக உள்ள வீதியின் தெனியாய மற்றும் நெலுவ பகுதிகளுக்கு தேயிலை கொழுந்தினை எடுத்துச் செல்கின்றனர்.
நெலுவ, உடுகம, கராபிட்டிய வைத்திய சாலைகளுக்கு நோயாளிகளை எடுத்துச் செல்வதற்கும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் நாளாந்த ஜீவனோபாய நடவடிக்கைகளில் வீதிப் போக்குவரத்து பெருந் தடையாக உள்ளது. இதற்குத் தீர்வாக வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.
சிங்கராஜ வனப்பூங்காவிற்கு பாதிப்பு ஏற்படுகின்றது என சூழலியலாளர்கள் சிலர் முன்வைத்த குற்றச்சாட்டு காரணமாக புனரமைப்பு பணிகளை நிறுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார். வீதி அபிவிருத்தி, வன ஜீவராசிகள், வனப்பூங்கா, சுற்றாடல் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து அமைச்சு அதிகாரிகளுடனும் புனரமைக்கப்படும் வீதியை ஜனாதிபதி பார்வையிட்டார்.
சுமார் 700 குடும்பங்கள் வசிக்கும் லங்காகம பிரதேசத்தில் அனைத்துக் குடும்பங்களுக்கும் 3 மரக்கன்றுகள் வீதம் இலவசமாக வழங்கி 2 ஆயிரத்து 100 மரக் கன்றுகளை நாட்டி அவர்களினாலேயே வனப்பூங்காவிற்குப் பங்களிப்புச் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் - என்றுள்ளது. (ம)

# கோவிந்தம் கருணாகரனுக்கு கோலாகலமான வரவேற்பு!

மட்டக்களப்பு, ஓக. 30
இறுதியாக இடம்பெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் வெற்றியீட்டிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரனைக் கௌரவித்து வரவேற்கும் நிகழ்வு மட்டக்களப்பு - செங்கலடி சீனிப்போடியார் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. (ம)

# 'தற்சார்பு தாய்நாடு' திட்டம் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஓக. 30
தேசத்தைக் கட்டியெழுப்பும் மக்கள் இயக்கமான தமிழ் மக்கள் ஒன்றியம் 'தற்சார்பு தாய்நாடு' எனும் வேலைத்திட்டத்தை கிளிநொச்சியில் நேற்று ஆரம்பித்தது.
தமிழ் மக்கள் ஒன்றியத்தின் நிர்வாக இணைப்பாளர் ச.சுஜிதரன் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. 'தற்சார்பு தாய்நாடு' வேலைத்திட்டத்தினை தமிழ் மக்கள் ஒன்றியத் தலைவர் யோகேஸ்வரன் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து 'தொழிற்கல்வி ஒருவேலை கற்கை நெறி தொடர்பான விளக்கவுரையை ஆசிரியர் சயந்தன் வழங்கினார்.
க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தை நிறைவுசெய்து தொழில்தேடும் இளைஞர்கள் 30 பேர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)



## பதற்றத்தை உருவாக்கிய சந்தையில் இருந்த பொதி

### சாவகச்சேரியில் சம்பவம்

சாவகச்சேரி ஓக.30

சாவகச்சேரி பொதுச் சந்தையின் மரக்கறி விற்பனை செய்யும் இடத்தின் அருகில் அநாதரவாகக் காணப்பட்ட பொதியால் நகரப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

காலை 9.00 மணி தொடக்கம் அந்தப் பொதி அங்கே இருப்பதை அவதானித்த நவீன சந்தை மேல்மாடியில் நின்ற படையினர், மதியம் 12.00 மணி வரை காத்திருந்து எவரும் எடுக்காதால் அப் பகுதிக்குள் பொதுமக்கள் நடமாடுவதைத் தடை செய்து பொலிஸாருக்கு அறிவித்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பதற்றமான நிலை உருவானது. சாவகச்சேரி பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் ராஜபக்ஷ தலைமையில் அங்கு வந்த பொலிஸார் பொதியைச் சோதனையிட்டனர். அதனுள் இரத்தினபுரியைச் சேர்ந்த ஒருவரின் அடையாள அட்டை, அலைபேசி, உடுபுடைவைகள் போன்றவை காணப்பட்டன. எனினும் சந்தேகத்திற்கு இடமான பொருள்கள் காணப்படாத நிலையில் அந்தப் பொதியை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். இதனையடுத்து நிலவிய பதற்றம் தணிந்தது. (ப-9)

# குடிதண்ணீரைப் பெறுவதற்காக 14 ஆண்டுகள் போராடும் மக்கள்

## மன்னார் தம்பனைக்குளம் கிராமத்தில் பரிதாபம்

மன்னார், ஓக.30

**மன்னார் தம்பனைக்குளம் கிராமத்தில் வசிக்கும் சுமார் 115 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த 14 ஆண்டுளாக குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.இந்த மக்கள் தங்களுக்கு குடிதண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை வறட்சிக் காலத்துக்கு முன்னர் செய்து தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் தெரிவித்ததாவது; தம்பனைக்குளம் பகுதியில் இருந்து இரண்டரைக் கிலோமீற்றர் தொலைவில் உள்ள கிராமம் ஒன்றுக்குச் சென்றுதான் குடிப்பதற்குத் தண்ணீர் எடுத்துவர வேண்டும். அதுவும் அடர்ந்த காட்டுப்பகுதி, காட்டு மிருகங்களின் அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணம் உள்ளது. பெண்கள் சிறுவர்கள் அப்பகுதிக்குச் செல்ல இயலாது. 2006ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டதிலிருந்து எமக்கான குடிதண்ணீர் வசதிகள் செய்துதரப்படவில்லை பிரதேச செயலகத்துக்குப் பலமுறை எமது பிரச்சினையைத் தெரியப்படுத்தியபோதும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. எமது கிராமம், மடுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குள்ளும், நானாட்டான் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள்ளும் வருகிறது எனினும் இரண்டு தரப்பாலும் நாம் கைவிடப்பட்டுள்ளோம். தற்காலிகக் குடிதண்ணீர்த் திட்டம் என்று கடந்த ஒரு வருடத்துக்கு முன் நீர்த் தாங்கிகள் வைத்து பவுஸர்கள் மூலம் குடிதண்ணீர் தரப்பட்டது. தற்போது அதுவும் இல்லை. இனிவரும் கடுமையான வறட்சிக் காலத்தை எவ்வாறு சமாளிக்கப் போகிறோம் என்று தெரியவில்லை. எனவே அரசியல் பிரமுகர்கள், கொடையாளர்கள் யாரேனும் முன்வந்து எமது கிராமத்து மக்கள் குடிப்பதற்கு குழாய்க் கிணற்றையேனும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர். (ப-213)

## தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வேண்டும்

### கஜேந்திரகுமார் எம்.பி வலியுறுத்து

சாட்சியங்களின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பொ.கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

இடைக்கால கணக்கறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமத்துவமான முறையில் தமிழ் மக்கள் முன்னேற வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். பொருளாதார ரீதியில் அவர்களை வலுப்படுத்த விசேட திட்டங்கள் வேண்டும். இந்த அரசும் கடந்த அரசும் அவற்றைச் செய்யவில்லை. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் உள்ளன. குடும்பத் தலைவர்கள் காணாமல் போயுள்ளமையால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். காணாமல் போனவர்களுக்கு நீதி வேண்டி கடந்த நான்கு வருடகாலமாகத் தொடர்ச்சியாக அவர்களது குடும்பங்கள் போராடி வருகின்றன. தமிழ் அரசியல் கைதிகள் எவ்வித சாட்சியங்களும் இன்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களது குடும்பங்கள் இதனால் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளன. இவர்களுக்கு அரசு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் - என்றார். (ப-22)



வெற்றிலைக்கேணி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் மாம்பழத்திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. (ஐ-70)

## பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நியமனக்கடிதம் வழங்கல்

நல்லூர், ஓக. 30

தொழிலற்ற பட்டதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் பயிலுநராகத் தெரிவு செய்யப்பட்ட நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கான நியமனக்கடிதம் எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்படவுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்கள் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளித்து நியமனக் கடிதத்தை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகத்தேர்வின் போது தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ்,கிராம அலுவலரால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ், பட்டச்சான்றிதழ்,விவரங்கள் அடங்கிய பெறுபேற்று அட்டவணை,டிப்ளோமா பட்டதாரியொருவராயின் அல்லது அரச பல்கலைக்கழகம் அல்லாத பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றின் பட்டதாரியாயின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரித்து பெயரில் (பட்டதாரி பயிலுநர்) வழங்கப்பட்ட கடிதம் ஆகியவற்றை கொண்டுவருமாறு பிரதேச செயலாளர் எ.அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார். (ஐ)

## தவறி வீழ்ந்து சிறுவன் காயம்

சாவகச்சேரி, ஓக. 30

வாகனத்திலிருந்து தவறிவீழ்ந்த 7 வயதுச் சிறுவனான பாடசாலை மாணவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம், போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் இடம்பெற்றது. சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த சிவபாலன் கபில்ராஜ் (வயது-7) என்னும் மாணவனே காயமடைந்தான்.

தனங்களப்பிலிருந்து வந்த வாகனம் தண்டவாளக் கடவையைக் கடப்பதற்கு நிறுத்திய வேளையில் அவ்வழியாக நடந்து வந்த மாணவன். வாகனத்தின் பின்பகுதியில் ஏறியுள்ளார். இதனை அறியாத சாரதி வாகனத்தை எடுத்தபோது ஏற்பட்ட உந்துதலால் மாணவன் கீழே வீழ்ந்து தலையில் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. மாணவன் உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டான். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். (ப-9)

## வீடற்ற அனைத்து மக்களுக்கும் வீடுகள் வழங்கப்படவேண்டும்

### கன்னியுரையில் திலீபன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா,ஓக.30

கடந்த ஆட்சியில் வீட்டுத்திட்டம் என்கிற பெயரில் மக்களைக் கடனாளியாக்கியதுபோல் இல்லாமல், இந்த ஆட்சியில் வீடற்ற அனைத்து மக்களுக்கும் பெறுமதியான வீட்டுத்திட்டம் வழங்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய தனது கன்னியுரையின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

உடைந்த வீடுகள், கிணறுகள், மலசலகூடங்கள் என்பன சீரமைப்புச் செய்யப்படவேண்டும். உப குடும்பங்களுக்கும், காணியற்றவர்களுக்கும் வீட்டுத்திட்டதுடன் காணிகள் வழங்கி அடிப்படை வசதியுடன் குடியேற்றங்கள் செய்யப்படவேண்டும். பிரதேச வைத்தியசாலைகளில் மருத்துவர், தாதியர் பற்றாக்குறையைக் காரணம் காட்டி மக்களுக்கான சேவைகள் உரிய முறையில் வழங்கப்படுவது மிகக் குறைவாக உள்ளது. இது உடனடியாகத் தீர்க்கப்படவேண்டும். வனத்திணைக்களத்தால் வயல் நிலங்களுக்குள் எல்லைக் கற்கள் இடப்பட்டுள்ளன. இவற்றை நீக்கி அக்காணிகளை மக்களுக்கு ஒப்படைத்து, வருகின்ற போகம் செய்வதற்கு வழி செய்ய வேண்டும். வவுனியாவில் 140க்கும் மேற்பட்ட குளங்கள் திணைக்களத்தினரால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளன. இவற்றை விடுவித்து அவை சீமைப்புச் செய்யப்படவேண்டும். மற்றும் நீண்டகாலமாக காணி உரிமைப் பத்திரங்கள் கிடைக்காத எம் மக்களுக்கு, காணி உரிமைப் பத்திரம் விரைந்து கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ப-110)

## இணக்க சபை அமர்வு

நல்லூர், ஓக.30

நல்லூர் இணக்க சபை அமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கந்தமடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பிற்பற்றி வருகை தருமாறு தவிசாளர் அறிவித் துள்ளார். (ஐ)

## வெள்ளோட்டம்

கொக்குவில், ஓக. 30

அருள்மிகு கொக்குவில் மஞ்ச வனப்பதி முருகன் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சப்பற வெள்ளோட்ட விழா இன்று இரவு 7.35 மணிக்கு நடைபெறவுள்ளது.

தாவடியூர் துரை சிற்பாலய ஆச்சாரியார் ஜயாத்துரை இலங்கேஸ்வரனின் கைவண்ணத்தில் இந்த சப்பறம் அமைக்கப்பட்டுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது. (ஐ)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் (ஐயனார்) ஆலய குடமுழுக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து மதியம் அன்னதானம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குடமுழுக்கைத் தொடர்ந்து 48 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என்று ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (ஐ)

# உறவுகளுக்குள் பிரிவினை; இரண்டாகிறது போராட்டம்

கிளிநொச்சி ஓக 30

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான இன்று வடக்கு, கிழக்கைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவுகளால் முன்னெடுக்கப்படத் திட்டமிடப்பட்டிருந்த போராட்டம், இரண்டாகப் பிரிவுபட்டுள்ளது. வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கம் ஒரு போராட்டத்தையும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கான அமைப்பு மற்றுமொரு போராட்டத்தையும் முன்னெடுக்கவுள்ளன எனத் தெரியவருகிறது.**

உறவுகள் அனைவரும் ஒருமித்துப் போராட வேண்டும், அப்போதுதான் இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுக்க முடியும், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கமுடியும் என்று சிவில் அமைப்புக்களும், அரசியல் தலைவர்களும் கோருகின்ற நிலையிலும் போராட்டம் பிளவுபட்டே மேற்கொள்ளப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாகப் போராட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டு, அதற்கான ஆதரவுகளும் திரட்டப்பட்டுள்ள நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கான அமைப்பு கிளிநொச்சி நகரில் கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாகப் போராட்டம் நடத்தத் தயாராகி வருகிறது. அந்த அமைப்பு நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் போராட்டத்துக்காக ஒரு மணி நேரம் கதவடைப்புப் போராட்டத்தை மேற்கொள்ளுமாறும், அவர்கள் கிளிநொச்சி வர்த்தகர்களிடம் கோரியுள்ளனர். (ப-6)

## விடுதிகளுக்கு முக்கிய அறிவிப்பு

சாவகச்சேரி, ஓக.30

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இயங்கும் அனைத்து விருந்தினர் விடுதிகளும் உடனடியாக சபையில் பதிவு செய்து, அதற்குரிய உரிமம் பெறப்படல் வேண்டுமென விசேட அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபை எல்லைக்குள் இயங்கும் விடுதிகள் பதிவுசெய்யப்படாமல் இயங்குவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதனால் விடுதிகளின் நலன் கருதி இந்த வருடத்துக்குரிய உரிமம் வழங்கப்பட வேண்டுமென உறுப்பினர்களால் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. அது ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது என சபையின் தவிசாளர் தெரிவித்தார். (க-9)

## யோகா பயிற்சி நல்லூரில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக.30

யாழ் யோகா உலகம் அமைப்பு நல்லூர் தேரடி அருகே அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் புதிய யோகா பயிற்சிநெறிகளை ஆரம்பிக்கின்றது.

இப் பயிற்சிகளுக்கான அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோகா உலகம் அமைப்பின் இயக்குநர் சி.உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதலாவது பயிற்சிநெறி காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையும், இரண்டாம் பயிற்சிநெறி மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையும், மூன்றாம் பயிற்சிநெறி இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரையுமாக இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## இந்திராபுரத்தில் கௌப்பி அறுவடை

கிளிநொச்சி, ஓக. 30

கிளிநொச்சி இந்திராபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள கௌபிச் செய்கையின் அறுவடை விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்குடியேற்றப் பிரதேசமாகக் காணப்படுகின்ற இந்திராபுரம் கிராமத்தில் மக்களினுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் கிளாலி விவசாயப் போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட இந்திராபுரம் கிராமத்தில் விவசாய வியாபாரப் பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக 1600 கிலோ கிராம் கௌப்பி விதைகள் 100 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டன. கரைச்சி, கண்டாவளை, பளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 202 விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். அந்தச் செய்கைக்கான அறுவடை விழாவே நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ப-6)



இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழான வவுனியா கைத்தொழில் பேட்டைக்கு வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் அமைக்கப்பட்டுள்ள குறிகாட்டி பெயர்ப்பலகையில் சிங்களமொழிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. (ப-110)

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை உடனே தீருங்கள்

### *இணைப்பாளர் அந்தோனி சகாயம் கோரிக்கை*

மன்னார், ஓக. 30

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் நிரந்தரமான முடிவு ஒன்றைத் தற்போது நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். எனவே புதிய அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்துவைக்க வேண்டும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் இணைப்பாளர் அந்தோனி சகாயம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான இன்று வடக்கு கிழக்கில் கண்டனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. புதிய அரசாங்கம் மக்களுடைய பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டும். சர்வதேசம் இவ் விடயத்தில் அவதானம் செலுத்த வேண்டும். கையில் ஒப்படைக்கப்பட்ட 210 பேரின் நிலை என்ன? அவர்களின் முழு விவரங்களும் அடங்கிய கோவையை நாங்கள் கையளித்துள்ளோம். அதற்கான முடிவை இந்த அரசாங்கம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை இன்று இடம்பெறவுள்ள பேரணி ஊடாக நாங்கள் முன்வைக்கவுள்ளோம் - என்றார். (ப-56)

## மின்சாரப் பொருள்கள் மாயம்; பொலிஸ் விசாரணை ஆரம்பம்

வலி.தென்மேற்கு, ஓக.30

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் களஞ்சிய அறையில் இருந்து ஏற்றிச் செல்லப்பட்ட மின்சாரப் பொருள்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர் என்று தெரியவருகிறது.

குறித்த பொருள்களைக் கண்டுபிடிக்க பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் பொலிஸாரின் உதவியை நாடினார். அதைத் தொடர்ந்தே பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள வீதிகளுக்குப் பொருத்துவதற்காக பிரதேச சபைக் களஞ்சியப் பகுதியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த சுமார் 4 இலட்சம் ரூபா பெறுமதியான மின்சாரப் பொருள்கள் பட்டப்பகலில் படி வாகனத்தில் கடத்தப்பட்டன என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பில் சபை உறுப்பினர்கள் வெளிநடப்புக்களையும் செய்திருந்தனர். அந்த மின்சாரப் பொருள்கள் காணமற்போய் 75 நாள்களுக்கு மேலாகியும் இதுவரை அவை கண்டுபிடிக்கப்படவில்லை. அத்துடன் சம்பந்தப்பட்டவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பொதுமக்களுக்குச் சொந்தமான இப்பொருள்களைக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜோன்சன், மானிப்பாய் பொலிஸில் முறைப்பாட்டைப் பதிவு செய்ததற்கு அமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-115)

## மைத்திரிக்கு பதவி?

கொழும்பு, ஓக.30

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் பதவி ஒன்றைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் ஆளும் கட்சியின் தரப்பினருடன் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர், ராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2 ஆம் திகதி கூடவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 69 ஆவது ஆண்டு பூர்த்தி தொடர்பான கலந்துரையாடல் கட்சியின் தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொவிட்-19 காரணமாக இந்த முறை ஸ்ரீலங்கா சுதந்தி ரக்கட்சியின் ஆண்டு பூர்த்தி நிகழ்வு பெல்லங்வில ரஜமஹா விகாரையில் மத வழிபாடுகளுடன் மாத்திரம் முன்னெடுக்கப்படவுள்ளன- என்றும் அவர் தெரிவித்தார். (ப-இ)

# அமைச்சர் இல்லாத அமைச்சுக்கு எதற்கு நிதி ஒதுக்கீடு?

*கேள்வி எழுப்புகிறார் அனுரகுமார*

கொழும்பு, ஓக. 30

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஒருவர் இல்லாத அமைச்சுக்கு எதற்கு 177 பில்லியன் நிதி ஒதுக்கீடு என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயகசபையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

பெரும்பான்மை அதிகாரம் உள்ளது என்பதற்காக நினைத்தால் போல் செயற்பட முடியாது. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இதனைக் கூறி க்கொள்ள விரும்புகின்றோம் எனவும் அவர் ஆளும் தரப்பை எச்சரித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;.

19 ஆம் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததன் நோக்கம் அமைச்சுக்களைக் கட்டுப்படுத்தவே, ஆனால் இன்று இராஜாங்க அமைச்சரவை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கணக்கறிக்கையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சிற்கு 177 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஒருவர் இல்லாத அமைச்சிற்கு எதற்கு 177 பில்லியன் நிதி ஒதுக்கீடு. இதே போன்று அமைச்சுக்களுக்குப் பொறுப்பாக அமைச்சர்களை நியமிக்கவில்லை - என்றார். (ப)

# 90 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட பயிர்களுக்குத் தண்ணீர் தர மறுப்பு

## முருங்கன் விவசாயிகள் கவலை

மன்னார், ஓக.30

**மன்னார், முருங்கன் நீர்ப்பாசனத் திணைக்களம் வயல்களுக்குத் தண்ணீர் திறந்து விட மறுப்புத் தெரிவித்துள்ளதால் உயிலங்குளம் நீலாசேனைப் பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள தொண்ணூறு ஏக்கர் சிறுபோகப் பயிர்கள் அழியும் நிலையில் உள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.**

இது தொடர்பில் விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் உயிலங்குளம் நீலாசேனைப்பகுதியில் தொண்ணூறு ஏக்கரில் செய்யப்பட்டுள்ள சிறுபோகப் பயிரானது கதிர் நிலையில் உள்ளது. கட்டுக்கரையிலிருந்து அடைக்கல மோட்டைப் பகுதியில் நீர்க்கட்டுத் திருத்த வேலைகளை நீர்ப்பாசனத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது. இவர்கள் நீலாசேனைப் பகுதிக்கு பயிர்களுக்கு வரும் தண்ணீரைப் பூட்டி வைத்து வேலைகளைச் செய்து வருகிறார்கள். இதனால் பயிர்கள் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக விவசாயிகளும், விவசாய அமைப்புகளும் உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியபோதும் இதுவரை தண்ணீர் திறக்கப்படவில்லை. கதிர் நிலையில் உள்ள பயிர்களுக்கு உரிய பருவத்தில் தண்ணீர் பாய்ச்சியாக வேண்டும் இல்லை என்றால் இந்தத் தொண்ணூறு ஏக்கர் பயிரும் நாசமாகிவிடும். காலநிலை அழிவாலும் விவசாயப் பொருள்களுக்கு உரிய விலை இல்லாமையாலும் விவசாயிகள் நஷ்டத்தைச் சந்தித்து வருகிறார்கள். இவை தெரிந்திருந்தும் அதிகாரிகள் தங்களது சுயநலனுக்காக விவசாயிகளின் வயிற்றில் அடிப்பதை நிறுத்த வேண்டும் என்பதோடு, நீலாசேனை பகுதிக்கான தண்ணீரை உடனடியாகத் திறந்து விட்டுபயிர்களை அழிவிலிருந்து காப்பாற்ற முன் வர வேண்டும் - என்றனர் (ப-213)

# குடமுழுக்கு

நல்லூர், ஓக.30

நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திர சேகரப்பிள்ளையார் ஆலய பாலஸ்தாபன குடமுழுக்கு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது. (ஐ)

# தேர்த்திருவிழா

பளை, ஓக.30

பளை இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை நடைபெறும்.

ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

திருவிழாவின் சமுத்திர தீர்த்தம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும், மல்வில் தாமரைத் தடாக தீர்த்தம் 2 ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறும்.

திருவிழா கிரியைகள் பிரம்மஸ்ரீ முரளிதர வித்தியானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற்று வருகின்றன. (ஐ-9)

## சாவகச்சேரி சந்தையில்

# உற்பத்திப் பொருள்களுக்கு கழிவு நடைமுறை நிறுத்தம்

சாவகச்சேரி, ஓக.30

சாவகச்சேரி பொதுச் சந்தையில் நீண்ட காலமாக நடைமுறையில் உள்ள உற்பத்தியாளர்களிடம், உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது, பத்துக் கிலோவுக்கு ஒரு கிலோ கழிவு என்னும் நடைமுறை கடந்த வியாழக்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி நகரசபையின் விசேட அமர்வில் முடிவு செய்யப்பட்டுள்ளது. தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தேசிய முன்னணி உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டு, அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம், கடந்த வியாழக்கிழமை விசேட கூட்டம் நடைபெற்றது.

உற்பத்திப் பொருள்களுக்கு சந்தையில் உள்ள வியாபாரிகளால் பத்துக்கு ஒன்று எனும் விகிதத்தில் கழிவு மேற்கொள்ளப்படுவதால், உற்பத்தியாளர்கள் நஷ்டமடைகின்றனர். இதனால் உடனடியாக வியாபாரிகள் உற்பத்தியாளர்களிடம் கொள்வனவு செய்யப்படும் பொருள்களுக்குக் கழிவு பெறுவது நிறுத்தப்படல் வேண்டும் எனக் கோரியிருந்தனர்.

இந்த விடயங்கள் விசேட அமர்வில் கலந்துரையாடப்பட்டன. உடனடியாக சந்தைக்குக் கொண்டுவரப்படும் மண்ணுக்குள் விளையும் உற்பத்திப் பொருள்கள் தவிர்ந்த ஏனைய உற்பத்திப் பொருள்களுக்கு கழிவு பெறுவது நிறுத்தப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டது.

உற்பத்தியாளர்கள் சந்தைக்குள் அமைக்கப்படவுள்ள உழவர் சந்தையில் தமது உற்பத்திப் பொருள்களை வைத்து கழிவு வழங்காமல், வியாபாரிகளுக்கு வழங்கவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

சந்தையின் மரக்கறி விற்பனை அலகில் ஏற்கனவே அமைக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ள இடத்தில், உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது. (க-9)






# ராஜபக்ஷ அரசில் அங்கம் வகிக்கும் அனைவரும் போர்க் குற்றவாளிகளே

## ஈழத்தமிழர் மக்களவை சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஓக. 30**

**மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்களைப்பெற்ற ராஜபக்ஷ அரசில் அங்கம் வகிப்பவர்கள் அனைவரும் போர்க்குற்றவாளிகள் ஆவர் என்று அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை தெரிவித்துள்ளது.**

அவர்கள் அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

2009ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை அரசியல் செயற்பாடுகளில் எந்த ஒரு முன்னேற்றத்தையும் தமிழ் மக்களுக்குத் தேடிக்கொடுக்காமலேயே பத்து வருடங்களை இணக்க அரசில் செய்து வீணடித்த தமிழ் அரசியல்வாதிகள் இனியும் நாடாளுமன்றத்தில் ஒரு துரும்பையும் நகர்த்தப்போவதில்லை. நாடாளுமன்றில் பல பேரம் பேசும் சந்தர்ப்பங்கள் கிடைத்தும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்குக் கூட எந்தத் தீர்வையும் பெற்றுக்கொடுக்காத தமிழ்த் தலைமைகள் இனியாவது நேர்மையாகச் செயற்பட வேண்டும் என்பதே எமது பேரவா. சர்வதேச சமூகத்தின் தலையீடு இன்றி ஈழத்தமிழர்களின் இனவழிப்புக்கு நீதி பெறுவது என்பது கல்லில் நார் உரிப்பது போன்றதாகும். சிறிலங்கா இனவழிப்பு இராணுவத்தினராலும் அவர்களோடு இணைந்து பணியாற்றிய ஒட்டுக் குழுக்களினாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கேட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உங்கள் குடும்பத்தில் ஒருவராக நினைத்து கலந்துகொள்ள வேண்டும் என அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை சார்பாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம் என்றுள்ளது. (ப)

# போதைப்பொருள் குற்றச்சாட்டு: 20,000 பேர் விளக்கமறியலில்

## *சிறைச்சாலைகள் திணைக்களம் தகவல்*

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பாக 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களை வேறு புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்புவது குறித்து அவதானம் செலுத்தப்படுகிறது என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலங்களில், போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்களை விளக்கமறியலில் வைத்தல் மற்றும் சிறை வைத்தல் என்பன குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு மாத காலப்பகுதியில் 6 ஆயிரத்துக்கும் அதிகமானோர், போதைப்பொருள் குற்றம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். தற்போது வரையில் விளக்கமறியல் சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 28 ஆயிரத்தை விடவும் அதிகமாக உள்ளது. இந்த நிலையில், அவர்களில் 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில், விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்கள். எவ்வாறிருப்பினும், விளக்கமறியல் சிறைச்சாலையில், சுமார் 11 ஆயிரம் பேருக்கே வசதிகள் உள்ளன. எனவே தற்போது அங்கு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ப-இ)

# கட்டுமானத்தை ஆராய நேரில் சென்றார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக. 30

சர்ச்சைக்குரிய சிங்கராஜ வனப்பகுதிக்கு அருகிலுள்ள நெலுவாலங்காகம சாலையின் கட்டுமானத்தை ஆய்வு செய்ய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நேற்று நேரில் சென்றுள்ளார்.

சிங்கராஜா வனப்பகுதிக்கு அருகில் குறித்த சாலையை நிர்மாணிப்பது, சுற்றுச்சூழலுக்குக் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துமெனச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இந்நிலையிலேயே இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு, ஜனாதிபதி அந்தப் பகுதிக்கு நேரில் சென்றுள்ளார். சாலையை நிர்மாணிப்பது சிங்கராஜ வனத்துடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் அமைப்புக்கு ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்துமா என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஏற்கனவே ஜனாதிபதி உத்தரவிடிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-இ)

# 20 ஆவது திருத்தம் நாடாளுமன்றில்?

கொழும்பு, ஓக. 30

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்குவதை நோக்கமாகக் கொண்ட 20ஆவது திருத்தத்தை செப்ரெம்பர் 3 ஆம் திகதி நாடாளுமன்றில் தாக்கல் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அரசாங்கத்தின் மூத்த அரசியல்வாதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இந்த முடிவை ஆதரிக்கத் தயாராக இருக்கின்றனர் எனவும் அவர் கூறினார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம், ஜனாதிபதிக்கு மீண்டும் அதிகாரங்களை வழங்குவதற்கான ஒரு விதிமுறையையும், உயர்மட்ட அரசாங்க பதவிகளில் மாற்றங்களையும் ஏற்படுத்தும். முன்னர் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த அதிகாரம் 19 ஆவது திருத்தத்தின் மூலம் அரசமைப்புச் சபைக்கு மாற்றப்பட்டது. புதிய திருத்தத்தின் நோக்கம் அதனை மீண்டும் ஜனாதிபதிக்கு வழங்குவதே. அத்தோடு 20 ஆவது திருத்தத்தின் மூலம், தேர்தல்கள் ஆணைக்குழுவில் உள்ள அதன் தற்போதைய மூன்று உறுப்பினர்களை ஐந்து ஆக உயர்த்தவும் அரசாங்கம் முயற்சிக்கும். 20 ஆவது திருத்தத்தின் வரைவு எதிர்வரும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# 19 ஆவது திருத்தத்தை ஒழித்தே தீருவோம்!

## எஸ்.பி.திசாநாயக்க சூளுரை

நுவரெலியா, ஓக. 30

சிறுபான்மைக் கட்சிகளின் ஒத்துழைப்பின்றி 19 ஆவது அரசமைப்பை நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

19 ஆம் திருத்தம் ஒழிக்கப்பட்டு 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்படும். அதற்காகவே மக்கள் பெரும்பான்மைப் பலத்தை அரசுக்கு வழங்கியுள்ளார்கள். இதற்கு சிறுபான்மைக் கட்சிகள் எதிர்ப்பைத் தெரிவிக்கலாம். சிறுபான்மைக் கட்சிகளே கடந்த மாகாண சபைத் தேர்தல் முறையையும் பிரச்சினையாக்கியுள்ளனர். எனவே சிறுபான்மைக் கட்சிகள் அதற்கு எதிராக உண்ணாவிரதம் இருந்தும் கூச்சலிட்டும் எதிர்ப்பைத் தெரிவிக்கலாம். ஆனால் நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுப்போம். விக்னேஸ்வரன் இந்து மற்றும் தமிழை உடுத்திக் கொண்டுள்ள மனிதன். பிரபாகரனின் கொள்கைகளைப் பின்பற்றும் அவ்வாறானவர்களின் செயற்பாடு பாதகமாகவே முடியும். பிரிவினைவாதம் என்ற விஷத்தைப் பரப்பி மீண்டும் தனிநாட்டுக் கோரிக்கையை வலுப்படுத்த அவர் முனைகிறார். அவர் மீண்டும் ஒரு போருக்கே வழி ஏற்படுத்துகின்றார் - என்றார். (ப-இ)



# வீதியோரம் காணப்பட்ட பற்றைகள் அகற்றல்

வவுனியா, ஓக. 30

வவுனியா செட்டிகுளம் பிரதான பாதையின் வீதியோரம் காணப்பட்ட பற்றைகளை அகற்றும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த பிரதான வீதியோரத்தில் பற்றைகள் சூழ்ந்து காணப்பட்டமையால் வீதி தெளிவின்மை காரணமாக வீதி விபத்துக்கள் ஏற்பட்டன.

இதனைக் கருத்திற்கொண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வீதியின் இரு பகுதிகளிலும் காணப்பட்ட பற்றைகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஐ-18)

# துர்நாற்றம் வீசும் தனங்களப்பு வீதி

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட தனங்களப்பு, வீதியில் துர்நாற்றம் வீசுவதால் அப்பகுதியில் உள்ள மயானங்களுக்குச் செல்வோரும் ஏ- 32 வீதிக்கு வாகனங்களில் செல்வோரும் மூக்கைப் பொத்திக்கொண்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுகள். இந்து மயானத்துக்கு அப்பால் கொட்டப்படுகின்ற போதிலும் இனந்தெரியாதோர் கால்நடைகளின் கழிவுகளை இரவு வேளைகளில் வீதியின் ஓரங்களில் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். இந்தக் கழிவுகளிலிருந்தே துர்நாற்றம் வீசப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-9)

# அமரர் வி.தர்மலிங்கத்தின் 35 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாவடி, ஓக.30

மானிப்பாய் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 35 ஆம் ஆண்டு நினைவஞ்சலி எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

தாவடியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத் தூபியில் காலை 7 மணிக்கு சுன்னாகம் வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் க.தர்சன் தலைமையில் நினைவஞ்சலி நிகழ்வு நடைபெறவுள்ளது

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி மற்றும் ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோர் அஞ்சலி உரையை ஆற்றவுள்ளனர். அன்னாரின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் நன்றியுரை வழங்கவுள்ளார்.

அன்றையதினம் மதியம் 12 மணியளவில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் அன்னாரின் நினைவாக அன்னதானம் வழங்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-159)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தசாப்தத்தின் தேடல்!

இன்று உலக காணாமல் ஆக்கப்பட்டோர் தினம். இலங்கையில் இறுதிப்போர் இடம்பெற்றபோதும் அதற்கு அண்மித்த காலப்பகுதிகளிலும் பல நூற்றுக் கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக் கோரியும், தமக்கு நீதி வேண்டியும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவுகளால் இன்று வடக்கு – கிழக்கில் பல்வேறு போராட்டங்கள் மற்றும் பேரணிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இறுதிப் போர் இடம்பெற்று சுமார் ஒரு தசாப்த காலம் முடிவடைந்த பின்னரும் எம்மவர்களின் எம்மவர்களுக்கான இந்தத் தேடல் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது என்பது துயரத்திலும் பெரும் துயர்.

இறுதிப்போரின்போது காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதை இந்த நாட்டில் மாறி மாறி ஆட்சிப்பீடம் ஏறிய எந்த அரசுகளும் இதய சுத்தியுடன் வெளிப்படுத்தவில்லை. 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று எவரும் இல்லை', 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எவரும் உயிருடன் இல்லை', 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று கூறப்படும் நபர்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கலாம்' என்பதான பதில்கள்தான் இதுகாலும் முன்வைக்கப்பட்டுள்ளன. கடந்த காலப் பதிவுகள் இவ்வாறிருக்கையில், ராஜபக்ஷக்களின் அரசு ஆட்சிப்பீடம் ஏறியுள்ள நிலையில் இன்றையதினம் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளவையாக அமைந்துள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை.

இறுதிப்போர் இடம்பெற்ற காலப்பகுதியில் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ தற்போது பிரதமராக உள்ளார். அதே காலப்பகுதியில் இலங்கையின் பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தாபய ராஜபக்ஷ தற்போது ஜனாதிபதியாக உள்ளார். இராணுவத் தளபதியாக இருந்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார். போர்க்குற்ற சூத்திரதாரியான சவேந்திர சில்வா தற்போது இராணுவத் தளபதியாக உள்ளார். ஆக, போர்க் குற்றத்துக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்துக்கும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தற்போது நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிப்பீடத்தில் உள்ளனர். பிறிதொரு அரசோ அல்லது பிறிதொரு தரப்பினரோதான் இந்த விடயத்தில் தொடர்புபட்டுள்ளனர் என்ற காரணங்களைக்கூறி தப்பிக்க தற்போது சந்தர்ப்பம் இல்லை. இதனால்தான் இந்தக் காலப்பகுதியில் இன்றையதினம் முன்னெடுக்கப்படும் போராட்டம் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது. பேரினவாத அரசுகள் கடடத்தனமாக எம்மை ஏமாற்றுகின்றன என்றால் அதற்குரிய சந்தர்ப்பங்களை நாம் வழங்குகின்றோம் என்பதையும் மறுப்பதற்கில்லை. காணாமல் ஆக்கப்பட்டோருக்காக போராட்டங்களை முன்னெடுக்கும் நாம் எமக்குள்ளே பிளவடைந்து இரு துருவங்களாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். வெறும் நாள்களை எண்ணிக் கொண்டு போராட்டங்களை கடந்துகொண்டிருக்கின்றோம். எமக்குள் இருக்கும் கருத்து முரண்பாடுகளைக் களைந்து ஓரணியில் நின்று நாம் உரத்துக் குரலெழுப்பிப் போராட வேண்டும். சர்வதேச சமூகம் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் இங்கு உள்ளன என்று அறிவித்துள்ள போதிலும் அதன் அடுத்தகட்ட நகர்வுக்கு இன்னும் செல்லவில்லை என்பதும் வருத்தத்துக்கு உரிய விடயமே. ஏனெனில் போர்க் குற்றங்களையும், மனித உரிமைகளுக்கு எதிரான அடக்குமுறைகளையும் எதிர்கொண்டவர்கள் எதிர்பார்ப்பது அறிக்கைகளை அல்ல. மாறாக நீதியை!

# உறவுகளின் கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்க வேண்டும்

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 30

**சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினத்தை முன்னெடுக்கும் முகமாக வடக்கு கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் உறவுகளால் முன்னெடுக்கப்படும் அடையாளப் போராட்டத்திற்கு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு முழுமையான ஆதரவினைத் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது; காணாமல் ஆக்கப்பட்டோருடைய பிரச்சினைகள் இனியும் தொடராமல் இப்போதைய அரசாங்கம் விரைந்து, உறவுகளைத் தேடும் மக்களுடன் கலந்துரையாடி, அவர்களின் கருத்துகளையும் உள்வாங்கி, அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வை வழங்கவேண்டும். அத்தோடு, பதவிகளில் உள்ள தமிழ் அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் மட்டும் இவற்றைப் பேசுவதுடன் நின்றுகொள்ளாது, தமது பதவிகளைப் பணயம் வைத்து, இழப்புகளைச் சந்தித்து நிற்கும் இவ் உறவுகள் நிம்மதியாக வாழ ஆவண செய்யவேண்டும். கடந்த காலங்களைப் போலவே, எமது அமைப்பானது தொடர்ந்து அநீதிகளை எதிர்த்தும், பாதிப்புகளுக்கு நீதி கோரியும் போராடிவரும் மக்களுடன் இணைந்து கரம்கோர்த்து நிற்கும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ப)

## சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க சிறப்பு வேலைத்திட்டம்

கொழும்பு, ஓக. 30

சிறுவர் துஷ்பிரயோகங் களைத் தடுப்பதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது என சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குறித்த அதிகார சபையின் பேராசிரியர் முதித விதானபத்திரன தெரிவித்ததாவது;

'கடந்த வருடம் 8 ஆயிரத்து 558 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இவ்வருடத்தின் கடந்த 8 மாதங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 4 ஆயிரத்து 500 முறை ப்பாடுகள் பதிவாகியுள்ளன.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் இணையத்தளத்தை பயன்படுத்தியும் இடம்பெறுவதாக தெரியவந்துள்ளது.

இதனால் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்று அவற்றை தடுப்பதற்கான வழிவகைகளும் முன்னெடுக்கப்படும் -என்றார். (ஐ-இ)

கொரோனாத் தொற்று;

## இலங்கை தொழிலாளர்கள் 52 பேர் வெளிநாட்டில் சாவு

கொழும்பு, ஓக. 30

வெளிநாடுகளிலுள்ள சுமார் 2000 இலங்கைத் தொழிலாளர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 400 பேர் வரையில் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளதுடன், 52 பேர் உயிரிழந்துள்ளனர் என பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்தார். (ஐ-இ)

# சரசாலை குருவிக்காடு: பிரதேச சபையால் துப்புரவு



சரசாலை வடக்கு குருவிக்காடு கண்டல் காட்டுடன் இணைந்த துன்னாலை வீதி நேற்று சாவகச்சேரி பிரதேச்சபையின் ஏற்பாட்டில் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

பறவைகள் சரணாலயமாக காணப்படும் கண்டல் காட்டின் வீதியோரங்க ளில் இனந்தெரியாதோரால் வாகனங்களில் கொண்டுவந்து கொட்டப்படும் கழிவுப் பொருள்களால் சூழல் மாசடையும் நிலை காணப்பட்டது.

இப்பகுதி மழை காலத்துக்கு முன்னர் துப்புரவு செய்யப்படல் வேண்டுமென அப் பகுதி மக்களும் வீதியைப் பயன்படுத்துவோரும் விடுத்த வேண்டுகோளையடுத்து பிரதேச சபையினர் பொது அமைப்புகளின் உதவியைக் கோரியிருந்தனர்.

தென்மராட்சி பிரதேச அரச திணைக்களங்கள், பொது அமைப்புகள் மற்றும் பலர் நேற்று சிரமதானத்தில் கலந்துகொண்டு, வீதியின் இரு மருங்குகளையும் துப்புரவு செய்தனர்.

இதுதொடர்பில் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் கருத்துத் தெரிவித்ததாவது;

"சாவகச்சேரி சரசாலை வடக்கு குருவிக்காட்டு பகுதியில் குப்பைகள் மற்றும் கழிவுகள் போடும் இடங்களில் தொட்டிகள் அமைக்கப்படவுள்ளன. மக்கள் கழிவுகளை உக்கக்கூடியவை. உக்காதவை எனத் தரம் பிரித்து அந்தந்தத்தொட்டிகளில் கொட்டமுடியும் மாதத்தில் ஒருநாள் தொட்டிகளில் சேரும் கழிவுகள் வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேசத்தில் சரசாலை தொடக்கம். கப்பூது வரையான பகுதியில் காணப்படும் கண்டல் காட்டின் உள்ள வாய்க்கால் வழியாக மழை நீர் வந்து தேங்கி நிற்பதால் உள்நாட்டுவெளிநாட்டுபறவை இனங்கள் காலத்துக்கு காலம் தங்கி தமது இனத்தைப் பெருக்கி வருகின்றனர்.

இந்த நீரோடையில் தொடர்ந்து நீர் தேங்கியுள்ளதால் முதலைகள் மற்றும் மீன் இனங்களும் காணப்படுகின்றன.

இந்த கண்டல்காட்டை பாதுகாத்து பறவைகள் சரணாலயமாக மாற்றுமாறு பிரதேச மக்களால் பல்வேறு தரப்பினரிடையே கோரிக்கைகள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9.159)

# பிரதேச செயலகங்களில் கோவைகள் தேடுதல்

யாழ்ப்பாணம், ஓக.30

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களால், கடந்த பத்து வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பான விவர ங்களை அனுப்பி வைக்குமாறு மாவட்டச் செயலகத்தால் கோரப்பட்டுள்ளது.

இதனால் அவை தொடர்பான கோவைகளைத் தேடி எடுப்பதில் அலுவலர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டு தொடக்கம் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட மீள்குடியேற்றம், வாழ்வாதார உதவிகள், மின்சார விநியோகம், வீடமைப்புத் திட்டங்கள், அபிவிருத்தி வேலைகள், புனர்வா ழ்வுத் திட்டங்கள், சமுர்த்தி அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து வேலைத் திட்டங்களின் விவரங்களும் கோரப்பட்டுள்ளன.

இந்த விவரங்களைச் சேகரிப்பதற்கு, அந்தந்தப் பிரிவுகளில் கடமையாற்றி, ஏனைய பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களின் உதவிகள் நாடப்பட்டுள்ளன.

(சு-9)

# காணிகளுக்கான ஆவணங்களை பெறுவதற்கு காத்திருக்கும் மக்கள்

## விரைந்து வழங்குமாறும் கோரிக்கை

தென்மராட்சி, ஓக. 30

**அரச காணிகளில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாகக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு காணியில் வசிப்பதற்கான ஆவணங்களை வழங்குவதில் தென்மராட்சி பிரதேச செயகத்தினர் இழுத்தடிப்புச் செய்கின்றனர் என பாதிக்கப்பட்ட பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

பிரதேசத்தில் தரிசு நிலங்களாகக் காணப்பட்ட காணிகள், குடியிருக்கவும் விவசாயம் செய்யவுமென காணி இல்லாத குடும்பங்களுக்கு பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டது. கடந்த 30 வருடங்களுக்கு மேலாக அந்தக் காணிகளில் குடியமர்ந்து, விவசாயம் செய்தும் இதுவரை காணிகளுக்கான ஆவணங்கள் தரப்படவில்லை. எமது தேவைகளுக்கு காணி தொடர்பான ஆவணங்கள். தேவையென விண்ணப்பித்தால், அந்த விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தால் பரிசீலனை செய்யப்பட்டு பிரதேச காணி பயன்பாட்டுக் குழுவின் சிபார்சுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. காணி பயன்பாட்டுக் குழுவின் சிபார்சுடன் விண்ணப்பங்கள் காணி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அவை அங்கு பரிசீலனை செய்த பின்னர் குடியிருப்பாளர்களுக்கு காணிக் கச்சேரி நடத்தப்பட்டு ஆணையாளரால் உரிய அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். காணிக்குரிய ஆவணங்கள் வழங்கக் கோரி விண்ணப்பித்த நாம் கடந்த ஒரு வருட காலமாக அதற்காகக் காத்திருக்கிறோம். பிரதேச காணி பயன்பாட்டுக் குழுவினரால் சிபார்சு செய்யப்பட்டும் பிரதேச செயலகத்தினர் இதுவரை காணி ஆணையாளருக்கு அறிவிக்க தயக்கம் காட்டிவருகின்றனர் என்றனர்.

(ஐ-9)

# கனடியத் தமிழர் பேரவையின் 'தமிழர் தெரு விழா 2020'

கனடா, ஓக. 30

கனேடியத் தமிழர் பேரவையால் ஒழுங்கமைப்பில் கடந்த ஐந்து வருடங்களாக சிறப்பாக நடைபெற்று வந்த 'தமிழர் தெரு விழா' நிகழ்வு இவ்வாண்டு முற்றுமுழுதாக வித்தியாசமானதொரு முறையில் நேற்று ஆரம்பமானது. கொவிட்19 நோய்த் தொற்றுக் காரணமாக இம்முறை 'தமிழர் தெரு விழா 2020' நிகழ்வானது இணையம் வழியாக கொண்டாடப்படுகிறது. இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2:30 மணி வரை நடைபெறும்.

இவ்வாண்டிற்கான சிறப்புப் பேச்சாளர்களாக இலங்கையிலிருந்து கம்பன் கழகத்தின் 'கம்பவாரிதி' ஜெயராஜ், தமிழகத்திலிருந்து தமிழ்மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்துவரும் ஜெகத் காஸ்பர் அடிகளார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

tamilfest.ca என்ற இணையத்தளத்தில் நிகழ்வுகளை பார்க்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# விழிப்புணர்வு பதாகைகள் கையளிப்பு



வவுனியா, ஓக.30

இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் வவுனியா கிளையின் அனுசரணையில் கொரோனாத் தொற்று தொடர்பான நூறு விழிப்புணர்வுப் பதாகைகள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

இதன் ஒரு கட்டமாக வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் பதாகைகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

நிகழ்வில் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் தாய் சேய் நல வைத்திய அதிகாரி தா.ஜெயரதன் , வவுனியா சுகாதார சேவைகள் மருத்துவ அதிகாரி திருமதி பாஸ்கரன் , சுகாதார கல்வி அதிகாரி எம்.கேதீஸ்வரன் , மாவட்ட பல் மருத்துவ அதிகாரி ஜெஸ்லியன் , மூத்த சுகாதார பரிசோதகர் க. தியாகலிங்கம் , வவுனியா கல்வி வலயப் பணிப்பாளர் மு. இராதாகிருஷ்ணன் , இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் வவுனியா கிளையின் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-222, 110)


# குருதிக்கொடை முகாம்

கிளிநொச்சி, ஓக.30

எழு தமிழ் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை கிளிநொச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இந்தக் குருதிக்கொடை முகாம் நடத்தப்படவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ஐ)



# வரணிக்கு அழைக்கப்படும் தென்மராட்சி பட்டதாரிகள்

சாவகச்சேரி, ஓக. 30

பட்டதாரி நியமனம் பெற்ற தென்மராட்சி பகுதியைச் சேர்ந்தவர்களுக்கான ஆரம்ப நிகழ்வு வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் கோவிலுக்கு அருகில் உள்ள தென்மராட்சி கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் இதைத் தெரிவித்தார்.

தென்மராட்சியில் 308 பட்டதாரிகள் நியமனம் பெற்றுள்ளனர். அவர்கள் அனைவரையும் உள்ளடக்க பிரதேச செயலக மண்டபம் போதிய இடவசதியுடன் இல்லை. அதனால் வரணி கலாசார மண்டபத்தில் ஆரம்ப நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(த-9)

# பல்கலை மாணவருக்கு நிதி உதவி

சாவகச்சேரி, ஓக. 30

வடக்கு மாகாணத்தில் இருந்து பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவான பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்களுக்கு தொடர்ந்தும் கல்வியை முன்னெடுப்பதற்கான உதவி வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண கல்வி பண்பாடு அலுவல்கள் அமைச்சால் விரைவில் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இதில் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 89 மாணவர்கள் மாதாந்தம் தலா 5 ஆயிரம் ரூபா வீதம்பெறவுள்ளனர்.

அதற்கான பதிவுகள் பிரதேச சமூக சேவைகள் அலகினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிதி மாணவர்களின் வங்கிக் கணக்குக்கில் வைப்பிலிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-9)

# சபை உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம்



கரைதுறைப்பற்று, ஓக. 30

கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்கள் 18 பேர் சமாதான நீதிவான்களாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ். லெனின்குமார் முன்னிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இவர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

(ஐ-19)

# இருவருக்கு தண்டம்

மன்னார், ஓக.30

கடல் சங்கு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான இருவருக்கு, மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றால் தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மன்னார் கரிசல் மற்றும் தாராபுரப் பகுதியில் இவர்கள் சங்குகளுடன் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் தமது குற்றங்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து தண்டம் விதிக்கப்பட்டது.

(க-60)

# வாயை அடக்காவிடில் ஓட ஓட விரட்டுவோம்

## மஹிந்த அணி கொழுப்புப் பேச்சு



**கொழும்பு, ஓக.30**

**தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன் எம்.பி. தனது வாயை உடனடியாக அடக்கி வாசிக்க வேண்டும். இல்லையேல் நாடாளுமன்றத்திலிருந்து அவரை ஓட ஓட வீட்டுக்கு விரட்டியடிப்போம்.**

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் முதல் இனமும் முதல் மொழியும் சிங்களம். அதேவேளை, முதல் மதம் பௌத்தம். மற்ற இனங்களும், மொழிகளும், மதங்களும் இரண்டாம் பிரிவைச் சார்ந்தவையாகும். இதை விக்னேஸ்வரன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதையும் மீறி அவர் நாடாளுமன்றத்தில் ஊளையிட்டால் அவரை சபையிலிருந்து வெளியேற்றுவோம்; ஓட ஓட வீட்டுக்கு விரட்டியடிப்போம். தமிழ் அரசியல்வாதிகள் வடக்கில் ஊளையிடலாம். ஆனால், அதியுயர் சபையான நாடாளுமன்றத்தில் ஊளையிட்டால் எந்தப் பயனும் அவர்களுக்குக் கிடைக்காது. முதலமைச்சராகப் பதவி வகித்து வடக்கு மாகாணத்தை நாசமாக்கிய விக்னேஸ்வரன், இனவாதத்தையும் மொழிவாதத்தையும் மதவாதத்தையும் வைத்து அரசியல் நடத்தலாம் என்ற நோக்குடன் தற்போது நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளார். அவரின் இலக்குகள் எதுவும் எம்மை மீறி நாடாளுமன்றத்தில் நிறைவேறாது- என்றார். (எ-22)

# அதிக பணப் பரிமாற்றம் வடக்கில் 6 பேர் கைது!

முல்லைத்தீவு, ஓக.30

வங்கிக்கணக்கின் ஊடாக அதிகளவான பணப் பரிமாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தனர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் வடக்கில் ஆறு பேர் இதுவரை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் இருவரும், முல்லைத்தீவில் இருவரும், வவுனியாவில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் பெண் ஒருவரும், வணிகர் ஒருவரும் நேற்றுமுன்தினம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வெளிநாடுகளில் இருந்து அதிக பணம் அனுப்பப்பட்டுள்ளதை அடுத்தே இந்தக் கைது நடவடிக்கைகள் நடந்துள்ளன என்று முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் அனைவரும் அவர்களது பிரிவுகளில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டு, விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-19)

# வாள்வெட்டு குழு சந்தேகத்தில் இருவர் கைது!



யாழ்ப்பாணம், ஓக.30

வாள்வெட்டு மற்றும் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்கு இடமான நடமாட்டத்தை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்களுக்குக் குற்றச் செயல்களுடன் தொடர்புள்ளதா என்பது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

# தனிமைப்படுத்தலில் இருந்த பெண் ஓட்டம்

கொழும்பு, ஓக.30

அளுத்கம சுற்றுலா விடுதியொன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பின்னர், நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட வெளிநாட்டுப் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் தப்பியோடியுள்ளார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 80 வயதுடைய பெண் ஒருவரே தப்பியோடியுள்ளார்.

இந்தப் பெண் மனநோய்க்கு உட்பட்டமைக்கான அறிகுறிகளை வெளிக்காட்டியமையால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் அவருக்கு மருந்து வழங்கத் தாதி ஒருவர் தேடியபோது, அந்தப் பெண் தப்பியோடியமை கண்டு பிடிக்கப்பட்டது. அதேவேளை, அந்தப் பெண்ணுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், அந்தப் பரி சோதனை அறிக்கைகள் இன்னமும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தப்பியோடிய பெண்ணைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

# யாழ்ப்பாணத்தில் மாட்டு வண்டில் சவாரி

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கொத்து தரவை சவாரித்திடலில் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட சவாரிச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் மாபெரும் மாட்டு வண்டி சவாரிப்போட்டி நடைபெறவுள்ளது. இங்கு அ,ஆ,இ,ஈ,உ என்ற ஐந்து பிரிவு களில் போட்டி நடத்தப்படுவதுடன் பிற்பகல் 1.30 மணிக்கு "உ" பிரிவுக்கான பதிவுகள் நிறுத்தப்படும் எனவும் ஏற்பாட் டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந-21)



# மகளின் முறைப்பாட்டால் தடுப்பு காவலில் பெற்றோர்

*வவுனியாவில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஓக.30

பெற்றோர் தன்னைத் துன்புறுத்துகின்றனர் என்று சிறுமி ஒருவர் கொடுத்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் பெற்றோரை நேற்று கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வவுனியாவில் நடந்துள்ளது. செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்ட கிராமம் ஒன்றில் வசிக்கும் 17 வயதுச் சிறுமியே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார். இந்த மாணவி தன்னைப் பெற்றோர் துன்புறுத்து கின்றனர் என்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதையடுத்து பொலிஸார் மாணவியை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட செட்டிக்குளம் பொலிஸார், மாணவியின் முறைப்பாட்டுக்கு அமையப் பெற்றோரைக் கைது செய்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்கள் வவுனியா மாவட்ட நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-18)

# ஜயசிங்கவுக்கு மீண்டும் பதவி?

கொழும்பு, ஓக. 30

பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் அநுருத்த ஜயசிங்கவை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதில் சிக்கல் இல்லை என அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான நிலைப்பாட்டை நாளை திங்கட்கிழமை அறிவிக்குமாறு சட்டமா அதிபருக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

யாழ். புங்குடுதீவில் மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் குற்றவாளியான சுவிஸ் குமார் என்றழைக்கப்படும் மகாலிங்கம் சிவகுமார் என்பவருக்கு உதவி புரிந்த குற்றச்சாட்டில், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் அநுருத்த ஜயசிங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் அவர் தற்போது பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அரசியல் பழிவாங்கும் நோக்கில் தாம் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளேன் என்று லலித் அநுருத்த ஜயசிங்க, அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையான லலித் அநுருத்த ஜயசிங்க, தன்னை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதற்கான பணிப்புரையை விடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தமது சேவை பெறுநர் ஓய்வு பெறுவதற்கு 11 மாதங்களே எஞ்சியுள்ளது என்று சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் அநுருத்த ஜயசிங்க சார்பில் ஆணைக்குழுவில் முன்னிலையான சட்டத்தரணி மகேஸ் கொட்டுவெல்ல குறிப்பிட்டார். இந்த கோரிக்கை தொடர்பான நிலைப்பாடு நாளை 31 ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற நீதியரசர் உபாலி அபேரத்ன அறிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பான சட்ட மா அதிபரின் நிலைப்பாட்டை வினவிய போது, இது தொடர்பாக ஆராய வேண்டும் என சட்ட மா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ரொஹாந்த அபேசூரிய குறிப்பிட்டார். (எ-இ)

# 2023 இல் பால் உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெறும்

கொழும்பு, ஒக.30

**இலங்கை 2023ஆம் ஆண்டளவில் பால் உற்பத்தியில் ஒரு தன்னிறைவு நாடாக விளங்கும் எனக் கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.**

தோட்டக் கம்பனிகளுக்கும், உள்நாட்டு முதலீட்டுத் தரப்புகளுக்கும் இடையில் ஒரு விசேட பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:


நாட்டில் 22 தோட்டக் கம்பனிகள் உள்ளன. ஒரு தோட்டக் கம்பனிக்கு ஆயிரம் பால் மாடுகளை வாங்குமாறு நாம் கூறினோம். அதே போன்று, அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் வழங்கும்.

அதற்கு இணங்க, தொழில்நுட்ப அறிவு, நிவாரணம், நிதி உதவி, கால்நடைகளின் உணவு உற்பத்திக்கான நிலம் மற்றும் ஏனைய வசதிகள் அனைத்தும் வழங்கப்படும்.

தற்பொழுது வருடாந்தம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பால் இதன் மூலம் 422 மில்லியன் லீற்றர்களிலிருந்து 750 மில்லியன் லீற்றர்களாக அதிகரிக்க முடியும்.

அதேபோல் இந்தத் திட்டத்துக்குப் பெருந்தோட்டக்கைத்தொழில் அமைச்சின் உதவியைப் பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்க்கின்றோம்.

இதன் மூலமாக நாம் உள்ளூர் பால் உற்பத்தியாளர்களைப் பாதுகாப்போம். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு இதற்கு முன் 37 வீதமாகக் காணப்பட்டது. ஆனால் கடந்த காலத்தில் இது 7 வீதமாகக் குறைந்துள்ளது எனத் தெரிவித்தார். (வ-இ)



## கொரோனாவை தடுப்பதில் இலங்கை வெற்றிகரம்

### நோர்வே தூதுவர் பெருமிதம்

கொழும்பு, ஒக.30

கொரோனாத் தொற்றை ஆரம்பத்திலேயே இனங்கண்டு அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்ததனூடாக கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை வெற்றிகரமாக செயலாற்றியுள்ளது என இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜீன யரன்லி எஸ்கடேல் தெரிவித்துள்ளார். பிரதமர் மஹிந்த ராஜபக்சவை கொழும்பு அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயலாற்ற நோர்வே எதிர்பார்த்துள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான வணிக உறவுகளை மேலும் மேம்படுத்திக் கொள்வதற்கு அதிகளவு வாய்ப்புகள் காணப்படுகின்றன.

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக எழுந்துள்ள பொருளாதார தாக்கங்கள் தொடர்பிலும் பிரதமர் ராஜபக்ஷ மற்றும் தூதுவர் எஸ்கடேல் ஆகியோர் கலந்துரையாடியிருந்தனர். நீண்ட கால அடிப்படையில் சமூகப் பொருளாதார தாக்கங்களைக் குறைத்துக் கொள்வதற்கு உதவிகளை வழங்கும் நடவடிக்கைகளை நோர்வே மேற்கொண்டிருந்தது என அவர் தெரிவித்தார். (வ)

## சிகிச்சைபெற்ற சிறுமி தப்பி ஓட்டம்

சாவகச்சேரி, ஒக.30

சாவகச்சேரி மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில். சிகிச்சைபெற்ற 15 வயது சிறுமி வைத்தியசாலையிலிருந்து தப்பித்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

தனிப்பட்ட காரணங்களுக்காக நஞ்சு அருந்திய இச் சிறுமியை அவரது உறவினர்கள் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்ற சிறுமி, அதிகாலையில் மலகூடம் செல்வதாகக் கூறிச் சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் அவர் வெளியே வராததால் அங்குள்ள உத்தியோகத்தர்கள் சென்று பார்த்தபோது. அங்கு அவரைக் காணவில்லை.

சிறுமி ஜன்னல் வழியாக குதித்து தப்பியோடியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மருத்துவமனை பணியாளர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இணைந்து தேடியும் அவரைக் காணாததால் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-9)

## இந்தியாவுக்கான இலங்கை தூதுவராக மிலிந்த

கொழும்பு, ஒக.30

இந்தியாவுக்கான இலங்கை தூதுவராக முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட நியமிக்கப்படவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2001 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட மிலிந்த மொரகொட, பல்வேறு அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளதுடன், இறுதியாக கொழும்பு மாநகர சபையின் எதிர்க்கட்சி தலைவராகவும் இருந்துள்ளார்.

இந்தியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நியமனம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ர-இ)

## சம்பிக்கவின் வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக.30

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் அவரின் சாரதி துஷித திலும் குமார, உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுதத் அஸ்மடல்ல ஆகியோருக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது எதிர்வரும் 17 ஆம் திகதி விசாரணையை ஒத்திவைத்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார். நேற்றைய வழக்கு விசாரணையின்போது மூன்று பிரதிவாதிகளும் மன்றில் ஆஜராகி இருந்தனர். (ந-இ)



கிளிநொச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் ஒழுங்கமைப்பில், சுவிஸ் ஆதாரம் அமைப்பின் நிதி அனுசரணையில் கடந்த வியாழக்கிழமை பத்து மாற்றுதிறனாளிகளுக்கு ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டன. கண்டாவளைப் பிரதேச மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த ஊன்றுகோள்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ர-21)

## போதைப்பொருள், புகையிலைப் பயன்பாட்டால் தினமும் 80 முதல் 100 வரையானோர் உயிரிழப்பு

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக.30

போதைப்பொருள் மற்றும் புகையிலை பயன்பாடு காரணமாக தினமும் 80 முதல் 100 வரையான இலங்கையர்கள் உயிரிழக்கின்றனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஷெனால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இந்த நிலையில், நாட்டுக்கு போதைப்பொருள் மற்றும் புகையிலை ஒழிப்பு திட்டம் தேவை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் மற்றும் புகையிலை கட்டுப்பாடு குறித்து 1000 மருத்துவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்கான சிறப்பு திட்டத்தை எனது சங்கம் ஆரம்பித்துள்ளது.

இலங்கை முழுவதும் இந்தத் திட்டத்தை மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் செயல்படுத்த சுகாதார அமைச்சு, தேசிய புகையிலை மற்றும் போதைப்பொருள் தடுப்பு ஆணையம், தேசிய அபாயகரமான மருந்துக் கட்டுப்பாட்டுச் சபை, கல்வி அமைச்சு மற்றும் பிற பொறுப்புள்ள அமைப்புகளை ஒன்றிணைக்கவுள்ளோம் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ர-இ)



தெல்லிப்பழை

# அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

# தேர்த்திருவிழா சிறப்பிதழ்

**30.08.2020**



## தேவஸ்தான வரலாறு



துர்க்காதேவி தேவஸ்தானமானது ஏறக்குறைய 350 ஆண்டுகளுக்கு மேலான பழமைவாய்ந்த ஆலய மாகும். இவ் ஆலயமானது ஈழவள நாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாண நகரின் வடக்கே தெல்லிப் பழை கிராமத்தில் உழுகுடைப் பதியின் துர்க்காபுரம் கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ளது. சைவ மரபிலே வாழ்ந்த பெரியார் கதிர்காமர் என்பவர் 1750 ஆம் ஆண்டளவில் தலயாத்திரை செய்யும் நோக்கில் இந்தியாவில் உள்ளகாசிக்குச் சென்று 10 ஆண்டுகளுக்கு மேலாக தங்கியிருந்து தமிழ் சமஸ்கிருதம் ஆகியவற்றில் கற்றுத் தேர்ந்து துர்க்கா தேவி உபாசகரானார். அவர் 1760ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் மீளத் திரும்பியபோது துர்க்காயந்திரமொன்றையும் வெண் கலத்திலான திருமுகக் கெண்டி உருவமொன்றையும் கொண்டு வந்தார். தேவியின் அருளால் துர்க்கா சக்கரத்தை ஸ்தாபித்த இடமே தெல்லிப்பழை உழுகுடைப் பகுதியாகும். கதிர்காமரின் ஆன்மார்த்த பூசை நிலைய மாக விளங்கிய இவ் ஆலயம் பராத்த பூசை நிலையமாக காலப் போக்கில் விருத்தியடைந்தது. இவ் ஆலயமானது கதிரேசபிள்ளை நாகநாதர் உடையாரின் தனி முகாமையிலிருந்த போதிலும் மிக நீண்ட காலமாகப் புனருத்தாரணம் எதுவும் செய்யப்படாததை அறிந்த முகாமையாளர் இவ் ஆலயத்தைப் புன ரமைக்க விரும்பி உறுதிச் சாதனம் இல.2881, 26.04.1949 ஆம் திகதியது மூலம் 11 பேர் கொண்ட அறங்காவலர் சபை யொன்றை ஸ்தாபித்து சில குறிப்பிட்ட திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் 1953ஆம் ஆண்டு இவ் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 05.05.1963இல் முன்னை நாள் கல்வித் திணைக்கள அதிகாரி திரு. சே. தியாகராசா தலைமையில் ஒரு

திருப்பணிச் சபை நியமிக்கப்பட்டது. இச்சபையின் அயராத முயற்சியினாலும் தெல்லிப்பழை வாழ் இளைஞர்களின் சிரமதான இயக்கத்தின் மூலம் பொது மக்களின் ஆதரவினாலும் 08.09.1965 இல் முதலாவது மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நிறை வேறியது. இளைஞர் களின் சிரமதான இயக்கமே பின்னர் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கமாக மாற்ற மடைந்தது. 18.05.1966 இல் 15 பேர் கொண்ட புதிய நிர்வாகம் தர்மகர்த்தா சபையால் தெரிவு செய்யப்பட்டது. அதன் பொருளாளராகப் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தெரிவு செய்யப்பட்டு 1977 வரை சிறப்பாக செயற்பட்டு 20.01.1977 இல் தலைமைப் பொறுப்பை ஏற்று 2008 இல் சிவபதமடையும் வரை தேவஸ்தானத்தின் திருப்பணிகளை சிறப்பாக நிறைவேற்றினார். இவர் காலத்தில் 17.04.1981, 07.09.1997 ஆகிய தினங்களில் மகா கும்பாபிஷேகங்கள் நிறைவேறின. 15.06.2008இல் அம்மையார் சிவபதமடைந்த பின் தேவஸ்தானத்தின் தலைமைப் பொறுப்பினை செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்கள் ஏற்றுக் கொண்டார். இவர் அம்மையாரின் அடிச் சுவட்டைப் பின்பற்றிப் பலதிருப்பணிகள் சமய சமூகப் பணிகளைத் தளர்வில்லாது நிறைவேற்றி வருகின்றார்.

**தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:**

Peticka
Fashion




Dealers in Sarees, Shalwars,
Modern Dress,
& Frocks Exclusive Mother & Child,
Baby Care Products & Garments.

No.28, Subramaniam Road, Chunnakam.
T.P: 021 224 3800 / 4000, 077 945 8612



ஜீவன்
மருந்தகம்




No.50,52, சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.
T.P: 021 224 2626/ 076 722 8840

# தெல்லிப்பழை
## அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 30.08.2020




ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்
நடராசா கஜந்தன்
Since 1978
NJ
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன் நகையால் மேலும்
உங்கள் புன்னகை ஒளிரும் விரையுங்கள் நியூ மைதிலிக்கு

38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 221 7878 Fax:021 2217877
newmaithily40@gmail.com
New Maithily Jewellers 0094212217878

அல்லல் போக்கும் அன்னை துர்க்கையின்
அருளாட்சி காண்போம்.
யாழ்ப்பாண இரும்பகம்
ஏசியன் பெயின்ற்ஸ்
மலிவு விலையில் பெயின்ற் வகைகள் பெற்றுக் கொள்ளலாம்.
32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5589 | 7028

J.T. ரான்ஸ்போட்ஸ் சேவிஸ்
யாழ் —— கொழும்பு —— யாழ் பாரஊர்தி
போக்குவரத்து சேவை
135, ஆட்டுப்பட்டி வீதி, கொழும்பு-13. 0114987935
190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 5772214
32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 2225589| 7028

Eut (Pvt) Ltd.
General Manager
: V.Sriskantharasa,
077 656 6873
Furniture Showroom


Head Office :
Chunnakam East, Chunnakam.
Tel : 021 224 0110
E-mail : Srieut@gmail.com
Branch :
150, K.K.S. Road, Chunnakam.
Tel : 021 454 6330, 077 478 4376
E-mail : Sinthujaneut@gmail.com


எம்.ரி.எஸ்
நகைத் தொழிலகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்

M.T.S. Jewellery Work Shop
42, Dr.Subiramaniyam Road, Chunnakam.
Tel : 071 913 0024, 021 720 0124

தேசம் போற்றும் தெல்லி நகர் துர்க்கையின்
தேர் திருவிழா காண திரண்டு வாரீர்!
கிருத்திகா

என்ரர்பிறைஸ்
&
Butterfly Metal
K.K.S. Road, Jaffna.
077 454 2223

Thisha
Hotel & Party Hall

A/C, Non A/C Rooms
Restaurant Entertainment Park

K.K.S.Road, Chunnakam.
E-mail : thisahotel@gmail.com
Tel : 021 224 3940, 077 398 1094,
077 929 7909

Sothy
Studio


தேசிய அடையாள அட்டை
புகைப்படங்களுக்கான அரச அங்கீகாரம்
பெற்ற புகைப்பட நிலையம்
அனைத்து மங்கள விழாக்களுக்கும்.
டிஜிட்டல் முறையில் படம்பிடித்துத் தருதல்
சின்தேட்டி டிஜிட்டல் அல்பம் தயாரித்தல்.
பழைய படங்களைப் புதுப்பித்தல். கறுப்பு
வெள்ளைப் படங்களை கலராக்குதல்.
டியூறோ பிறேம் & பொக்ஸ் பிறேம்
போடுதல் என்பன சிறந்த
முறையில் செய்து தரப்படும்.
K.K.S. Road, Mallakam.
& Kuppilan Junction, Kuppilan.
K.K.S. Road, Tellippalai.
Tel : 077 659 2346, 077 151 0657

# தலைமையை ஏற்கத் தயார்

## முன்னாள் எம்.பி.ருவன் விஜேவர்தன

கொழும்பு, ஓக. 30
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்க நான் தயாராகவுள்ளேன் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.
அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
'கட்சியின் தோல்வியாக இந்த சந்தர்ப்பத்தை நோக்காது. அடுத்தகட்ட செயற்பாடுகளுக்கான சந்தர்ப்பமாக இதனைக் கருதுவோம். ஐக்கிய தேசியக்கட்சிக்குள் தேவையான மறுசீரமைப்புகளை மேற்கொள்ள தற்போது சந்தர்ப்பம் எழுந்துள்ளது. தோல்விக்கான காரணங்களைக் கண்டறிந்து, கட்சி ஆதரவாளர்களின் நம்பிக்கையை வென்றெடுக்க தற்போது சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. கட்சியின் தோல்வியாக இந்தச் சந்தர்ப்பத்தை நோக்காது, அடுத்தகட்ட செயற்பாடுகளுக்கான சந்தர்ப்பமாக கருதுவோம் என்றார். (ஐ-இ)



# தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு இன்று தேர்

சிவரம்யா

இலங்கையில் வடபகுதியில் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் மிகவும் புகழ்பெற்றது. அன்னை எமக்கெல்லாம் அருள்பாலிக்கிறாள். யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை பெருவீதியில் எட்டாம் கல் தொலைவில் மேல் திசையை நோக்கினால் அனைவரையும் வரவேற்பது அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயம் எனப் பதிக்கப்பட்ட அலங்கார வளைவாகும்.
மிகச் சிறப்பான கட்டுமானப் பணிகள் ஆகம விதிப்படி அமைந்தமை, பஞ்சதள இராஜகோபுரம் அமைத்தமை, வெளிவீதியில் திருமுறை மண்டபம், திருமண மண்டபம், இரு பெரிய அன்னதான மண்டபங்கள், தீர்த்தக் கேணி, யாத்திரிகர் விடுதிக்கான விதவைகளுக்கான அன்னையர் இல்லம், செந்தமிழும் சிவநெறியும் சிறக்க அறிவுப் பசி தீர்க்க ஆய்வுக்கான பெருநூலகம் போன்றவை பல கோடி ரூபா மதிப்பில் யாவரையும் வியப்பில் ஆழ்த்தும் பாங்கில் உருவாக்கியமை அன்னையின் அருளாகும். பிரதம சிவாச்சார்களுக்கான வதிவிடமும் சிறப்பாக அமைந்துள்ளது.
மேலும் நல்லைக்கந்தனின் வடமேற்கு வீதியில் சைவக் கலாசாரம் பேணவும் நல்லூர்ப் பெருவிழாக்கால அன்னதானம் மற்றும் திருமண தேவைகளுக்குமான சிறந்ததொரு மணிமண்டபம் அமைத்துள்ளன. அவ்விடத்தில் பணியாற்றுபவர்கள் தமது கடமையைச் சிறப்பாக மேற்கொள்கின்றனர்.
சைவ சித்தாந்தத்திலே மற்றெல்லா மதநெறிகளையும் கடந்த நிலையில் சக்தியானவள் உயர்தனிச் சிறப்பைப் பெறுகிறாள். சக்தியானவள் பல்வேறு வடிவங்கள் தாங்கி நிற்கின்றாள். சுப்பிரமணிய பாரதியார் சக்தியைப் பெரிதும் போற்றி காளி, சக்தியெனப் பாடியுள்ளார். வங்காளத்தில் இராமகிருஷ்ண பரமஹம்சர் காளியை நினைத்து உருகி வழிபட்டார்.
இந்நாள்களில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் ராகு காலத்தில் செய்யப்படும் துர்க்கை சுலோகங்களை கோயில்களில் பாடுதல் சிறப்பு தரும். மங்கள வாரத்தில் செய்யப்படும் ராகுகால பூசை செவ்வாய் தோஷம், ராகுதோஷம் முதலியவற்றை நீக்கி பெண்களுக்கு மாங்கல்யப் பேறு, புத்திரப் பேறு முதலியவற்றை வழங்கவல்லது என்ற நம்பிக்கை உள்ளது.
தெல்லிப்பழை துர்க்கை அம்மனின் மகோற்சவ காலம் எமக்கு அருளை வழங்கட்டும். அம்மன் மீது பக்திகொண்டு பணிவோம்.



### நாடுமுழுதும்
# 232,423 பேர் வறட்சியால் பாதிப்பு

கொழும்பு, ஓக. 30
வறட்சியால் இந்த வருடத்தின் கடந்த 5 மாதங்களில் 69 ஆயிரத்து 571 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 32 ஆயிரத்து 423 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.
குறித்த காலப்பகுதிகளில் 10 மாவட்டங்கள் வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன என இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, ஹம்பாந்தோட்டை, குருநாகல், பொலநறுவை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் திருகோணமலை மாவட்டமே அதிகமாக வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 27 ஆயிரத்து 681 குடும்பங்களைச் சேர்ந்த 89 ஆயிரத்து 268 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ப)

# வன அழிப்பு; வர்த்தகர் கைது

புத்தளம், ஓக.30
ஆனைவிழுந்தான் பாதுகாக்கப்பட்ட வனத்தின் ஒரு பகுதியை இயந்திரம் மூலம் அழிப்பதற்கு ஆலோசனை வழங்கிய குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். குறித்த வனப்பகுதியை இயந்திர வாகனம் ஒன்றின் ஊடாக அழித்த சந்தேகநபரை நேற்றுமுன்தினம் பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணையை அடுத்தே இவ் வர்த்தகர் கைது செய்யப்பட்டுள்ளார். இதே வேளை இலங்கையில் அழிவை எதிர்நோக்கிய தேசிய ரீதியான அரியவகை உயிரினங்கள் மற்றும் விசேட பறவை இனங்களை இந்த வனப்பகுதியில் காண முடியும் இத்தகைய பல சிறப்பியல்புகள் கொண்ட ஆனைவிழுந்தான் வனப்பகுதியின் ஒரு பகுதியை அழிவுக்கு ஏற்படுத்தியுள்ளமை கவலையளிக்கின்றது என சூழலியலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ஐ)

# தங்கொட்டுவையில் திடீர் தீப்பரவல்

தங்கொட்டுவ,ஓக. 30
தங்கொட்டுவ கலுவச்சிமுல்ல பகுதியில் ஏற்பட்ட திடீர் தீப்பரவலால் மின் உபகரண பழுது பார்க்கும் நிலையமொன்றும், வீடொன்றும் பெரியளவில் சேதமடைந்துள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.
பொலிஸ் மற்றும் பிரதேசவாசிகளால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.
மின் கசிவு தீப்பரவலுக்கு காரணமாக இருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.
இதன்போது எதுவித உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பான விசாரணைகளை தங்கொட்டுவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-இ)

# துப்பாக்கிகளுடன் இருவர் கைது

கொழும்பு, ஓக.30
யக்கலமுல்ல எல்ல இகல மற்றும் கல்கந்த பகுதிகளில் துப்பாக்கி களுடன் இரண்டு சந்தேகநபர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.
யக்கலமுல்ல பொலிஸாருக்குக் கிடைப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து குறித்த பகுதியில் திடீர் சுற்றிவளைப்பினை மேற்கொண்ட போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 32 மற்றும் 45 வயதுடையவர்களாவர். இவர்களிடமிருந்து போரா 12 வகைத் துப் பாக்கிகள் இரண்டும், தோட்டாக்கள் இரண்டும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# கரையோரத்தை தூய்மைப்படுத்த பாதுகாப்புக் குழு

மட்டக்களப்பு, ஓக.30
கரையோரப் பிரதேசங்களில் சூழல் மாசடைதலை கட்டுப்படுத்தும் நோக்கில், பிரதேச கரையோரப் பாதுகாப்பு குழு நிறுவப்பட்டுள்ளது. இக் குழுவானது மட்டக்களப்பு மாநகர முதல்வர் தலைமையில் நிறுவப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் கரையோர வலயங்களில் இடம்பெறும் சுற்றாடல் மாசடைவினைக் கட்டுப்படுத்தி, எதிர்கால சந்ததியினருக்கு சுத்தமான நாட்டினைக் கையளிக்கும் தூரநோக்கோடு இக்குழுவானது செயற்படவுள்ளது என மட்டக்களப்பு மாநகர முதல்வர் தெரிவித்துள்ளார். (ற)

# வட இலங்கையில் ஒரு வேடந் தாங்கல்




■ சி.சிவானுஜன்

உள்ளூர் பட்சிகள், வலசைப் பறவைகள் என பெருந்திரளாக குவிந்து, இந்தியாவின் வேடந் தாங்கல் பறவைகள் சரணாலயமா இது எனும்படி இருக்கின்றதுயாழ்ப்பாணமாவட்டத்தில்அமைந்துள்ள குருவிக்காடு. இங்கு பறவைகளின் கீச்சொலிகளும், உடல் வனப்புக்களும், சிறகசைப்புக்களும் அக்காட்டையே கோலாகலம் ஆக்குகின்றன.



குருவிக்காடு

யாழ்ப்பாண மாவட்டம் தென்மராட்சிப் பகுதியில் உள்ள தொரு கிராமம் சரசாலை, வடமராட்சிப் பகுதியில் உள்ள தொருகிராமம்கப்புது. இந்தஇரண்டுகிராமங்களுக்கும் இடையே விரிகிறது உப்பாறு என்னும் சிற்றாறு, பெயரளவில்தான் இது ஆறு. கோடையில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிக்கான பொருத்தமான தரவையாக இது மாறி விடுகிறது. இதன் நீரேந்தும் பிரதேசம் முழுவதும் பரந்து கிடக்கிறது குருவிக்காடு.



தாவர சங்கமம்

நெடுத்தும் பரந்தும் விரிந்த கண்டல்ச்சாகியங்கள், காலத்துக்கு காலம் நிறம் மாறும் இலைகள் கொண்ட தில்லை மரங்கள், ஊதா நிறப் பூப் பூக்கும் மரங்கள், மஞ்சளாய் எரியும் ஆவாரம் பூக்கள், செந்நிறக் கொத்துப் பூக்களுடன் காட்டு அரளி மரங்கள், இவற்றுடன் போட்டி போடும் செம்மஞ்சள் காய் காய்க்கும் தாழம்பூ மரங்கள் என வகை வகையாய் மரங்களும் செடிகளும் நிறைந்து வனப்புடன் காணப்படுகிறது இப்பிரதேசம்.



வகைவகையாய் வலசைப்பறவைகள்

மாரிகாலம் ஆரம்பித்ததும், காடு எது, நிலம் எது, என்று தெரியாத அளவுக்கு மழை வெள்ளத்தால் நிறைந்து விடுகிறது. இங்குதற்பொழுதுகாட்டு வாத்து இனத்தைச் சேர்ந்த நீல வாத்துக்கள், காடைகள், கௌதாரிகள், சாம்பல் புறாக்கள், நாகணவாய்கள், பச்சைப்புட்கள், ஆக்காட்டிகள் எனப் பல வகைப்பறவை இனங்கள் வருடம் முழுவதும் காணப்படுகின்றன. மழைக்காலம் ஆரம்பித்ததும் நெடுங்கால் நாரைகள், பெரும் பூ நாரை, செங்கால் நாரை, சங்கு வளை நாரை, வெள்ளைக் கொக்கு, முக்குளிப்பான், சாம்பல் நாரை, கரண்டிவாயன், அரிவாள் மூக்கன், நத்தை கொத்தி, நாரை போன்ற நூற்றுக்கணக்கான வகைப்பறவைகள், வலசைப்பறவைகளாக இப்பகுதிக்கு வந்து சேர்கின்றன.



ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் இந்தக் காட்டுப் பகுதியில் நிறையும் நீர் நிலைகளை நோக்கி பல்லாயிரக்கணக்கான பட்சிகள் வருகை தருகின்றன. சித்திரை வைகாசிமாதங்கள்வரைமாறிமாறிஇப்பிரதேசமெங்கும் வசிக்கின்றன. மழை குறைவான வருடங்களில் வழமைக்கு முன்னரே புறப்பட்டு விடுகின்றன. இங்கு வசிக்கும் காலப்பகுதியில் காலையில் இரை தேடச்சென்று மாலைகாட்டைஅடைந்துஅங்குள்ளகூடுகளில்ஒன்று சேர்கின்றன. இக்காலப்பகுதியில் இனம்பெருக்கும் வலசையினங்களும் இக்காட்டில் தங்கி வாழ்வது குறிப்பிடத்தக்க சிறப்பம்சம்.

வலசை புலம்பெயர்தல்


பெருநிலப்பரப்பின் ஒரு பகுதியிலிருந்து இன்னோர் பகுதிக்கு இரை தேடல், இனப்பெருக்கம், தகாத சூழலைத் தவிர்த்தல் போன்றவற்றிற்காக ஆண்டுதோறும் குறித்த காலப்பகுதியில் புலம்பெயர்தலை வலசை போதல் என அழைக்கின்றனர். தமது வாழ்நிலத்தில் தாங்கிக்கொள்ள முடியாத சூழலியல்நிலைமைகள் ஏற்படும்போது , உதாரணமாக அதிக குளிர், அதிக வெப்ப நிலை போன்ற நிலைமைகளில் இவ்வாறு பறவையினங்கள் பெருமளவில் வலசை போகின்றன. வலசை செல்லச் சில வாரங்கள் முன்னரே தொலை தூரத்துக்கான நீண்ட பயணத்துக்குத் தம்மை உடல் ரீதியில் தயார்ப்படுத்திக் கொள்ளும் விதத்தில் வழமைக்கு மாறாகஅதிகஅளவுஉணவைஉள்ளெடுத்துதம்மைக் சுறு சுறுப்பாக்கிக் கொள்கின்றன. வருடந்தோறும் தவறாமல்குறிப்பிட்டபிரதேசத்தைவந்தடைகின்றன. குறிப்பாக குளிர் பிரதேசங்களான சைபீரியா போன்ற பிரதேசங்களிலிருந்து இவ் வலசைப் பறவைகள் வந்தடைகின்றன.

மரங்கள் எங்கணும் வண்ணச்சிறகுகள் மூடுமாறு கூட்டம் கூட்டமாக ஆறுகின்றன. இவ் வலசைப் பறவைகள் மூலம்மரவிதைகள்பரம்பல், பூச்சிப் பீடைகளின் கட்டுப்பாடு, கழிவுகளால் மண் போசணை அதிகரித்தல் போன்றணநிகழ்கின்றன. இப்பறவைகளையும்குருவிக்காட்டின்அழகுநீர்வெளிகளையும்பார்த்துஇரசிக்கவும், படம் பிடிக்கவும் ஆண்டுதோறும் மக்கள் வந்தவாறே உள்ளனர்.


அழிவை எதிர்நோக்கும் குருவிக்காடு

சமீபகாலமாக இக்காட்டை ஊடறுத்துச் செல்லும் வீதியின்இருமருங்கும்பெருமள்வில்கழிவுப்பொருட்களை வேறிடங்களிலிருந்து கொண்டு வந்து சிலர் வீசிச் செல்வது கவலைக்குரியது. தமது சொந்த மண்ணை, இயற்கை வனத்தை அசிங்கப்படுத்தும் வகையிலான இச்செயற்பாடு தன் தாயின் மீது கரியள்ளிப் பூசுவதற்கு ஒப்பானது. உரிய திணைக்களங்களோ அரசோ இது குறித்து நடவடிக்கை எடுக்கட்டும் எனக் காத்திருக்காமல் எல்லைக் கிராம மக்கள் மாலை வேளைகளில் அக்காட்டில் இடப்பட்டிருந்த பெருமளவு கழிவுப் பொருட்களை தம் கூட்டு முயற்சியால் நீக்கினர். ஆயினும் அப்பகுதியில் மீண்டும் அப்பாதையை பயன்படுத்தியோர் கழிவுகளை சிறிதளவும் மனச்சாட்சி இன்றி வீசிச் செல்கின்றனர்.

இப்பகுதிக்காட்டினுள்சிலவருடகாலப்பகுதிக்குமுன்னர் மலக்கழிவுகள் கொட்டப்பட்டு வந்த போது அயற்கிராமமான சரசாலை மக்கள் பல விதமாக தம் எதிர்ப்பினை வெளிப்படுத்தி அதனைத் தடுத்தனர். அக்காலப்பகுதியில் அவ்வூர் மக்கள் மலக்கிருமிகளால் உருவாகும் தைபொயிட்நெருப்புக்காய்ச்சல் போன்றவற்றால் பீடிக்கப்பட்டனர். வன ஜீவராசிகளும் பாதிக்கப்பட்டன. தற்போது பெருமளவான பாதிப்பை ஏற்படுத்தவல்ல கழிவுகள் குருவிக்காட்டினுள் வீசப்படுகின்றன. இதனால் அரிய கண்டல்த் தாவர சாகியம் அழகை இழந்து அழிவை எதிர்நோக்குவதுடன் அவற்றை வாழிடமாக கொண்டகாட்டுப்பட்சிகள்,மிருகங்கள்வலசைப்பறவைகள் உட்பட எல்லைக்கிராம மக்களும் பாதிக்கப்படுகின்றனர்.



பல்கலைக்கழக மாணவர்கள் பலரின் கள ஆய்வு, இறுதி ஆய்வு நூல் போன்றவற்றின் ஆய்வுக்களமாக இக்காடுவிளங்கிவந்துள்ளது. பள்ளிவிடுமுறைகளின் போது இக்குருவிக்காட்டைகண்டுகளிக்கமாணவர்கள் வருகை தருகிறார்கள். அத்துடன் இன்னமும் இயற்கையோடு இயைந்து வாழும் பல மக்களின் மூலிகைத் தேவைகளைபூர்த்திசெய்தும்வருகிறது. இக்காட்டினை மாசுபடுத்துவதிலிருந்து பாதுகாத்து எம் முன்னோர் எவ்வாறு எம்மிடையே எந்தவித சிதிலமுமின்றி கையளித்துச் சென்றனரோ அவ்வாறே, எதிர்காலச் சந்ததியிடம் அதனை வழங்க வேண்டியது எமது கடமையாகும்.




ஆர்.பிரகாஷ்

# கிணற்றடி விவசாயம் வேண்டும்!

## வலியுறுத்துகின்றார் ஆஸி. கந்தராஜா

அன்றைய காலங்களில் எம்முன்னோர்கள் ஒவ்வொருவரும் தத்தம் வீடுகளில் கிணற்றடி விவசாயத்தை (வாய்க்கால் விவசாயம்) தமது வாழ்வாதாரத்தைக் கொண்டுநடத்துவதற்குப் பக்கபலமாகக் கொண்டிருந்தனர். ஆனால் இன்றோநுகர்வுக்கலாசாரத்தையேஅனைவரும்நம்பியிருக்கின்றோம். இந்த நிலை மாறவேண்டும் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் ஈழத்தின் பிரபல எழுத்தாளரும் புலம்பெயர்ந்து தற்போது சிட்னியில் வசித்து வருபவருமான ஆ.சி.கந்தராஜா. அவருடனான செவ்வியின் முழு வடிவம் இதோ...



**அறிமுகம்:**

ஆ.சி. கந்தராஜா ஈழத்தின் பிரபல மாணஎழுத்தாளர்களில்ஒருவர்.பேராசிரியர்.விஞ்ஞான விடயங்களை அறிவியல் ரீதியாகச் சொல்லுதல் அவரின் படைப்புக்களின் முக்கிய நோக்கம். இதன்படி மரபணு மாற்றப்பட்ட பயிர்கள், பரம்பரை அலகுகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்துக்களை தொடர்ச்சியாகத்தெரிவித்துவருகின்றார். மரங்கள்கலப்படைதல், மலட்டு விதைகளின் ஆபத்து, கலப்பின விதைகள் என்பனதொடர்பனதகவல்களையும் பகிர்ந்து வருகின்றார். இவரின்படைப்புக்களுக்குபல்வேறுநாடுகளில்பெரும் வரவேற்பு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**கேள்வி:** விவசாயப்பேராசிரியர்என்றவகையில்ஈழத்தில் உள்ள விவசாயக் கற்கை மாணவர்களுக்கு எவ்வாறான அறிவுரையைக் கூற விரும்புகின்றீர்கள்?

**பதில்:** புத்தகக் குறிப்புக்களை வாய்ப்பாடு செய்து ஒப்பிப்பது அல்ல விவசாயம். விவசாயத்துறைக்கு எவ்வளவு பேர் தேவையோ அத்தனை பேரைத்தான் அந்தத் துறைசார்கல்வியைகற்பதற்குஅரசுஅனுமதிக்கவேண்டும். இன்றைய மாணவர்கள் வேறு தெரிவின்றி விவசாயத்துறையைக் கற்றுவிட்டு அதனுடன் தொடர்பில்லாத தொழில்களை ஆற்றுகின்றனர். இந்த நிலைமை மாற வேண்டும். வெளிநாடுகளில் விவசாயத்துறைக்கு அளவான மாணவர்களே உள்வாங்கப்படுகின்றனர். அத்துடன் அங்கு விவசாயத்தை பயிலும் மாணவர்கள் முழு விருப்புடன் அதைப்பயில்கின்றனர். அங்கு இயல்பான ஆர்வம் மாணவர்களுக்கு உண்டு. எனவே இங்கு விவசாயத்தைக்கற்கும்மாணவர்கள் தம்மீதுவைக்கப்படும் நிர்பந்தத்துக்காக அல்லாமல் துறைசார் விருப்புடன் அதைப் பயில வேண்டும்.

**விவசாய உத்திகள் இலங்கையில் இல்லை**

**கேள்வி:** பலநாடுகளுக்குச்சென்றுவரும்நீங்கள்பல்வேறு நாடுகளில் விவசாயம் எவ்வாறு அணுகப்படுகின்றதுஎன்பதைஅவதானித்திருப்பீர்கள். அந்தவகையில் விவசாயத்தை இலங்கை கையாளும் விதம் திருப்திகரமாக உள்ளதா?

**பதில்:** இல்லை. வெள;வேறான நாடுகளில் உயர் தொழில்நுட்பங்கள் விவசாயத்துக்குள் புகுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக இலங்கையைப் போன்ற அதிலும் குறிப்பாக வடக்கைப் போன்ற தட்ப வெப்ப நிலையைக் கொண்ட நாடுதான் இஸ்ரேல். ஆனால் அங்கு விவசாயம் வெற்றிகரமாக துறையாக ஆக்கப்பட்டுள்ளது. சவூதி அரேபியாவில் இளவரசர் ஒருவரின் பசுமைத் தோட்டத்துக்குச் சென்றேன். அங்கேகொடித்தக்காளியைதொட்டிக்குள்வைத்துபராமரிக்கிறார்கள். உப்பெடுத்து சுத்தமாக்கிய தண்ணீரில் சொட்டு நீர் பாசனம் செய்தனர். அதே தொழில்நுட்பத்தை இங்கும் பாவிக்கலாம். ஆனால் பழைய தொழில்நுட்பங்களிலேயே இலங்கை தங்கியுள்ளமை வருத்தத்துக்கு உரியது.

**கேள்வி:** தமிழக அரசும் இலங்கை அரசும் விவசாயப் படைப்புக்களை அணுகும் விதம் எவ்வாறாக உள்ளது?

**பதில்:** தமிழகத்தில் சிறந்த அணுகுமுறை உள்ளது. இலங்கை அரசும்சிறந்தவிருதுகளைவழங்குகின்றது. இதில்விவசாயத்தைக்கலக்கவிரும்பவில்லை.ஆனால் விவசாயத்தில் தமிழகம் பாரிய முன்னேற்றம் பெற்றுள்ளது.

**கேள்வி:** விவசாயத்துறையில் இலங்கை இன்னும் தளம்பல் நிலையில் இருப்பதற்கான முக்கிய காரணமாக எதைக் குறிப்பிடுவீர்கள்?

**பதில்:** முக்கிய காரணமாக நான் ஏற்கனவே குறிப்பிட்டதொழில்நுட்பப்பற்றாக்குறையைக்குறிப்பிடலாம். அது மட்டுமன்றி இலங்கையில் விவசாய வல்லுநர்களும், விவசாயிகளுக்கும் இடையிலான தொடர்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. விவசாய வல்லுநர்களின் அறிவும், புலமையும் விவசாயிகளைச் சென்றடைகின்றதாஎன்றசந்தேகம்உள்ளது. அடிப்படைக்கட்டமைப்பு வலுவானதாக இல்லையோ என்று எண்ணத் தோன்றுகின்றது.ஆதால்தொழில்நுட்பங்களையும் விவசாய அறிவியல் தகவல்களையும் விவசாயிகள் வரை கடத்த வேண்டும். விவசாயிகளைப் பயிற்றுவிக்க வேண்டும்.

**போரைப்பற்றித் தெரியாமல் அதைப்பற்றி எழுத மாட்டேன்.**


**கேள்வி:** ஈழத்தின்பிரபலஎழுத்தாளராக அடையாளப் படுத்தப்பட்டுள்ள நீங்கள், ஈழத்துப் போர் தொடர்பில் எழுதியாகத் தெரியவில்லை. இதற்கான காரணம் என்ன?

**பதில்:** ஈழத்துப் போர் தொடர்பில் எழுதாமல் இருந்தமைக்குக் காரணம் இலங்கையில் உள்நாட்டுப் போர் இடம்பெற்ற காலத்தில் நான் இங்கு இருக்கவில்லை. புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுவிட்டேன். ஆதலால் எனக்கு அனுபவமில்லாத ஒன்றை, நான் பார்க்காத ஒன்றை எவ்வாறு என்னால் எழுத முடியும். ஆதலால் நான் அவ்வாறான படைப்புக்களை தவிர்த்து வந்துள்ளேன். இனிவரும் காலங்களில் சில வேளைகளில்போர்இலக்கியங்களைஎழுதப்பரிசீலிக்க வாய்ப்புண்டு.

**கேள்வி:** வடக்கு மக்களுக்கு விவசாயம் தொடர்பில் ஏதேனும் சொல்ல விரும்புகின்றீர்களா?

**பதில்:** ஆம். முன்னைய காலத்தில் கிணற்றடி விவசாயம் ஒவ்வொரு குடும்பத்தினதும் பொருளாதாரத்தை பெரியளவில் தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது. கிணற்றில் சாதாரணமாக நாம் பாவிக்கும் தண்ணீரை மட்டுமேகொண்டுமிகச்சிறியஅளவில்ஒருகுடும்பத்தின் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த விவசாயம் கட்டமைக்கப்பட்டிருக்கும். இது வாய்க்கால் விவசாயம் என்றும் அழைக்கப்படும். ஆனால் இன்று அந்த விவசாயமுறைமைஇல்லை.கிணற்றடிவிவசாயத்துக்கு அனைவரும் திரும்ப வேண்டும். இன்று உலகில் சனத்தொகை அதிகரித்துள்ளது. அனைவருக்கும் உணவளிக்க வேண்டுமென்றால் இந்த கிணற்றடி விவசாயம் தேவை என்பதை அனைவரும் உணர வேண்டும்.

# ஔவைக்கு ஏன் அதியமான் நெல்லிக்கனியை கொடுத்தான்?





**மரணத்தை தள்ளிப்போடும் நெல்லிக்கனி..**

இதயத்திற்கு வலிமையை வழங்கும்நெல்லிக்கனியை உண்டு தண்ணீரை குடித்தால் அது எப்பேர்பட்ட தண்ணீராக இருந்தாலும் இனிக்கும்.......!

தினம்ஒருநெல்லிக்காயைஉண்டால்அது தேகத்திற்கு புத்துணர்ச்சியைக் கொடுத்து நாம் இளமையாக இருக்க உதவும் டானிக்காக இருக்கும். தொற்று நோய்கள் எதவும் தொற்றாது. இருதயம், சிறுநீரகம் பலப்படும்.......!

ஒரு டேபிள் ஸ்பூன் நெல்லி சாறையும், அரை ஸ்பூன் தேனையும் கலந்து தினமும் காலையில் சாப்பிட்டு வந்தால் கண் நோய் வராது.......!

நெல்லிச்சாறுடன் பாகற்காய் சாறைச் சேர்த்துச் சாப்பிட்டால் கணையத்தைத் தூண்டி இன்சுலின் சுரப்பை அதிகப்படுத்தி சர்க்கரை வியாதியைத் தடுக்கும்.......!

ஒரு ஸ்பூன் நெல்லிக்காய் பொடி, ஒரு ஸ்பூன் நாவல்பழப் பொடி, ஒரு ஸ்பூன் பாகற்காய் தூள் சேர்த்து சாப்பிட்டு வந்தால் சர்க்கரை நோய் வரவே வராது.......!

அழகு சாதனப் பொருள்கள் தயாரிப்பதிலும், நெல்லிக்காய்க்கு ஒரு பிரதான இடம் உண்டு.......!

நெல்லியின் உள்ளிருக்கும் கொட்டைகளை நன்கு பொடி செய்து அதை தேங்காய் எண்ணெயில் கலந்து, நன்றாக கொதிக்க வைத்து, பின் குளிர வைத்து தலைக்குத் தடவி வந்தாலும், தலை பளபளப்பாகவும், கருமையாகவும், அடர்த்தியாகவும் இருக்க உதவும்.......!

நெல்லிக்காயின் சாறு இருக்கிறதே அதையும் தேனையும் சேர்த்துக் கலந்து தினமும் சாப்பிட்டு வந்தால் உடலுக்கும் பலம் கிடைக்கும், குடலுக்கும் பலம் கிடைக்கும்.......!


மூளை இருதயம் கல்லீரல் முதலிய உறுப்புகளுக்கும் பலம் கிடைக்கும்.......!

இவ்வாறான வழிகளில் நெல்லிக்கனியை சாப்பிட்டு வந்தால், மரணத்தை கூட தள்ளிப்போடலாம்......!

இதனால் தான் அதியமான் தனக்குக் கிடைத்த நெல்லிக்கனியை பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்ய ஔவைக்குத் தந்தார்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 08 . 1963



மறைவு
23 . 08 . 2020

### தம்பாப்பிள்ளை சிவபாலன்

யாழ். சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Krefeld, Duisburg ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை சிவபாலன் கடந்த (23-08-2020) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை சிந்தாமணி தம்பதிகளின் அன்பு மகனும் சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த இராசா சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சாந்தினியின் பாசமிகு கணவரும்,சுவீட்சன், மிதுஷன், அபிஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் தாட்சாயினியின் அன்பு மாமனாரும்,கலா, கௌசலா, விமலா, சுதாகரன், றயுகரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயரட்ணம், குணராஜா, மோகனராசா, கவிதா, நளாயினி, சித்திராதேவி, சுதாகரன், கணநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் அமிர்த கௌரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், மசெந்தூரன், சாருகன், டயானா, லாவண்யா, லவிணா, சுமங்கல்யா, சுகாஸ், டிலானி, தர்மிதரன், பிரணவன் ஆகியோரின் அன்பு மாமா னாரும், டயாநந்தன், சாந்தனா, சசிசேகரன், மயூரன் ஆகியோரின் அன்பு சிறி-தந்தையும், சார்த் தீபன், மகிஸா, லகிஸா, லியொன், டினுஜன், வஸ்னிஜா ஆகியோரின் அன்புப் பெரியதந்தையும் ,டன்னியா, சியானா, யுவன் தேவ் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(31.08.2020) திங்கட்கிழமை இலங்கை நேரபடி பிற்பகல் 3.30 மணியளவில் ஜோர்மனி நேரப்படி நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இறுதிக்கிரியைகள் நடைபெறும் இடம்: Hauptfriedhof Mütheim an der Ruhr Zeppelinstabe 132, 45470 Mütheim ander Ruhr, Germany. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

**சாந்தினி(மனைவி) - +4920394151317**
**சுவீடசன் (மகன்) - +491725456723**
**மிதுஷன் (மகன்) - +4915225454954**
**இராசா சிவபாக்கியம் - 021 225 1516**
**சித்திராதேவி - 077 821 5303**
**கணநாதன் - 076 1181 762**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
14 . 07 . 1937



ஆண்டவன் அடியில்
28 . 07 . 2020

### மேரி யூஜின் ஜெயராணி டேவிட்

எம் வாழ்விற்கு இரு ஒளி தீபங்கள் , தாய் - தந்தை !
தந்தை எனும் ஒளி விளக்கை இழந்து தவித்த எம்மை , ஒற்றை அகல் விளக்காய் காத்த , உன்னையும் காலன் அணைத்து சென்றதேனோ !

உன் பிரிவால் என்னை கொல்லப்போகின்றாய் என்றால் , முன்னரே கூறியிருக்கலாமே ! மரணத்திற்கும் வலிக்காமல் சென்றிருப்பேன் நான் !

உலகில் தேடித் தேடி அலைந்தாலும் மீண்டும் அமர முடியாத சிம்மாசனம் தாயின் கருவறை !நான் தலை சாய்த்து அழ , உன் மடி கூட மறைந்து விட்டதே அம்மா !

உன் அன்னை மடியில் நீ கற்ற ஒழுக்கம் மண்ணில் மடிந்து செல்லும் வரை உன்னோடு நிலைத்திருந்தது . அதன் வழி கண்ணீரோடு பயணிக்கின்றோம் . உன் பெயர் சொல்லும் புதல்விகளாக.............
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
### ஆரோக்கியம் அந்தோனிப்பிள்ளை



மலர்வு
05.02.1940

மறைவு
30.08.2019



அன்பிற்கு அடைக்கலமாய்
தாய்மைக்கு இலக்கணமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
சுடர் விட்ட நீங்கள், எம்மை விட்டு
பிரிந்து சென்றதேனோ?
சிறு பிள்ளை போன்ற உள்ளம்
உற்றார், உறவினரை அரவணைக்கும்
– உள்ளம்
வாடி நிற்கும் வறியவருக்கு
ஓடிச் சென்று உதவிடும் உள்ளம்
உங்களை நாம் மறக்கவில்லை
என்றும் நினைப்பதற்கு
இறைவன் சந்நிதியில் உங்கள் ஆன்மா
இளைப்பாற இறைவனை
தினம் வேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணம்

திரு. திருமதி ரஞ்சினி மரியதாஸ்

## விதை உருளைக்கிழங்கு முற்பதிவு 2020/21 பெரும் போகம்

இவ்வருடத்துக்கான விதை உருளைக்கிழங்கு பதிவுகள் எமது நிறுவனத்தில் வழமைபோன்று 30.08. 2020 தொடக்கம் 08.09.2020 வரை நடைபெறவுள்ளது. அனைத்து உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களும் முற்பணமாக கீழ்வரும் வர்க்க உருளைக் கிழங்குகளுக்கு

1) சசி
2) பிராடா

25 kg பெட்டி ஒன்றுக்கு ரூபா 2500 வழங்கி பதிவை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பவானி ஸ்ரோர்ஸ்**
**இராச வீதி,**
**நீர்வேலி வடக்கு**
**தொலைபேசி : 077 77 24169**

## குத்தகைக்கு லக்சுமி மணிமண்டபம்

✣ திருமண வைபவம் ✣ பூப்புனித நீராட்டு விழா
✣ பிறந்த நாள் விழா
✣ விசேட ஒன்று கூடல் நிகழ்வுகள்

போன்ற நிகழ்வுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்

**லக்சுமி மணிமண்டபம்**

**இ.அன்னலக்சுமி**

விளையாட்டு அரங்கு வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
சுமன் - 077 010 9368 , சுபாஸ் - 076 5668710
சயந்தன் - 077 845 6481

## Canada VISA

*நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்*

**STUDENT VISA** Study, Work & Settle
- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம் ✣ Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**Sponsor Letters**
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

வயதெல்லை இன்றி Visa கிடைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து தரப்படும்

**Hotline: 0777-761 346**

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute

STUDENT VISA
VISIT VISA
TOURIST VISA

USA / UK
Australia
New Zealand
Italy / France
Swiss
Germany
Romania
Norway
Finland
Poland

FLEX Graphic

*10 வருட கால நம்பிக்கையான சேவை*

## வல்வை ஆண்கள் பெண்கள் முதியோர் இல்லம்

ஊறிக்காடு வல்வெட்டித்துறையில் ஆண்கள் முதியோர் இல்லம், பெண்கள் முதியோர் இல்லம் ஆகியன தனித்தனியாக கடந்த சில ஆண்டுகளாக இயங்கி வருகின்றது.

கொரோனாவிற்கு முதல் தொடர்பு கொண்டவர்களும் தற்போது இணைந்து கொள்ளலாம்.

நியாயமான மாதக் கொடுப்பனவு செலுத்தி இந்த இல்லத்தில் இணைய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்.

021 226 5551.077 154 2067. 077 810 6857

ஊறிக்காடு, வல்வெட்டித்துறை.

## வேலைக்கு ஆள் தேவை

### தேனு களஞ்சியம்

திருநெல்வேலியில் அமைந்துள்ள கடைக்கு வேலைக்கு ஆள் தேவை.

- காசாளர்
- களஞ்சிய காப்பாளர்
- சிட்டை எழுதுனர்
- கணக்காளர் (பெண்)

**T.P: 0777 110 075, 077 2131 448**

நேர்முகத் தேர்வு திங்கட்கிழமை 31.08.2020 அன்று முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும்.

## பதவி வெற்றிடம்

யாழ் நகரில் இயங்கிவரும் DSI மொத்த விற்பனை நிலையத்திற்கு வாகனங்களில் பொருட்கள் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு A,D வகுப்பு சாரதிகள் தேவை. விரும்புபவர்கள் கீழ் காணும் முகவரிக்கு தங்கள் சுயவிவரக்கோவையை எதிர்வரும் 10.09.2020 இற்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.

முகவரி:- DSI மொத்த விற்பனை நிலையம்
154, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

ஓம் ஸ்ரீ விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## அருள் மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்

கன்னாதிட்டி -யாழ்ப்பாணம்

### கேதார கௌரி விரதம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் சார்வரி வருஷம் ஐப்பசிதிங்கள் 09 ஆம் நாள் (25.10.2020) ஞாயிற்றுக்கிழமை முதல் கௌரி விரதம் ஆரம்பமாக விருப்பதனால் விரதகாரர்கள், தங்கள் பெயர் நட்சத்திரங்களை 01.09.2020 செவ்வாய்க்கிழமை முதல் பதிவு செய்து கொள்ளலாமென்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தேவஸ்தானம்**
**ஆதீன கர்த்தாக்கள்**

வாழ்வை மீண்டும் வளமாக்குங்கள் www.neptunehealth.lk

## உள்நோயாளர் மருத்துவ சேவைகள்



மனநல ஆரோக்கிய சிகிச்சைகள் உட்பட மன அழுத்தம், போதைபொருள் பாவனைக்கு அடிமையாதல், Bipolar Disorder, உக்கிரமான நடத்தையுடைய நோயாளிகள்

30ற்கும் மேற்பட்ட **முன்னணி மருத்துவர்களால்** மும்மொழியிலும் சிகிச்சைகள் வழங்கப்படுகிறது.

NO. 186, PARK ROAD, Narahenpita.
Tel: 0720 239 747 / 0720 222 555 / 0112 590200

NEPTUNE

## நிலாவெளியில் உல்லாசப்பயண விடுதி ஒன்று உடனடி விற்பனைக்கு உண்டு



- விலை - 45 மில்லியன்
- சராசரி மாதாந்த வருமானம் - 2 மில்லியன்
- காணி விஸ்தீரணம்: 40 பேர்ச்சஸ் (4 பரப்பு)
- கட்டடத்தின் விஸ்தீரணம்: 4000 சதுர அடி பரப்பளவை கொண்ட 3 மாடி கட்டடம்
- மற்றும் வியாபார சான்றிதழ், விற்பனை சான்றிதழ், மதுபான விற்பனை அனுமதிப்பத்திரம், சுற்று சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை கொண்டுள்ளது
- இவ்விடுதியானது உல்லாச, பயண அதிகாரசபையிடம் அனுமதி பெற்றுள்ளது

"Liquor License: FL7 &FL

மேலதிக தொடர்புக்கு: **077 662 2289**

## கூரைத்தகரம் விற்பனைக்கு

பாவித்த மொத்தமான நல்ல நிலையில் உள்ள கூரைத்தகரம் விற்பனைக்குண்டு. அரைவிலை

077 0156 819

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகம் பார்க்கும் 1989 இல் பிறந்த மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

**077 0164 786**

## தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள மேசன் வேலை. சட்டரிங் வேலை, கம்பி வேலை செய்யக்கூடிய மேசன் ஒப்பந்தகாரர் தேவை.

077 592 5371, 077 985 1946

## விற்பனைக்கு

தெல்லிப்பழை பண்டத்தரிப்பு வீதியில் அம்பனைச் சந்திக்கு அருகில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 313 1907

## வாடகைக்கு

பருத்தித்துறை, யாழ்ப்பாணம், இருபாலை பிரதான வீதியில் 2 அறைகள்/ அனெக்ஸ் சகல வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. கப்பெல்ஸ் விரும்பத்தக்கது

**077 790 0947**

## வீடு வாடகைக்கு

யாழ் மாநகரசபை எல்லைக்குள், கோயில்கள், தனியார் கல்விக்கூடங்கள், சுப்பர்மாக்கற்றுகள் மத்தியில், சிறிய குடும்பத்திற்கேற்ற வீடு வாடகைக்குண்டு.

**077 408 1751**

## அறை வாடகைக்கு

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருந்து 1km தூரத்தில் பெண்களுக்கான அறைகள் வாடைக்ககு உண்டு.

077 826 7932

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெக்கமுடியாத நகைளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகுவைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேகபூர்வமான சேவை
AAA Gold Centar

076 568 4346

## திருமண சேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த வெளிநாடு, உள்நாடு மணமக்கள் உண்டு. டிவோர்ஸ் (Divorce) மணமக்கள் உண்டு. 1985 ஆண் UK சிற்றிசன் இஞ்சினியர், செல்வாய் குற்றம் உள்ளது. மணமகள் தேவை.

078 579 3308, 011 238 2226

## NOSS PAPER

**Demai Paper** (Parcel Paper)
☆ Cut sheet (16' X 18')
☆ Real Foam (Any Sizes)
**விற்பனைக்கு உண்டு**
(Whole Sale & Retail)

**Sri Shan Lanka (Pvt) Ltd.**
**077 850 3185 / 077 102 3185**

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தொழிற்சாலை ஒன்றுக்கு ஆய்வுகூட உதவியாளர் (Laboratory assistant for Vegetables oil Testing )

**Tel: 077 392 9359**

## சாரதி தேவை

பெயின்ற் விநியோகத்துக்கு A.D சாரதி அனுமதிப்பத்திரம் உடைய வாகன சாரதி தேவை. நேர்முகத் தேர்வு நாளை (31.08.2020) திங்கட்கிழமை நேரில் வரவும்.

**கொழும்பு பெயின் சென்டர்**
**பருத்தித்துறை வீதி, வில்லூமதவடி,**
**நீர்வேலி தெற்கு, நீர்வேலி.**
**077 789 0398**

## மரண அறிவித்தல்

தோற்றம்
16
04
1944



மறைவு
28
08
2020

### திருமதி விநாயகமூர்த்தி மலர்

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி மலர் கடந்த (28.08.2020) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பெடி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இலங்கையர்-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், தங்கராசா (கனடா), காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் சகோதரியும், தங்கவடிவேல் (கொழும்பு) காலஞ்சென்றவர்களான மகிழும்மா, மனோன்மணி தங்கம்மா, பூபதி, சுந்தரமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2020) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

## பெண் கணக்காளர் தேவை

கைதடியில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு பெண் கணக்காளர் தேவை.

தகைமை:
- HNDA/AAT
- வயது : 25 இற்கு மேல்
- Quick Book இல் முன்அனுபவம் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 077 8810 777
northerneagles26@gmail.com

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் புவனேஸ்வரி (கமலா)



மலேசியாவை பிறப்பிடமாகவும் காரைநகர் இலந்தச்சாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் புவனேஸ்வரி (கமலா) நேற்று முன்தினம் (28.08.2020) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - தங்கமுத்து தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற ஒப்பிலாமணி - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஒப்பிலாமணி பாலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், (முன்னாள் ப.நோ.கூ. சங்ககிளை முகாமையாளர்) இராமச்சந்திரன் (மலேசியா), பரமேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற சிவனேஸ்வரி மற்றும் மகேஸ்வரி, கோடிலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராமகிருஸ்ணன் (ஆசிரியர் - யா/வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்), ஜானகி (பிரான்ஸ்), இராதகிருஸ்ணன் (பிரதேச சபை, காரைநகர்), சித்திரா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், இரட்ணலீலா, சிவநாதன் (பிரான்ஸ்), சாந்தினி, சற்குணராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், தமிழினி, நவனீதன், ஜாதவன், கோபிகா, மயூரதன், தனரூபன், கம்சாயினி, தர்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2020) காலை 7.30 மணியளவில் இலந்தச்சாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


இலந்தச்சாலை காரைநகர்
077 959 1394,
077 670 3139

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் தில்லைநாதன்

இளைப்பாறிய அதிபர் (கொ/கணபதி வித்தியாலயம் கொழும்பு) அகில இலங்கை சமாதான நீதவான்



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஆறுமுகம் தில்லைநாதன் நேற்று (29.08.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஆறுமுகம் செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், தெய்வநாயகியின் அன்புக் கணவரும், மைதிலி, பிறேம்லி (ஜேர்மன்), பிரேம்நாதன், ஜயந்தி, தர்மபிரியா (ஜேர்மன்), கோபிகிருஸ்ணா (நோர்வே), மேனகா (டென்மார்க்), சஞ்சைகுமார் (கனடா), காலஞ்சென்ற தில்லைகுமரன், சுதா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், காலஞ்சென்ற வினாசித்தம்பி (இளைப்பாறிய வங்கி முகாமையாளர்), செல்லம்மா, இரத்தினராசா, சிவராசா (இளைப்பாறிய அதிபர், சோதிடர்), காலஞ்சென்ற திருநாவுக்கரசு, வசந்தாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பாஸ்கரன், நொயெல் சுரஞ்சி, காலஞ்சென்ற சேனாரத்ன, ஜெயலக்ஷ்மி, நேசகலா, சதீஸ்குமார், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிசாந்தன் (அமெரிக்கா) மாதுசன், கஜீபன், டினுஜன்- சரண்யா (ஜேர்மன்), அபேனா-அக்ஸயா (நோர்வே), ரஜித்-லியங்கா (ஜேர்மன்), ரசிக்க-அனுபமா மதுசானி (Instructur Air Womon), காலஞ்சென்ற கசுன், நுவனி, சஞ்சு, அஞ்சலி, சச்சின், சுபாங்கி, மாதங்கி, வைஸ்னவி, வைஸ்சிகா, சிவசுதன், சிவானுஜன், சிவதனுசன் ஆகியோரின் பாசமிகு பேரனும், மேனாலிசா, அனார்களி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2020) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்,

| | |
|---|---|
| மைதிலி - மகள் | 076 190 7575 |
| பிறேம்லி - மகள் | 004915127993340 |
| தர்மபிரிய - மகன் | 004915736146974 |
| விஜய் - மகன் | 004795041325 |

# UNOPS

VACANCY ANNOUNCEMENT

**Post Title** : Driver
**Contract Type** : Individual Contractor Agreement (ICA), Local LICA 2
**Duty Station** : Colombo, Sri Lanka
**Closing date** : 4 September 2020

**Application Details:** For information about this vacancy and application details, please visit the UNOPS Global Personnel Recruitment System via UNOPS Jobs : **(https://jobs.unops.org/Pages/ViewVacancy/VADetails.aspx?id=20249)**

**Qualified female candidates are strongly encouraged to apply.**

# மொத்த வியாபாரிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு

ஜப்பான், சிங்கப்பூர், ஹொங்கொங் மற்றும் ஐரோப்பியா நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் பல...

பொருட்கள் இருக்கும் போதே பெற்றுக்கொள்ளுங்கள்...

**அரிய வாய்ப்பு எம்மிடம்.!!!**




இன்னும் பலவிதமான பொருட்கள் பல...

**Hotline: 0777 131 999, 0773 879 131**

# புதிய தாதி மாணவர்களை இணைத்துக்கொள்ளுதல்

**HOT LINE 070 777 0 666**

பாடநெறியை பூரணமாக நிறைவுசெய்யும் மாணவர்கள் தவறாது உள்நாட்டு, வெளிநாட்டு துறையில் தொழிலுக்காக அமர்த்தப்படுவீர்கள்...

ஒரு வருட கால பயிற்சிநெறி

எட்டு வருட கால அனுபவம்



- **Nursing Assistant (O/L)**
- **Diploma in Pharmacist (Bio)**
- **Diploma in Counseling (A/L)**
- **Medical Laboratory Technician Assistant (O/L)**
- **Diploma in English (O/L)**

TVEC SLMC UGC JMC

பயிற்சியை தொடரும் அனைத்து மாணவர்களுக்கும் ஒரு தொழில் வாய்ப்பை பெற அவசியமான 12 திறமை சார் பயிற்சிகளும் 12 சான்றிதழ்களுடன் இலவசமாக வழங்கப்படும்.

## H & D Nurses Training School (NTS)

ACC- TL2019 - 103

207 / A, 1st Floor, Navalar Road, Jaffna

Call : 070 6677 915
070 6677 909

# நாகபூஷணி திருமணசேவை இடமாற்றப்பட்டுள்ளது

இல.5, ஐந்தாம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (பேபி ஸ்ருடியோவுக்கு அருகில் உள்ளலேன்)

நீங்கள் விரும்பும் அரச, தனியார்துறை உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு.

மிகப் பொருத்தமாக உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**077 138 7596, 071 999 9306**

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்

# யாழ். கலாலயா பயிற்சியகம்

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- ***கேக் ஐசிங்*** – றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- ***உணவு தயாரித்தல்*** – உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- ***கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்***
40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.





- FACIALS (10 வகை), GALVANIC FACIAL, Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- BRIDAL DRESSINGS
*(மணமகள் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள்.



**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

**பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!**

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 07.09.2020 திங்கள்**

மேலும் விபரங்களை மாலை 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-

Guru

# Warehouse Wanted For Lease / Rent (Kurunegala / Jaffna / Kilinochchi / Vavuniya)

**We are a reputed Paint Manufacturing Company in Sri Lanka and we are looking for Warehouse with stores space in following areas:**

| | |
|---|---|
| KURUNEGALA | Minimum carpet area of 22,000 - 30,000 Sq.ft. |
| JAFFNA / VAVUNIYA KILINOCHCHI | Minimum carpet area of 12,000 - 20,000 Sq.ft. |

**Requirements:**

- Three phase electricity / Water supply
- Hydrant system / Fire extinguishers
- Floor Open Space with Ample Parking,
- Space for loading and uploading of trucks / containers.
- Office Staff Toilets, Workers & Labour Toilet separately.
- Werehouse with good height to accommondete G+3 raking is preferable.
- Must have approvals from all government authorities.
- 40 - foot container accessibility is important.
- Fork-lift facilities.

- Name, Address and contact details of the owner
- Details of access to the land
- Copies of the deed and the plan
- Long term lease / Rent

**Contact Details :**

Contact Person : General Manager
E-mail : info.causewaylanka@causewaypaints.com
Tel : 038-2240040
Fax : 038-2240046

# தவறான முடிவெடுத்து ஆசிரியர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 30

தவறான முடிவெடுத்து ஆசிரியர் ஒருவர் உயிரிழந்தார். பொலிகண்டியைச் சேர்ந்த 38 வயதுடைய ஆசிரியரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த ஆசிரியர் கடந்த சில மாதங்களாக மன உழைச்சலில் இருந்தார் என்று தெரியவருகின்றது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சபானந்தன் சிவராஜா விசாரணைகளை முன்னெடுத்தார். (ம-26)

# 13 குறித்து இப்போது கவனிக்கவில்லை

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 30

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நீக்குவதோ அல்லது அதனை மாற்றியமைப்பது குறித்தோ அரசு இப்போது கவனம் செலுத்தவில்லை என்று நீதி அமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளார். மல்வத்து மற்றும் அஸ்கிரிய தேரர்களை நேற்றுச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் மூலம் துணைப் பிரதமர் பதவியை ஏற்படுத்துவது தொடர்பாக அரசுக்குள் எந்தவிதமான பேச்சுக்களும் இடம்பெறவில்லை. புதிய அரசமைப்புக்கான பேச்சுக்களின்போது மாற்றங்களைப் பரிசீலிக்க அரசு தயாராக உள்ளது. போதைப்பொருள் அச்சுறுத்தல் நாட்டை மீட்பது மற்றும் வருங்கால சந்ததியினர் மீதான துஷ்பிரயோகம் மற்றும் சிறுவயது திருமணங்களிலிருந்து பாதுகாப்பது குறித்து பேச்சு நடத்தியதாகவும் தெரிவித்துள்ளார். (ஓ.5)

## பொங்கல் உற்சவம்-2020

**காவாய்க்குளம் வைரவர், விடத்தல் விநாயகர் ஆலயம்**

நாளை மறுதினம் (01.09.2020) செவ்வாய்க்கிழமை இரவு ஆலய வைரவர் பொங்கல் உற்சவம் இடம்பெற்று மறுநாள் புதன்கிழமை அதிகாலை 5 மணிமுதல் கிடாய். கோழி என்பன பகிரங்க ஏல விற்பனை இடம்பெறும். ஏல நிகழ்வில் பக்த அடியார்களையும் இறைச்சிக் கடை விற்பனையாளர்களையும் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இடம் : தம்பிராய், பூநகரி** **காலம் : 02.09.2020**

**தொடர்பு: 077 465 9877**

**கிருபாகரன், செயலாளர்**
**077 8430 153**

**சி.கணேசலிங்கம்**
**பொருளாளர்.**

## பணியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் இலத்திரனியல் உபகரணங்கள் விற்பனை, திருத்துதல் சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு

**01. தொழில்நுட்ப உதவியாளர்கள் (ஆண்)**

**02. கணினி தரவேற்றுனர் (ஆண்/பெண்) தேவை**

தொழில்நுட்பவியலாளர்கள் இலத்திரனியல் துறையில் ஆர்வமும், கணினித் தரவேற்றுனர் கணினி அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் விரைவான செயற்திறனும் நேர்மையும், கடமையுணர்வும் நற்பண்புமுடையவர்களும் மிகவும் விரும்பத்தக்கது.

**தொடர்பு : 077 3611 041**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06
.
07
.
1933



மறைவு
11
.
09
.
2019

**அமரர் சின்னராசா அழகம்மா**

கடந்த 11.09.2019 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவியின் முதலாம் ஆண்டு நினைவு இன்று (30.08.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
கைதடி வடக்கு,
கைதடி.

**குடும்பத்தினர்.**
செ. குணபாலசிங்கம் (குணம்)
021 205 7408

## வாழ்வாதாரத்துக்கு வழங்கப்பட்ட ஆடுகளை திருடினாரென நபர் ஒருவர் கைதானார்!!

யாழ்ப்பாணம், ஓக. 30

பொருளாதாரத்தில் மிகவும் நலிவடைந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட ஆடுகளைத் திருடிவந்த நபரொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம், மானிப்பாய், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரதேசங்களில் உள்ள வீடுகள் மற்றும் வயல் நிலங்களில் . மேய்ச்சலுக்காக கட்டப்பட்ட கால்நடைகளை இவர் திருடி வந்துள்ளார். 10க்கும் மேற்பட்ட ஆடுகள் குறித்த நபரின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. ஆடுகளைக் களவு கொடுத்தவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ நிலையத்துக்கு வந்து அடையாளம்காட்டி மீட்டுக் கொள்ள முடியும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதான நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-25)

## துயர் பகிர்கின்றோம்



எமது ஆலயத்தின் பரிபாலன சபை உறுப்பினர்
**திரு. இராமசாமி இரஞ்சன்**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி இராமசாமி மனோன்மணி**


அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கற்புலத்து மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலன சபை**
**நந்தாவில் கற்புலத்து**
**மனோன்மணி அம்பாள் ஆலயம்**
**கொக்குவில்.**

## மரண அறிவித்தல்

மண்ணில்
05
.
12
.
1922



விண்ணில்
27
.
08
.
2020

யாழ்.உரும்பிராயைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனி கிறேவேல்ட்ஜ வதிவிடமாகவும் கொண்ட

**செல்லையா இராஜலிங்கம்**

**(முன்னாள் Royal Ceylon Airforce சிறீலங்கா விமானப்படை அதிகாரி)**

யாழ். உரும்பராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி கிறேவெல்ட்ஜ வதிவிடமாகவும் கொண்ட செல்லையா இராஜலிங்கம் (முன்னாள் Royal Ceylon Airforce சிறீலங்கா விமானப்படை அதிகாரி) கடந்த (27.08.2020) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சற்குணேஸ்வரியின் (முன்னாள் ஆசிரியை, கொழும்பு விவேகானந்தா வித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஆனைக்கோட்டை செல்லையா செல்லாச்சி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற திலகவதி, நல்லம்மா, நடராசா ஆகியோரின் சகோதரரும், கனடா ரொரோன்டொவை வதிவிடமாகக் கொண்ட முத்தம்மா பொன்னுத்துரையின் சகோதரரும், நளினி (UK), வரஜினி (UK), குகதாசன் (குகன்-டுஸல்டோர்வ், ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி), ரஜனி (UK), நளாயினி (UK), கல்யாணி (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணசிங்கம் (UK), ஜெயவீரசிங்கம் (UK), சிவராசா (ஜேர்மனி), சுகுமாரன் (UK), லுகிந்திரன் (UK), சிறீஸ்கந்தராஜா(UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், லோகிதன், தாரணி, மிதிலன், கஜேணன், கிரிஜணன், கிரிஷேத், கெவின், பியோன், ஜெனினா, சிவானி, காயத்திரி, மயூரி, சோபினி, சுபாங்கினி, சாருஜா, கரிஷன், கிரிஷன், உதயசங்கர், காஜல் ஆகியோரின் பாட்டனும், கைரன், கேசன், ஆரியன், ஜேய் அமாயா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கிரியை - 02.09.2020**
Wednesday - புதன்கிழமை 11.00 am - 1.00 pm
KREMOTOROUM NIEDRRHEIN
KEMPENER STR.1
47877 Willich

**தொடர்புகளுக்கு:**
**மகன்-குகன்(குகி) - 0491746364000**
**மகள் - வரஜினி 00447828444306**
**மகள்-நளினி - 00447938763469**

**தகவல் : குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
.
27
.
03
.
1933



மறைவு
.
29
.
08
.
2020

**திருமதி சிவபாக்கியம் திருநாவுக்கரசு (மோறா)**

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மத்தி, மாகியப்பிட்டி, யாழ். ஆனைப்பந்தி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் திருநாவுக்கரசு (மோறா) நேற்று (29.08.2020) காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் (ஆனைப்பந்தி), பாக்கியநாதன் (லண்டன்), சத்தியவடிவேல் (லண்டன்) ஆகியோரின் அன்பு தாயாரும், நிர்மலாதேவி (ஆனைப்பந்தி), புஸ்பராணி (லண்டன்), காலஞ்சென்ற அருளானந்தீஸ்வரி (அப்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருக்குமார், கஜானன், சாந்தன், வினோஜா, கலைவாணி, நாகசுதர்சன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நாகராசா பொன்னையா மற்றும் அப்புத்துரை, இராசமலர், காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், கனகராசா மற்றும் கனகேஸ்வரி, காலஞ்சென்ற செல்லையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# வட்டி செலுத்த மட்டுமே அரச வருமானம் போதும்!

## சம்பிக்க எம்.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஓக. 30**

**இலங்கையின் வரலாற்றில் முதல் முறையாக அரச வருமானம் அரசு பெற்றுக் கொண்டுள்ள கடனுக்காக வட்டியைச் செலுத்துவதற்கு மாத்திரமே போதுமான நிலைக்கு வீழ்ச்சியடைந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

இதன் காரணமாக எதிர்காலத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தைக் கூட குறைக்கும் கட்டாய நிலைமை அரசுக்கு உருவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால கணக்கறிக்கை தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரிய வரவு செலவுத்திட்டம் இல்லாத ஆண்டாக இந்த ஆண்டு இலங்கையின் வரலாற்றில் இடம்பெறும்.

கடந்த மே மாதம் வரையான செலவுகளுக்காக ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் கடந்த மார்ச் மாதம் 10ஆம் திகதி நிதி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

இடைக்கால கணக்கறிக்கை உள்ளதா? அதனை நாடாளுமன்றமே நிறைவேற்ற வேண்டும். நிதி அமைச்சின் செயலாளரோ, ஜனாதிபதியோ அல்லர் எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (த, இ)



# சொல்ஹெய்ம் கூற்று: மறுக்கிறது அரசு

கொழும்பு, ஓக. 30

இறுதிக்கட்டப் போரின் போது, இலங்கை இராணுவம் கண்மூடித்தனமாக குண்டு வீச்சுகள் மற்றும் ஷெல் தாக்குதல்களை நடத்தியதில் பொதுமக்கள் பெருமளவில் கொல்லப்பட்டனர் என்று, எரிக் சொல்ஹெய்ம் கூறியுள்ள குற்றச்சாட்டை, இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள அமைச்சரவைப் பேச்சாளரும், ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல, போரின்போது, பயங்கரவாதிகள் மீதே இராணுவம் தாக்குதல் நடத்தியது என்று தெரிவித்தார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொதுமக்கள் மீது தாங்கள் தாக்குதல் நடத்தவில்லை. இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ள இந்தக் கருத்தை முற்றாக நிராகரிக்கின்றேன் என்றும் ரம்புக்வெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (த, இ)

# சம்பந்தியுடன் கைகோர்த்து ஆட்டத்தை ஆரம்பிக்கும் விக்கி

கொழும்பு, ஓக. 30

சுயாட்சி - சமஷ்டி என சொல்வது ஒன்றும், செயல் வேறொன்றாகவும் செயற்பட ஆரம்பித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், உரிமைகளை வழங்க மறுக்கும் அவரது பெரும்பான்மை சமூகத்தின் சம்பந்தி வாசுதேவவுடன் கை கோர்த்து தமது சுயரூப ஆட்டத்தை ஆரம்பித்துள்ளார் என்று காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வி.கேதீஸ்வரதாஸ் தெரிவித்தார்.

விக்னேஸ்வரன் தமிழ் அரசுக்கட்சியை ஏமாற்றியது போலவாக்கு போட்ட தமிழ் மக்களை ஏமாற்றாது சுயாட்சி - சமஷ்டி வடக்கில் அல்லற்படும் தமிழ் முஸ்லிம் மக்களுக்காக நிதியை வரவழைக்கும் கருத்திட்டங்களை அரச நிறுவனங்களுடன் இணைந்த வகையில் தயாரிக்க முன்வரவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (த)

# நாடாளுமன்ற அமர்வுகளுக்கு ஜெயசேகரவுக்கு அழைப்பு

கொழும்பு, ஓக. 30

நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜெயசேகரவை நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு சிறைச்சாலை திணைக்களத்துக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

ஜெயசேகர நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதை சிறைச்சாலை திணைக்களம் மறுக்க முடியாது என்றும் சபாநாயகர் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜெயசேகரவை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு சிறைச்சாலை திணைக்களத்துக்கு முன்னர் உத்தரவிடப்பட்டது. எனினும், நாடாளுமன்ற அமர்வுகளின்போது அவர் அழைத்து வரப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் சபாநாயகர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (த, இ)

# சபையில் விக்கியை கிண்டலடித்த விமல்

கொழும்பு, ஓக. 30

இனவாதம் பேசியவாறு சி.வி. விக்கினேஸ்வரன், சிங்கள அரசினூடாகவே ஓய்வூதியம் பெறுகிறார் என்று கிண்டலாகத் தெரிவித்துள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ச. இடைக்கால கணக்கறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர்,

மூவின மாணவர்களும் பாடசாலை செல்கின்றனர். சடலங்களைப் புதைப்பா? தகனம் செய்வதா? என்று பாராது மக்களுக்கு மத்தியில் கொரோனா பரவாமல் தடுத்தது குறித்து சிந்திக்க வேண்டும்.- என்றார். (த)

# பிளாஸ்ரிக் பொருள்கள் இறக்குமதிக்குத் தடை

## சுற்றாடல் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 30

பிளாஸ்டிக் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றமையை அரசு தடைசெய்யவுள்ளது என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்தப்பொருள்களை தடைசெய்வதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தடை செய்யப்பட வேண்டிய பொருள்களில் பிளாஸ்டிக் கோப்பைகள், பிளா ஸ்டிக் கரண்டிகள் மற்றும் பல பொருள்கள் உள்ளன.

இவை தவிர சில அலுமினியப் பொருள்கள் மற்றும் பொலித்தீன் பொருள்கள் என்பனவற்றை இறக்குமதிசெய்யவும் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். (த, இ)

# குற்றச்சாட்டை மறுதலிக்க தொழில்நுட்ப ஆதாரங்கள்

கொழும்பு, ஓக. 30

ஒருங்கிணைந்த பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பாக அரச புலனாய்வு சேவையினர் தமது பங்கை சரியாகச் செய்யவில்லை என்று எவர் குற்றம் சுமத்தினாலும், தாம் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க தம்மிடம் தொழில்நுட்ப ஆதாரங்கள் உள்ளனஎன்று இலங்கை அரச புலனாய்வு சேவையின் முன்னாள் இயக்குநர் நிலந்தா ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைப்பிரிவின் முன்னிலையில் அவர் கடந்த வியாழக்கிழமை இதனைக் குறிப்பிட்டார்.

2016 முதல் இஸ்லாமிய தீவிரவாதம் தொடர்பான பிரச்சினைகளை, குறிப்பாக தேசிய பாதுகாப்புச் சபைக்குத் தெரிவிக்க அரச புலனாய்வு சேவை நடவடிக்கை எடுத்தது.

இந்த நிலையில் பாதுகாப்பு அமைப்புகளில் உள்ள அதிகாரிகள் சஹ்ரான் மற்றும் அவரது தீவிரவாத நடைமுறைகள் பற்றி அறிந்திருக்காவிட்டால் அது ஒருபிரச்சினைமிக்க விடயம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் அதிகாரிகள் மற்றும் சிறந்த மனிதர்கள் உள்ளிட்டவர்கள் அரச பாதுகாப்பு நிறுவனங்களில் பணியாற்றினர், ஆனால் இப்போது தனி ஆள்கள் மட்டுமே உள்ளனர் என்று ஜயவர்தன மேலும் தெரிவித்தார். (த, இ)

# சபையில் முதல் வரிசையின் முதல் ஆசனம் மைத்திரிக்கு

கொழும்பு, ஓக. 30

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நாடாளுமன்றில் ஆளும் தரப்பின் முதலாம் வரிசையின் முதலாவது ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த ஆசனம் மைத்திரிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதிக்காக ஆளும் கட்சி பக்கத்தில் நான்காவது வரிசையில் முதலாவது ஆசனமே வழங்கப்பட்டிருந்தது.

இதுவரையில் முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு நாடாளுமன்றத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படும் நான்காவது வரிசையின் முதலாவது ஆசனமே வழங்கப்பட்டு வந்ததாக நாடாளுமன்ற அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (த, இ)

# 231 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஓக. 30

மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில்வாய்ப்புக்காகச் சென்ற 231 இலங்கையர்கள் நேற்று முன்தினம் நாடு திரும்பினர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 42 பேரும், டோஹாவிலிருந்து 22 பேரும், சவுதி அரேபியாவிலிருந்து 167 பேரும் கட்டுநாயக்க, சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதனை அடுத்து அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டனர். (ஐ, இ)



# இன்றைய நாள்

**மேடம்:** நிம்மதி மீளும் நாள். உங்களுக்குத் தகுந்தாற் போல் ஒருவர் அறிமுகமாவார். ஆரோக்கியப் பிரச்சினைகள் தீரும். முயற்சிகளை நிறைவேற்ற முடியாமல் சோம்பல் சூழும்.

**இடபம்:** கவலையளிக்கும் நாள். தவறு செய்பவர்களை தட்டிக் கேட்டு எதிர்ப்புகளைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்ற இயலாமல் வருத்தம் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** பொது விஷயங்களில் ஈடுபட்டு வம்புக்கு உள்ளாகும் நாள். வீட்டிற்கு தேவை யான பொருள்கள் வாங்குவீர்கள். வீண் செலவு ஏற்படும். மனதின் சஞ்சலங்கள் மெல்லக் காணாமல் போகும்.

**கடகம்:** கனவு நனவாகும் நாள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தாழ்வு மனப்பான்மை தலை தூக்க விடாதீர்கள். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். புது நட்பு மலரும்.

**சிம்மம்:** முன்னேற்றமான நாள். சூழ்நிலையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வழக்கு சாதகமான தீர்ப்பை நோக்கிப் போகும். நேர்மையான திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கன்னி:** பரபரப்பான நாள். வியாபாரத்தில் பழைய தவறுகளை மாற்றிக் கொள்வீர்கள். பணியாளர்களைப் புது அதிகாரி மதிப்பார். குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள்.

**துலாம்:** மதிப்புகூடும் நாள். இனிய செய்திகள் வந்து சேரும். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். பணியாளர்களுக்குக் கருத்து மோதல்கள் வந்து நீங்கும்.

**விருச்சிகம்:** கனவு நனவாகும் நாள். புது முயற்சிகள் கைகூடும். யோகா போன்றவற்றில் மனம் ஈடுபாடு கொள்ளும். கலைப் பொருள்கள் வாங்குவீர்கள். போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**தனுசு:** வெற்றிக்கு வித்திடும் நாள். பணியாளர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு சற்றே கிடைக்கும். பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சேமிப்பை அதிகப்படுத்துவீர்கள்.

**மகரம்:** தொழிலில் உள்ள நுணுக்கங்களை கற்றுக் கொள்ளும் நாள். அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். மேலதிகாரிகள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கும்பம்:** மன நிறைவான நாள். வியாபாரிகள் புதிய கொள்முதல் செய்வீர்கள். கலைஞர்களுக்குப் வாய்ப்புகள் தேடி வரும். மனக்கவலைகள் நீங்கும்.

**மீனம்:** கவலையில் இருந்து விடுபடும் நாள். அலுவலகத்தில் மேலதிகாரிகளிடம் செல்வாக்கு கூடும். நேர்மையானவர்களுக்கு அமோகமான நன்மைகள் கிடைக்கும்.

# தொழில் இழந்த 4 லட்சம் பேர் தொடர்பிலும் கவனம் வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து




**கொழும்பு, ஓக.30**

**அரசாங்கம் 1,50,000 பேருக்கு தொழில் வழங்கும் அதேசமயத்தில் 4 இலட்சம் பேரின் தொழில் இல்லாமலாக்கப்பட்டிருக்கின்றது. இவர்கள் தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

இடைக்கால கணக்கறிக்கை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; இன, மத பேதங்கள் கடந்து நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு நாம் ஒரு நாடாக முகங் கொடுக்க வேண்டும். அவ்வாறு முகங் கொடுக்க வேண்டுமென்றால் நாம் உண்மை மற்றும் யதார்த்தத்தைப் பற்றி நன்கு புரிந்துகொள்ள வேண்டும். உண்மையான யதார்த்தம் என்னவென்றால் கொவிட் தாக்கம் காரணமாக 4 லட்சம் பேர் வேலை வாய்ப்புக்களை இழந்துள்ளனர். வசதி குறைந்த குடும்பங்க ளில் ஒரு இலட்சம் பேருக்கும், ஐம்பதாயிரம் பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்புகளை வழங்குவது மிகவும் நன்மையானது. ஒன்றரை லட்சம் பேருக்கு தொழில் வழங்கும்போது மறுபுறம் 4 லட்சம் பேருக்கு தொழில் இல்லாது போயுள் ளது. அதற்கு அப்பால் பலர் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மக்களுக்காகச் செய்யப்பட்ட பல அபிவிருத்தித்திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன இவை தொடர்பாகவும் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் - என்றார். (ஐ-இ)



மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் பயிலுநர் பயிற்சி வழங்குவதற்கான நியமனக் கடிதங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. பிரதேச செயலகத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச செயலாளர், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.திவாகரன் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ந-15)

## மருந்துகள் விலைகுறைப்பு: அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, ஓக. 30

சில மருந்து வகைகளின் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என ஔடத உற்பத்தி விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

எதிர்வரும் மாதங்களில் சில மருந்து வகைகளின் விலை குறைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். இதுவரை நாட்டில் உற்பத்தி செய்யப்படாத பல மருந்துகளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

# கிராம அலுவலர் மாற்றலுக்கு எதிராக மக்கள் போராட்டம்



வவுனியா, ஓக.30

வவுனியா, இராசேந்திரகுளம் கிராம அலுவலரை இடம்மாற்ற வேண்டாம் என்று தெரிவித்து அந்தப் பகுதி மக்களால் நேற்று போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இராசேந்திரங்குளம் கிராம சேவையாளர் அலுவலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எமது பகுதிக்கான கிராமசேவையாளர், எமக்கு சிறப்பான சேவைகளை ஆற்றியுள்ளார். எனவே அவரை வேறுபகுதிக்கு இடமாற்றம் செய்யவேண்டாம். மீண்டும் எமது கிராமத்திற்கே நியமிக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதிக்குச் சென்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் பொதுமக்களுடன் கலந்துரையாடியதுடன், வவுனியா பிரதேச செயலாளருடனும் தொலைபேசியில் உரையாடினார்.

கிராம சேவையாளரை இடமாற்றம் செய்வதை இடைநிறுத்துவதாக நாடாளுமன்ற உறுப்பினரால் வாக்குறுதி வழங்கப்பட்டமைக்கு அமைய போராட்டம் நிறுத்தப்பட்டது. (எ-110)

## வங்கிகளில் முறைகேடுகள்: மக்கள் தகவல் வழங்கலாம்

கொழும்பு, ஓக. 30

நல்லாட்சி அரசாங்கத்தின்போது நான்கு அரச வங்கிகளில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் பொதுமக்களின் உதவியை கோரியுள்ளது. 2015 - 2019 காலப்பகுதியில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் ஆராய்வதற்காக நான்கு உறுப்பினர்களைக்கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக இக்காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள், இந்த நிறுவனங்களின் நோக்கத்துக்கு எதிரான செயற்பாடுகள் மற்றும் பயனற்ற கணக்கு வழக்குகள் தொடர்பான தகவல்களை மக்கள் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்க முடியும். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக இது தொடர்பான தகவல்களை, பணிப்பாளர் நாயகம் ,அரச பொது நிறுவன திணைக்களம், நிதி அமைச்சு செயலகம், கொழும்பு 05 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு ஆணைக்குழு பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஐ-இ)

# எட்டாம் ஆண்டு நினைவலைகள்



**அன்னையின் மடியில்**
**06.12.2000**

**ஆண்டவன் அடியில்**
**30.08.2012**

**செல்வி துஷாந்தி**
**சிறிசோமாஸ்கந்தன்**
(வேம்பபடி மகளிர் உயர்தர பாடசாலை
தரம்-7F)

*அமைதியின் உருவமாகவும்*
*அடக்கத்தின் இருப்பிடமாகவும்*
*பண்பின் பெருந்தகையாகவும்*
*பாசத்தின் உறைவிடமாகவும்*
*எம்மத்தியில் அன்பு ஒளியாக*
*இருந்த துஷா செல்லமே!*
*மண்ணோடு உங்கள் பூவுடல்*
*மறைந்து விட்டாலும் உங்கள்*
*நினைவுகள்*
*எங்கள் இதயங்களில் இருந்து*
*ஒருபோதும் மறைவதில்லை!*



**செ.சிறிசோமாஸ்கந்தன்**
**புதிய செங்குந்தா வீதி,திருநெல்வேலி கிழக்கு,**
**சிறிசோமாஸ்கந்தன் அரைக்கும் ஆலை**
**300, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.**

**உங்கள் பிரிவால் துயருறும்**
**அன்பான**
**அப்பா, அம்மா,**
**தம்பி, தங்கைமார்.**

**உடனடி வேலைவாய்ப்பு**
பிரபல்யமான கம்பனிக்கு ஊழியர்கள் தேவை.
O/L தகைமையுடன் ஆண் பெண் இருபாலாரும்
● 2 கதவு குளிர்சாதன பெட்டி விற்பனைக்குண்டு. பாவித்தது
**Tel: 076 1124 145**

**மணமகள் தேவை**
யாழ். இந்து கொழும்பில் பிறந்து வளர்ந்தவர் வயது 30. உயரம் 5'9" பிரபல தனியார் நிறுவனத்தில் நிரந்தரதொழில்- உதவி கணக்காளர். வியாபார முகாமைத்துவ பட்டதாரி. CIMA -III- கன்னிராசி உத்தரம் - 3 கிரக பாவம் 15 மணமகள் - பட்டதாரி அல்லது க.பொ.த உயர்தரம் சித்தி எய்தியவர் வயது 24 - 28 இடைப்பட்டது கொழும்பு யாழ்ப்பாணம் விரும்பத்தக்கது.
011 252 9706
Whats app 077 313 3686

**E,S Printers**
மக் பிரிண்ட் (MUG) 450/=
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

**IPS**
இலவச ஆங்கில, கணினி வகுப்புகள்
**ஆங்கில வகுப்புக்கள்:**
Diploma in English / Spoken English
க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான விசேட மீட்டல் வகுப்புக்கள் - Mon 7 AM, 5 PM
**கணினி வகுப்புக்கள்:**
Diploma in MS-Office/Website Development/ Programming
ICT (A/L), (O/L) -2020 மீட்டல் வகுப்புக்கள்
**சிங்கள வகுப்புக்கள்:**
அடிப்படையிலிருந்து எழுத்து. பேச்சு. அரச உத்தியோகத்தர்களுக்கு விசேட பிரிவு.
ஆரம்பம்: 05.09.2020, 10.00 AM
காலம் : 3 மாதங்கள் சான்றிதழ்கள்
**IPS** பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் திருநெல்வேலி.
**076 685 2529/ 077 602 1794**

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 01.08.2020 அன்று சிவபத மடைந்த
எங்கள் குடும்பத்தலைவி
**அமரர் ஐயாத்துரை இராசம்மா**
அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 31.08.2020
திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை
புனித தீர்த்தக் கரையிலும்
11.00 மணியளவில் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள்
நீலாவத்தை தெல்லிப்பளையில் உள்ள
அன்னா ரது இல்லத்தில் நடைபெறும்.
01.09.2020 செவ்வாய்க்கிழமை
11.00 மணியளவில் **தெல்லிப்பழை பண்டத்**
**தரிப்பு வீதி பன்னாலை, தெல்லிப்பழையில்**
**உள்ள வரத்தலம் கற்பக விநாயகர்**
**திருமண மண்டபத்தில்** ஆத்மசாந்தி
பிரார்த்தனையும். மதியபோசன நிகழ்வும்
நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தாங்கள்
குடும்பசகிதம் வருகை தந்து
பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று குடும்பசகிதம்
வருகைதந்து பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நீலாவத்தை வித்தகபுரம்,
தெல்லிப்பளை

மகன் - அரவிந்தன்
குடும்பமும்
சகோதரன்
குணரட்ணமும்

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 . 11 . 1935 | 29 . 08 . 2020 |

## வல்லிபுரம் தெய்வானைப்பிள்ளை

சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொர்ண்ட திருமதி வல்லிபுரம் தெய்வானைப்பிள்ளை நேற்று (29.08. 2020) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற குமாரசாமி மற்றும் வள்ளிப்பிள்ளையின் அன்பு சகோதரியும், தர்மலிங்கம், இராஜேஸ்வரி, நாகேஸ்வரி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், மேரி றோசினி, நடராசா, உமாமகேஸ்வரன், அருட்சோதி ஆகியோரின் மாமியாரும், நிமலன், குமணன், மதுரா, வேணு, மயூரன், செந்தூரன், அருட்குமரன், சுஜீனா, றொபினா, சனோ ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்பாள் ஸ்ரோஸ்**
**டச்சு வீதி, புளியடி சந்தி,**
**சாவகச்சேரி.**

**தகவல் :குடும்பத்தினர்**
**(நடராசா - மருமகன்)**
**(நாகராஜா-மீசாலை)**

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 . 11 . 1943 | 29 . 08 . 2020 |

## திருமதி இரத்தினேஸ்வரி ஆனந்தன்

மஞ்சத்தடி தெற்கு இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரி ஆனந்தன் நேற்று (29.08.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா (தொண்டர்) கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-ஆச்சிக்குட்டி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை ஆனந்தனின் (முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர்-விவசாயத்திணைக்களம்-கிளிநொச்சி) அன்பு மனைவியும், கோணேஸ்வரன் (லண்டன்), முரலீஸ்வரன் (பிரான்ஸ்), கவிதா (கனடா), சுகிதா (கனடா), சகீதரன் (கணக்காளர், Assetline Leasing Company Limited) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரளா (லண்டன்), சொர்ணாங்கி (பிரான்ஸ்) அசோகன் (கனடா), சதாசுதன் (கனடா), விதுஜா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், உடுவில்) ஆகியோரின் பாசமிகு மாமியும், மிதுசா, நதீசா, அஸ்வத்தாமன், ஆகாஸ், ஆரபி, தனுஸ், டினேஸ், ஆதீஸ் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், இளையதம்பி, சிவராசா மற்றும் நடேசலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், கணவதிப்பிள்ளை, தங்கரத்தினம், இராசமணி, சின்னதங்கச்சி, சோதிலிங்கம் மற்றும் தர்மலிங்கம், இராசதுரை, மகேஸ்வரன், லச்சுமி, இரத்தினபூபதி, இரத்தினம்மா, பத்மராணி, காலஞ்சென்ற செல்வி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.08.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லபடும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**சகிதரன் (மகன்) -076 928 1589**
**விதுஜா (மருமகள்) - 077 619 8192**

## VACANCY

For a Construction and Business Combined firm seeking for Draughtsman and Admin Officer. Below 30 years Female G.C.E A/L or Equvalant Standard

CV on or Before 02.09.2020

**pearlphoenixeng@gmail.com**

## பதவி வெற்றிடம்

1. விற்பனை முகாமையாளர் - ஆண்
2. விற்பனையாளர் - ஆண்
3. பொதியிடலாளர் - பெண்

அனுபவம், தகைமை, செயல்திறனுடன் வார நாள்களில் தினமும் 10.00 - 3.00 மணிவரை நேரில் வருகை தரவும்

**175, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்**

077 477 3481, 021 221 6889, 077 623 1295

## விற்பனைக்கு

யாழ் பிறவுண் வீதியில் 6 பரப்பு, 4பரப்புக் கணியும் ஆடியபாதம் வீதியில் 3 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

**Tel: 0777 232 535**

## கடை வாடகைக்கு உண்டு

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இரு கடைகளும். யாழ் மின்சார நிலைய வீதியில் இருமாடிக் கடைகள் இரண்டும் இரு வீடுகளும் வாடகைக்கு உண்டு.

**077 723 2535**

## Receptionist தேவை


யாழ் நகரில் இயங்கும் பிரபல Hotel ஒன்றுக்கு Receptionist தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**Tel: 077 630 9947**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி டவுண் தபால் கந்தோர் வீதியில் மகளிர் பாடசாலைக்கு அருகில் உள்ள 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**076 881 7952, 011 261 0222**




## வாடகைக்கு

கச்சேரி அருகில் அறைகள் ரூபா 6000 க்கு மாத வாடகைக்கு உணடு.

**Tel: 076 6377 913**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
1 சதுர அடி - 45 ரூபா

**077 334 1281**

## காணி விற்பனைக்கு

தேவாலய வீதி, திருநெல்வேலி கிழக்கில் 1 3/4 பரப்புக் காணியில் குழாய் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

**Tel: 076 866 5624, 077 497 6815**

## மணமகள் தேவை

யாழ் இந்து 1977 உத்திரட்டாதி கி.பா 17 ¼, உயரம் 5'2" சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.
குறிப்பு: தரகர் தேவையில்லை.

நேரடித் தொடர்புக்கு: **077 5586 477**

## பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தொழிற்சாலை ஒன்றுக்கு 24-40 வயதுக்குட்பட்ட கணக்காளர் தேவை. ஆங்கில அறிவும் முன்னனுபவம் விரும்பத்தக்கது.


தொடர்பு: **077 1300 190, 077 950 6997**

## தேவை

பில்கிளாக், பொதியிடல், மாவறுத்தல், உதவியாளர் என்பவற்றிற்கு பெண் ஊழியர் தேவை. தொடர்பு:
**பிருந்தா மில்**
179, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

**Tel: 077 174 6101**

## மணிவிழா வாழ்த்து அகவை தின வாழ்த்து



**30.08.2020**

**சிவஞான சுந்தரம் ஞானசேகரம்**

(ஆசிரிய ஆலோசகர் யாழ். கல்வி வலயம்)

இறக்குவானை முதல் ஈழ நல்லூர் வரை
ஆசிரியப் பணியை ஆற்றினாய் - போற்றினோம்
ஆசிரிய ஆலோசகர் பணியிலும் மிளிர்ந்தாய்
ஆயிரம் பிறை கண்டு வாழ்ந்திடு நண்பா.

போர் மூடிப் புரையோடி போயிருந்த நாட்டில்
ஊர் நாடி, உறவாடி உற்றார்க்குதவி
நீர் தேடும் வேரானாய் நினை நட்பில் நாம் தேடி
பேரோடும் புகழோடும் வாழ்க


\- என வாழ்த்துகின்றோம்.

Congratulations

**1982 – 1986 பிரிவு யாழ். பல்கலைக்கழக நண்பர்கள்**

எஸ். யு. சந்திரகுமாரன், ஜே.ஆர். புவிராஜ், சி. சுமந்திரன், சி. குலதீபன், கு. மகிழ்ச்சி கரன், கி. சண்முகராசா, க. நித்யானந்தன், மா. திருலிங்கம், சு.சிவபாதம்

## குயின்சி புத்தகசாலையின் மாபெரும் மலிவு விற்பனை




3325/- 1675

15%-50% வரை

பாடசாலைப் புத்தகங்கள், இலங்கை, இந்திய கதைப் புத்தகங்கள், நீதிக்கதை நூல்கள், மருத்துவத்துறை நூல்கள், ஆன்மீகத்துறை நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சமையல்துறை நூல்கள், கவிதை நூல்கள், தத்துவ நூல்கள் முதலிய அனைத்தும்

**24.08.2020 - 10.09.2020**

Tel- 077 226 8486
Tel- 021 221 7513
271, K.K.S Road, Jaffna.

## ES Printers

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை வீதி. பாண்டியந்தாழ்வுக்கு அண்மையாக நிலப் பரப்பு 01 (ஒன்று) குளி 05.075 கொண்ட காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

**077 6146 434**

## கட்டடம் வாடகைக்கு

A9 வீதியில் யாழ் பிரதேச செயலகத்தில் இருந்து 700m தூரத்தில் அமைந்த கடையுடன் சேர்ந்த கட்டடம் வாடகைக்கு உண்டு. (2 ¾பரப்புக் காணியில் 5 அறைகளுடன் அமைந்துள்ளது)

**077 575 0882**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ். பிரதான வீதியில் கன்னியர்மடம் பாடசாலைக்கு அருகில் 1.5 பரப்பில் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

**077 623 1295**

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் பழனியாண்டவர் கோயிலுக்கு அண்மையில் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கோப்பாயில் 15 பரப்பும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : **076 697 2287**

## வீடு விற்பனைக்கு

வலி - வடக்கு அளவெட்டி, வடக்கு தஞ்சிட்டியில் வீடொன்று விற்பனைக்குண்டு.

**076 803 9127, 075 546 2940**

## தமிழரசுக் கட்சி...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் பெரும் எதிர்பார்ப்புக்கும் பரபரப்புக்கும் மத்தியில் வவுனியா குருமன்காடு ஹோட்டல் பிறின்ஸஸ் ரோஸ் விடுதியில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நேற்றுக் காலை 10 மணிக்கு கூடியது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா, தேசியப் பட்டியல் விவகாரத்தில் இடம்பெற்ற விடயங்களைக் குறிப்பிட்டார். அத்துடன் சுன்னாகத்தில் ஊடகவியலாளர் ஒருவர் தன்னை அவமானப்படுத்தும் விதத்தில் உரையாற்றுவதற்கான கலந்துரையாடலை சுமந்திரன் ஒழுங்கு செய்ததாகவும் குற்றம் சுமத்தினார். அத்துடன் தனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டசதிநடவடிக்கைகளையும் விவரித்தார்.

மேலும் நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் பின்னடைவுக்கான காரணங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணங்களை முன்வைத்தனர். சுமந்திரன் சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணல் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது என்பதைப் பலர் சுட்டிக்காட்டினர். அத்துடன் அவர் அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கு பேரம் பேசுவது என்றாலும் பெரும்பான்மை ஆதரவு தமக்குத் தேவை என்று குறிப்பிட்டமையும், மக்கள் மத்தியில் கட்சியின் கொள்கை தொடர்பான சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. இதுவும் பின்னடைவுக்கு காரணம் என்று கூறப்பட்டது.

**தேசியப் பட்டியல் விவகாரம்**

தேசியப் பட்டியல் விவகாரம் சதி நடவடிக்கை என்று கட்சியின் கொழும்புக் கிளையின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா தெரிவித்தார். சதி நடவடிக்கை என்பதற்கான சட்டரீதியான வரையறைகளை முன்வைத்த அவர் இந்த நடவடிக்கையை அவ்வாறு சொல்வதற்கான காரணங்களையும் தெளிவாக விளக்கிக் கூறினார். அத்துடன் சதி ஒருவர் மாத்திரம் மேற்கொள்வது அல்ல என்றும் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் அதனுடன் தொடர்புடுவார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

தேசியப் பட்டியல் விவகாரத்தில் கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தைக் குறிப்பிட்டுக் காட்டினார். தனது பெயர் தேசியப் பட்டியலில் முதலிடத்தில் இருந்ததாகவும்,பின்னர் 19ஆம் திகதி திருமதி அம்பிகா சற்குணநாதனின் பெயர் முதலிடத்தில் குறிப்பிடப்பட்ட தாகவும் தெரிவித்தார்.

இந்த விடயத்தை உடனேயே ஊடக அறிக்கையாக சுமந்திரன் வெளியிட்டதாகவும் அவர் குறிப்பிட்டதுடன், எந்தவொரு அரசியல் கட்சியும் இந்த விடயத்தை ஊடக அறிவிப்பாக வெளியிடுவதில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இதேபோன்று தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்த பின்னர் அதற்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் கட்சியின் தலைவருக்குத் தெரியாமல் செயலர் முடிவு எடுத்துள்ளார். அவர் தனித்து முடிவு எடுத்திருக்க முடியாது. அத்துடன் தேசியப் பட்டியலுக்க நியமிக்கப்பட்டவரை அழைத்துச் சென்று உடனடியாக ஊடக சந்திப்பை நடத்தியுள்ளார்.

அத்துடன் 14ஆம் திகதி (இந்தமாதம்) வரையில் தேசியப் பட்டியலுக்கான ஆசனங்களைப் பெயரிட முடியும் என்ற போதும் 9ஆம் திகதியே முந்திக்கொண்டு அதனைக் கொண்டு சென்று கொடுத்தவர் சுமந்திரன். இந்தச் சதி முயற்சியில் தொடர்புடையவர்கள் அனைவருக்கும் எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் துரைராஜசிங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் கண்டனத் தீர்மானமாக மாற்றப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தேசியப்பட்டியல் விவகாரத்தில் கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் நடந்து கொண்ட முறைமை தவறு என்றும் அதற்காக கண்டனம் தெரிவிப்பதுடன், தேசியப் பட்டியலை அம்பாறைக்கு வழங்கியதை யாரும் ஆட்சேபிக்கவில்லை என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கட்சியின் செயலர் பதவி மாற்றம் செய்யப்பட வேண்டுமானால் பொதுச் சபையிலேயே மேற்கொள்ளமுடியும் என்பதால் உடனேயே பொதுச் சபையைக் கூட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தேர்தல் பின்னடைவு தொடர்பில் ஆராய்வதற்கு 2018ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை விரைவில் மத்திய குழு உறுப்பினர்களுக்கு வழங்குவது என்றும், தற்போதைய தேர்தல் பின்னடைவு தொடர்பில் ஆராய்வதற்கு குழுவை நியமிப்பது என்றும் தீர்மானம். நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஒ.5)

## சரவணபவன்...

எடுக்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கட்சியின் செயலரிடம் கையளித்த கடிதத்தில் கோரியுள்ளார்.

சுமந்திரனின் இந்தக் கோரிக்கைக்கு கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியா வில் நேற்று இடம்பெற்றது. காலை 10 மணியிலிருந்து பி.ப. 6 மணி வரை இந்தக் கூட்டம் நீடித்தது. கூட்டத்தின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கட்சியின் செயலர் துரைராஜ சிங்கத்திடம் கடிதம் ஒன்றைக் கையளித்தார். அதில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் கே.வி.தவராசா, கருணாகரன் குணாளன், கருணாகரன் நாவலன், செல்வராசா பிரதாப், பீட்டர் இளஞ்செழியன், விமலேஸ்வரி சிறிகாந்தரூபன், மிதிலைச்செல்வி சிறிபத்மநாதன் ஆகிய 8 பேரையும் ஏற்கனவே உள்ள சாட்சியங்களின் அடிப்படையில் மேலதிக விசாரணை யின்றி கட்சியிலிருந்து நீக்கப்படலாம். விசாரணை ஒன்று நடைபெற்றால் மேலும் பலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கநேரிடும் என்றும் குறிப்பிட்டு கடிதத்தை ஒப்படைத்தனர்.

இந்தக் கடிதத்தை சமர்பித்து 8 பேரையும் நீக்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டபோது, சுமந்திரனுக்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. கூட்டம் முடிவடைந்த பின்னர் மத்திய குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தேடிச் சென்று சந்தித்து, கடிதத்தின் பிரதியை சுமந்திரன் வழங்கினார். இதேவேளை, சுமந்திரனைக் கட்சியிலிருந்து நீக்க வேண்டும் என்று அவருக்கு எதிராக மூன்று குற்றச்சா ட்டுக்கள் முன்வைக்கப்பட்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கையெழுத்திட்டு கடிதத்தை சமர்பித்துள்ளனர். உறுப்பினர்களுக்கு எதிராக முன்வைக்கப் பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை சி.வி.கே.சிவஞானம் தலைமையிலான ஒழுங்கு நடவடிக்கைக்குழு ஆராயும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## ஈழத்தின்...

யைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அச்சுவேலி மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார். அச்சுவேலியில் இடம்பெற்ற பண்பாட்டு விழாவின் பொழுது அச்சூக் குரிசில் என்ற விருது வழங்கி அச்சுவேலி மக்கள் இவரை கௌரவித்தனர். தனது திறமையால் இலங்கையில் வெளியாகிய முத்தி ரைகளுக்கு படம் வரைந்து பெருமை சேர்த்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## பிரதேசவாதத்தை...

றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மத்திய குழு உறுப்பினர்கள் இணைந்து கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தமிழ் அரசுக் கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். தேசியப் பட்டியல் விவகாரத்தில் அவர் நடந்து கொண்ட முறைமை தவறு எனத் தெரிவித்து அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்தத்தீர்மானம்முன்வைக்கப்பட்டபோது, செயலர் கிழக்கைச் சேர்ந்தவர். இந்தத் தீர்மானத்தை வடக்கிலுள்ளவர்கள் கொண்டு வருகிறீர்கள். இது பிரதேசவாதத்தை தூண்டலாம். அதனால் இதை இப்போதைக்கு நிறைவேற்றாமல் தவிருங்கள். வடக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எம்மை அடிமைப்படுத்த நினைக்காதீர்களென்று சம்பந்தன் குறிப்பிட்டார்.

அவரது இந்தக் கருத்து கூட்டத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. சம்பந்தனுக்கு எதிராக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மத்திய குழு உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

'கூட்டமைப்பின் தலைவர்தான் நீங்கள். தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் அல்ல. உங்களால்தான் கூட்டமைப்பு தோற்றது. நீங்கள் வெளியேறுங்கள். பிரதேசவாதத்தைத் தூண்டாதீர்கள்' என்று பெரும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. இதனையடுத்து சம்பந்தன் அமைதியானார். (ஒ.5)

## ஐந்தரை...

இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் 6 கோடியே 20 லட்சம் ரூபா பெறுமதியான ஐந்தரைக் கிலோ எடையுடைய தங்கத்தை கடத்த முற்பட்ட போதே சந்தேக நபர்கள் இருவரும் நேற்று அதிகாலை அனலைதீவு கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் என கடற்படையினர் தெரிவித்தனர்.

மாதகலைச் சேர்ந்த இருவரும் தரகுப் பணத்துக்காக இந்தியாவுக்கு தங்கம் கடத்த முற்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அவர்கள் யாழ்ப்பாணத்தில் திருடப்பட்ட நகைகளை உருக்கி கடத்த முற்பட்டார்களாக என்ற கோணத்திலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காங்கேசன்துறை கடற்படையினரால் சந்தேக நபர்கள் இருவரும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்ற நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். மீட்கப்பட்ட 5 கிலோ 500 கிராம் தங்கமும் சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளது எனகடற்படையினர் கூறினர். (ஒ.5,27)

## இன்று...

இதை முன்னிட்டு வடக்கு மற்றும் கிழக்கில் பேரணி களுக்கும் கவனவீர்ப்புகளுக் கும் ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கட்சிகள் பலவும் ஓரணியில் நின்று இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளன. (ம)

## தெல்லிப்பழை...

துர்க்கை அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று இடம்பெறவுள்ளது. அதிகாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று, காலை 7 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணிப்பாள். பக்தர்களை சுகாதார நடைமுறைகளைப் பின்றி திருவிழாவில் கலந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## பட்டப்பகலில்....

நகையும், ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

சங்குவேலியில் உள்ள வீடொன்றில் வசிப்பவர்கள். குடும்ப சகிதமாகக் கொழும்புக்குச் சென்றுள்ளனர். குடும்பத் தலைவர் மட்டும் வீட்டில் இருந்துள்ளார். அவர் தனது தேவைகளின் நிமித்தம் நேற்று மதியம் 1.30 மணியளவில் யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்குச் சென்றதை அடுத்து வீட்டின் பின் கதவால் உள்நுழைந்த திருடர்கள் மேற்படி திருட்டில் ஈடுபட்டுள்ளனர். மானிப்பாய் பொலிஸில் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-25,26)

## இரண்டு....

நொச்சி ஏ-9 வீதி 155ஆம் கட்டைப் பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. தனபாலகே ரோசன் பிரதீப் (வயது 32) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி நகரிலிருந்து இரண்டு டிப்பர் வாகனங்கள் 155 ஆம் கட்டை சந்தியிலிருந்து பாரதிபுரம் திரும்பும் வேளையில் விசேட அதிரடிப்படையினர் முகாமிலிருந்து வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் சம்பவ இடத்திலே சிப்பாய் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி நகர் பகுதியிலிருந்து வந்த டிப்பர் வாகன சாரதி வாகனத்தை பாரதிபுரம் பக்கம் திருப்பியபோது விசேட அதிரடிப் படை சிப்பாய் மோட்டார் சைக்கிளை கட்டுப்படுத்த முடியாமல் டிப்பர் வாகனத்துடன் மோதுண்டார். பின்னால் வந்த மற்றொரு டிப்பர் வாகனம் விசேட அதிரடிப்படை சிப்பாயின் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டது. இதனால் சிப்பாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயங்களுடன் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். டிப்பர் சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஒ.5,214)

## வீதியால்...

முறிந்து வீழ்ந்ததில் மூன்று பிள்ளைகளின் தந்தை சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் அவருடன் பயணித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மேற்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இ.ஜேம்சி விகேந்திரன் (வயது 33) என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் அவருடன் பயணித்த நீராவிப்பிட்டியைச் சேர்ந்த எட்வேட் எமில்டன் (வயது 21) என்ற இளைஞன் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு நகரை அண்டிய பகுதிகளில் நேற்று மாலை கடும் காற்றுடன் மழை பெய்தது. மோட்டார் சைக்கிளில் வீதியால் பயணித்தவர்கள் மீது சிலாவத்தைப் பகுதியில் மரம் முறிந்து வீழ்ந்ததில் இந்த உயிரிழப்பு சம்பவம் நிகழ்ந்தது. (ஒ.5, 19,246)

# ஐ.பி.எல்லில் இருந்து ரெய்னா விலகல்!



ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகினார் சென்னை சுப்பர் கிங்ஸின் உப தலைவரும் முன்னணி துடுப்பாட்ட வீரருமான ரெய்னா. ஐ.பி.எல் தொடருக்காக ஐக்கிய அரபு இராச்சியத்தில் சென்னை அணி முகாமிட்டுள்ளது. அணியுடன் இணைந்து தொடருக்காகத் தயாராகிக் கொண்டிருந்தார் ரெய்னா. எனினும் தனிப்பட்ட காரணங்களுக்காக தொடரில் இருந்து விலகும் முடிவை அவர் நேற்று அறிவித்தார். ரெய்னாவின் மாமனார் பதன்கோட் பகுதியில் கொள்ளையர்களால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். இதையடுத்தே அவர் தொடரில் இருந்து விலகினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் விலகலுக்கான உத்தியோகபூர்வத் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. (ம)




## பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டில் தங்கிநின்று பணியாற்றக் கூடிய 35-40 வயதிற்கு உட்பட்ட பணிப்பெண் தேவை.

077 9592 628

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

DHL EXCELLENCE. SIMPLY DELIVERED.

சகல நாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை எம் ஊடாக நடைபெறுகின்றன. மிக குறைந்த கட்டணத்தில் வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்

திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd

321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 0777554528, 0212227835

## அறிவித்தல்



### அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் - கிளிநொச்சி

எமது ஆலயத்திற்கு முகாமையாளர் ஒருவர் தேவை. இப்பணியினை சிறந்த முறையில் ஆற்றக் கூடியவர் ஆலய அலுவலகத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பிற விடயங்கள் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். 2020.09.15 ஆம் திகதியின் முன் தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
ஆலய பரிபாலன சபை
அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்,
கிளிநொச்சி. 077 6027 147

## சிறுநீரகம் தேவை

வி.டிலாஸ் (வயது 11) எனும் சிறுவனுக்கு இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்துள்ளதால் B+ இரத்த வகையை சேர்ந்த சிறுநீரகங்கள் உடனடியாக தேவைப்படுகின்றது. எனவே தர விரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

தயா-077 721 8255, 076 5741 835

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8093 17, Kandy Road, Jaffna

## கணக்கீட்டு உதவியாளர் (Accounts Assistant)

யாழில் இயங்கும் தனியார் கம்பனி ஒன்றிற்கு மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமை : குறைந்தது கணக்கியல் டிப்ளோமா பூர்த்தி செய்திருத்தல்

அனுபவம் : குறித்த துறையில் குறைந்தது 1 வருட அனுபவம்

தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் உங்களது சுயவிவரக்கோவையினை (CV) selvagrp.hr@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்

077 826 7800, 021 221 7272

## காணி விற்பனைக்கு

ஹோட்டல் கட்டுமானத்திற்கு பொருத்தமான கடற்கரையுடன் கூடிய 40 பரப்பு தென்னந் தோட்ட காணி இரு வீடுகளுடன் மணங்கும்பான் கிழக்கில் விற்பனைக்குண்டு

077 387 4858

## விற்பனைக்கு

கோப்பாய் பிரதேச செயலகம் அருகில் 100 m தூரத்தில் இரண்டு கடையுடன் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: A.உதயன்

077 465 4577, 077 491 1078

## வேலையாட்கள் தேவை

கோட்டல் ஒன்றிற்கு நன்கு சமைக்க தெரிந்தவர்கள் தேவை

077 567 1997

## விற்பனைக்கு

யாழ் நகரில் உணவகம் ஒன்றில் பயன்படுத்திய நல்ல நிலையில் உள்ள தளபாடங்கள் குளிர்சாதன பெட்டிகள் மற்றும் ஏனைய பொருட்கள் விற்பனைக்கு

தொடர்பு:

077 125 8072, 071 104 1851

## விற்பனைக்கு

மணியந்தோட்டம் உதயபுரம் கடற் கரைக்கு எதிரே அமைந்துள்ள ஆறு பரப்புக் காணியும் முடிவுறாத இரண்டு மாடிக்கட்டமும் உடன் விற்பனைக்குண்டு.

077 516 0244, 077 975 8015

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபலமான உணவு விடுதிக்கு சுத்திகரிப்பு பணியாளர் ஒருவர் தேவைப்படுகின்றார். வயதெல்லை 45 தொடக்கம் 55 வயதுக்கிடைப்பட்ட ஆண்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:

076 650 8221 ,076 694 2199

## வேலைக்கு ஆள்கள் தேவை (பெண்)

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் இனிப்பு தொழிற்சாலைக்கு பெண் வேலையாள்கள் தேவை. தங்குமிட வசதிகள் செய்துதரப்படும்.

021 567 6767

## காணி விற்பனைக்கு

சுவேலி மேற்கு,குட்டியபுலம் வசாவிளானில் அமைந்துள்ள 86 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

077 321 1135, 076 265 6004

## சிங்களம்

G.C.E (O/L) (இரண்டாம் மொழி)
Past Paper Class
ஆரம்பம் 05.09.2020
(சனிக்கிழமை) சனி மற்றும் ஞாயிறு நாட்களில்
பி.ப 2.00 - 3.00 வரை நடைபெறும் எவரும் பங்குபற்றலாம்
உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.
விவரங்களுக்கு 0777 033 729

ஸ்ரீமான்ஸ்டர்
ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்
164, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
Science Faculty Gate முன்பாக மேல்மாடியில்

## Van For sale



Maruti Omini Van 2000 Model
800 CC Good Condition
Price 750000/=
Contact No.: 077 781 1409
077 250 3237

## விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி

இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

6வது வருடமாக இடம்பெறும் மாபெரும் விசேட செயலமர்வு
A/L 2020 தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கானது.....

| காலம் | நேரம் | பாடங்கள் |
| --- | --- | --- |
| September 5,6,7 | 8.30 - 2.30 | பொறியியல் தொழினுட்பவியல் உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் |
| 12.13.14 | 8.30 - 2.30 | தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 19.20.21 | 8.30 - 2.30 | ICT, விவசாய விஞ்ஞானம், கணிதம் (7), புவியியல், ஊடகக்கல்வி |

கடந்த வருடம் 3A பெற்ற எமது மாணவர்கள்
சி.சிந்துஜன் - யாழ் - 1
எ.எம்.மெரீனா - ஹற்றன் - 1
ஸ்ரீ.கஜப்பிரியன் - யாழ் - 2
அ.வைஷ்ணவன் - யாழ் - 3

இச் செயலமர்வு தொழினுட்பப் பிரிவில் 8 வருட கற்பித்தல் அனுபவமுள்ள விஸ்டத்தின் சிறப்பு ஆசிரியர் குழுவின் நெறிப்படுத்தலில்
COVID-19 தாக்கத்தால் இழந்த கல்வியை ஈடு செய்யும் வகையில்
இறுதிப் பரீட்சையை வெற்றி கொள்ளக்கூடிய இலகு நுட்ப முறைகளுடன் A/L 2020 பரீட்சைக்கு எதிர்பார்க்கும் விடயப் பரப்பை முன்னிலைப்படுத்தி
தொழினுட்பப்பிரிவின் அனைத்து பாடங்களும் நடைபெறும். விடயக் கையேடுகளும்,எதிர்பார்க்கை வினாக்களும் கற்றலை இலகுபடுத்தும் வகையில் தொகுத்து வழங்கப்படும்.
2020 October இல் A/L பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் பயன்பெறும் வகையில் நடைபெறும் இச்செயலமர்வைத் தவறவிடாதீர்கள்.
தொழினுட்பப் பிரிவில் வெற்றிபெற்ற தமிழ்மொழி மூல மாணவர்களின் ஒரே தெரிவு விஸ்டம் தொழினுட்பக் கல்லூரி மாத்திரமே.
முற்பதிவுகளுக்கு:- ☎021 221 7860 / 077 248 7774
(சிரமமின்றிக் கையேடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முற்பதிவுகளை மேற்கொள்ளவும்)
☆☆☆☆☆☆ தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு இதுவே எமது இலக்கு ☆☆☆☆☆☆

## IELTS 6.5 புள்ளிகட்கு மேல் பெற வேண்டுமா



- கொழும்பு / கண்டியிலிருந்து வருகை தரும் அனுபவ பயிற்சியாளர்களால் யாழ்ப்பாணத்தில் பயிற்றப்பட்டு தரமுயர்த்தப்படுவீர்கள்
- இடம்: JaffnaTilko City hotel (யாழ் பிரதம தபாலகத்திற்கு அருகில்)

ஆரம்பம்: 05 செப்ரெம்பர் 2020

- ஒரு வகுப்பில் 20 பேர் மட்டுமே
- முன் பதிவு அவசியம்.

உலகின் அனைத்து நாடுகளின் பல்கலைக்கழக அனுமதியுடன் STUDENT VISA பெற

Aspirations Education
ASPIRATIONS EDUCATION
204,SIR PON RAMANATHAN ROAD, JAFFNA.
077 477 5343 / 076 824 5385 / 021 221 5232




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.